பொன்னி

மலர் 8 1—7—54 இதழ் 7

690
6 AUG 1954
MADRAS

விலை
அணா
4

சிறந்த புதிய வெளியீடுகள்!

★

நினைவுச்சின்னம்	இளமைப்பித்தன்	... ரூ. 1– 0–0
கடல் முத்து	எஸ். ஆறுமுகம்	... ரூ. 1– 0–0
உலக அரங்கில்	டி. கே. சீனிவாசன்	.... ரூ. 1– 0–0
தபாலாபீஸ் விநோதங்கள்	க. சண்முகசுந்தரம்	.... ரூ. 0– 8–0
கம்பன் கெடுத்த காவியம்		... ரூ. 0– 4–0
இலக்கியச் சந்தையில்	மு. அண்ணாமலை	... ரூ. 0– 8–0
வீடும் விளக்கும்	'சுகி'	... ரூ. 0– 8–0
தாஜ்மஹால்	நா. பாண்டுரங்கன்	.... ரூ. 0– 8–0
கொடிமுல்லை	வாணிதாசன்	.... ரூ. 0–12–0
இரு கதைகள்	நாரா நாச்சியப்பன்	.... ரூ. 0 –4–0

வணிகர்கட்குத் தக்க கழிவு உண்டு.

★

விவரங்கட்கு:

பொன்னி லிமிடெட்

111, பவழக்காரத் தெரு : : சென்னை – 1.

1—8—54 முதல் "பொன்னி" தரும் புதிய சுவையான

மேலும் சினிமா பற்றிய விமரிசனங்கள், செய்தித் துணுக்குகள், இலங்கைக் கடிதம் முதலிய புதிய பகுதிகள் இடம் பெறுகின்றன. உங்கள் கேள்விகளுக்கு "வணங்காமுடி" பதிலளிப்பார். இன்னும்

— பலப்பல —

உங்கள் இதழுக்கு முன்னதாகவே பதிவு செய்துகொள்ளுங்கள்.

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்)

Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

கர்ப்பதடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)

Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, (   ) MADRAS-1.

பிராஞ்ச் 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.

சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES. 82 MAIN ST. கொழும்பு-11.

மணமகள் தேவை

பி. ஏ. பாஸ் செய்துள்ள ஒரு 25 வயது கிறிஸ்தவ இளைஞருக்கு ஓரளவு படிப்பு, வருவாயுடன் கூடிய மணமகள் தேவை. எம்மதத்தினராயினும், எந்த இனத்தினராயினும் அக்கறையில்லை. தாய் தந்தையர், உடன் பிறந்தோர், வயது, சொத்து முதலிய விபரங்களுடன் புகைப்படமும் அனுப்புக.

திரு. பிள்ளை,
C/o
தபால் பெட்டி எண் 1795,
சென்னை-1.

கொக்—சாஸ்திரம்

தனிமையில் படிக்க —ஆண் பெண் உறவு குறித்த படங்களும், நீங்கள் இதுவரை படித்திராத பல உபயோகமான விஷயங்களும் அடங்கியது.

விலை ரூ. 3. தபால் செலவு ரூ. 1.

படுக்கையறைப் படங்கள்

பெண்களின் அந்தப்புர நிலைகள் —படுக்கையறைக் காட்சிகள்— அழகு இன்னும் வேறு பல காண விரும்புகிறீர்களா? அப்படியானால் இன்றே ஆர்டர் செய்க. 50 படங்கள் கொண்ட செட் 1-க்கு ரூ. 5.

தபால் செலவு ரூ. 1.

இரண்டும் ஆர்டர் செய்தால் ரூ. 8.

H. H. Stores (P. M.)
Post Box 51, MEERUT.

அட்டைப்பட விளக்கம்:

சிரித்த முல்லை

அவனே அழகன்—சிற்பக் கலையில் வல்லவன். கலைக் கோயில் அமைக்க சொந்த நாட்டைவிட்டுப் புறப்பட்டான். வழிநடைச் சிரமத்தைப் போக்கிக் கொள்ள அங்கோர் சோலையில் தங்கினான். அங்கேதான் பூத்துக் குலுங்கும் அந்தப் புது மலரைக் கண்டான்.

கண்ணின் வழியே கருத்தில் புகுந்த அழகு மயிலாளின் நீலக் கண் வீச்சில் தன் நிலை மறந்தான். பின்பு ஒருவாறு தேறி அந்தப் பேசும் யாழை விட்டுச்செல்ல மனமின்றி எட்டி நடந்தான். செய்யுந் தொழிலிலெல்லாம் சிந்தனையைக் கெடுத்து ஊணையும் உறக்கத்தையும் மறக்கச் செய்தது சிரித்தாடும் முல்லைக்கொடியாளின் எழில் முகம்.

நள்ளிரவு. எங்கும் அமைதி. கலைஞனோ கொடிமுல்லையின் நினைவால் வாடினான். பார்க்குமிடமெங்கும் பட்டுத் தெறித்தது, அன்று பார்த்த பாவையின் பளிங்கு உருவம். பலநிற வர்ணத்தைக் குழைத்தெடுத்து ஓவியம் தீட்டினான் அந்த செதுக்காத சிலையை. பரிவொடு பார்த்துப் பார்த்துக் களித்தான். களிப்பின் ஒலியால் உறக்கம் விட்டெழுந்த நண்பன் இக்காட்சியைக் கண்டு "ஆ ஆ! அச்சடித்துவிட்டாயே! நமது நாட்டுக் கொடி முல்லை இளவரசியாளை...." என்று பண்பாடி மகிழ்ந்தான்.

பாரதிதாசன் பரம்பரைக் கவிஞரான வாணிதாசன் அவர்களின் கொடிமுல்லை என்ற காவியத்தில் உருவாகி, நமது ஓவியரின் கைவண்ணத்தால் பொன்னியின் மேலட்டைப் படமாக காட்சிக்கு வந்திருக்கிறாள் சிரித்த முல்லை.

பொன்னி

பொருளடக்கம்

மலர் 8	ஜூலை 1, 1954.	இதழ் 7

திருவள்ளுவர் ஆண்டு 1985
ஆனித் திங்கள் 17-ம் நாள்

அட்டைப்பட விளக்கம் 3
கார்ட்டூன் 4
தலையங்கம் 5
அந்த நாள்! ... 9
வானததின் நீலம் ... 12
எந்த நாளோ! 15
செய்தித் திரட்டு ... 16
அச்சாணி ஆடுகிறது! ... 17
சாக்கடையிலிருந்து ... 19
கவந்தன்! 23
சிரி, வள்ளி! 25
என்றும் வேண்டும் 32
விடியா இரவு 33
அன்றும் இன்றும் ... 46
ஓடிப்போனவள் 49
விநோத மண முறைகள் 57
குற்றவாளி! ... 59
நமது மருத்துவர் 63

★

விலை 4 அணா

"பொன்னி"யில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் நிகழ்ச்சிகள் யாவும் கற்பனையே. கட்டுரையாளர்களின் கருத்துக்கு — ஆசிரியர் பொறுப்பல்ல. —

சிவஞானம் சிந்திய கண்ணீர்!

செல்வீர் சிதம்பரம் நோக்கி...!

கதிரவன் ஒளி பரப்பத் தொடங்கி விட்டான்; காரிருள் கண்டஞ்சியோடுகின்றது. மூடுபனி விலகுகின்றது. மூரல் முறுவல் காட்டி பகலவன் பல் கதிர் விரிக்கத் தொடங்கிவிட்டான். ககனத்தை மறைத்த கார்முகில் கலைந்து செல்கின்றது, விண்ணை மறைத்த வெண்முகில் வெருண்டோடி மறைகின்றது; வெண்மதி தோன்றுகின்றது, தண்ணொளி பரப்புகின்றது. ஒளி பரவுகின்றது இருள் ஓட்டப்படுகின்றது.

தில்லை நடராசன் திருப்பதியிலே—நந்தனாரை நாத்திகன் என்றல்ல—தீண்டத் தகாதவன் தீயன் என்ற காரணத்திற்காகத் தீயிலிட்டுக் கொளுத்திய அந்தத் தில்லைப் பதியாம் சிதம்பரத்திலே மாநிலத் தமிழாசிரியர் மாநாடு கூடுகிறது 11—7—54ல். மகிழ்ச்சியடைகின்றோம் இருளழிந்து ஒளி பரவவேண்டும் என்ற எண்ணத்தால்.

வையமீன்ற தொல் மக்களுளத்தினில் பைய நாவை அசைத்த பழந்தமிழ்—அதனைப் படைத்திருக்கும் பைந்தமிழ் நாடு—அதனைப் பயின்று பயிற்றும் பைந்தமிழாசிரியர்—பழந்தமிழ்ப் பண்பாட்டாளர் மாநில மாநாடு கூட்டுகின்றனர் மகிழ்வுறுகின்றோம்! தேமதுரத் தென்றல் வீசும் என்று திரும்பிப் பார்க்கின்றோம்!

நமது தமிழாசிரிய நண்பரொருவர் நவின்றார். இரு ஈட்டி முனைகள் இருபுறமும் எதிர்த்து நின்று பாய்கின்றன. நாங்கள் இடையிலே நிற்கின்றோம்! முன்னேறினால் பின்னே......பின்னேறினால் முன்னே பாய்கிறது ஈட்டி.

"புளுகு மூட்டை பாடும் புலவர்கள் புத்திசாலித்தனத்தைப் புகுத்துவதில்லை" என்றியம்புகின்றது மக்கள் மன்றம். "பகுத்தறிவு விளக்கம் கூறி பக்தி மார்க்கம் பரவாமல் தடுக்கின்றது இந்தப் பண்டிதர் கூட்டம்"

என்று சாடுகின்றது அரசியல் மன்றம். இதற்கிடையில் தமிழாசிரியர்களாக நாங்கள் என்று நண்பர் கூறியதில் ஒரு பகுதி உண்மையே, உணர்கின்றோம். நண்பர் நவின்றதிலே நியாயம் இல்லாமல் இல்லை.

இந்த நிலையிலும் மாநிலத் தமிழாசிரியர் மாநாடு கூடு கின்றதென்றால் அது மகத்தான செயல் திட்டங்களை வகுக்கும்—மறத்தமிழர் வாழ்விற்கு மதி நலமாம் மருந் தளிக்கும் என்ற நம்பிக்கையால் மகிழ்கின்றோம்! பூத்த முல்லை புதுமணம் தராமல் போகாது என்பதால் பூரிக் கின்றோம்! சேர நாட்டிளஞ் செந்தமிழ்ச் சிங்கங்காள்! பாண்டி நன்னாட்டுப் பைந்தமிழ் ஏறுகாள்! சோழ வள நாட்டு இளம் காளைகாள்! செல்வீர்; சிதம்பரம் நோக்கி; செய்வீர் தமிழ்ப் பெரும் பணி என வேண்டுகின்றோம்.

மாநாட்டிற் கலந்துகொள்ளும் மதிப்பிற்குரிய தமிழாசி ரியர் அவர்களே! நீங்கள் தில்லை சென்று, சிதம்பரநாதனி டம் அல்ல கனம். சி. சுப்பிரமணியம் அவர்களிடம் வரம் வேண்டுங்கள். வரமருள திருவாளர் காத்து நிற்பர்....

எது வேண்டும்? நரகம் வேண்டுமா? நல்லின்ப வீடு வேண்டுமா? எது வேண்டும்? பேரின்ப வீடா........! பெருந்துன்ப நரகமா? இன்பமா? துன்பமா? எது வேண்டும்? உடனடியாகக் கேட்டுப் பெற்று விடுங்கள்.

விட்டால் கிட்டாது வேண்டியதைப் பெற்று விடுங் கள்.

...மதியமைச்சர் அவர்கள்! இந்த மாநிலத்திலே பெருந்துன்ப நரகத்தை மட்டும் உண்டாக்கியிருக்கிறார். பேரின்ப வீட்டை அவரால் உண்டாக்கத் தெரியாமல் இல்லை. ஆனால் உண்டாக்க மாட்டார்—ஏன் தெரியுமா! நாத்திகர் நிறைந்த இந்த நாட்டிற்கு நரகம் ஒன்றுதான் தேவை! என்பதை அறிந்தவரல்லவா? இந்த அமைச்சர்.

அவர் பேசியிருக்கிறார் ஆ. நாகூரில் (பொள்ளாச்சிக் கருகில்) திருவள்ளுவர் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து — "வள்ளுவரைப் பின்பற்றுவதாகக் கூறிக் கொண்டு உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்கள் செய்துவரும் நாத்திகப் பிரசாரத்திற்கு நான் வருந்துகின் றேன். மொழி கலை ஆகியவை வளர வேண்டுமானால் தெய்வபக்தி கடவுள் நம்பிக்கை ஆகியவை இன்றியமை யாதன. தெய்வத்தைத் தொழுவது அடுத்த பிறவியில் சுவர்க்கம் கிடைப்பதற்கல்ல. தெய்வம் தொழாது நாத்

திகப் பிரசாரம் செய்து பள்ளிக் குழந்தைகள் மனதை மாற்ற முயலும் தமிழாசிரியர் இந்தப் பிறவியிலேயே நரகம் அனுபவிப்பார்கள். தமிழாசிரியர்கள் கீழ்நிலைக் குக் காரணம் அவர்களும் அவர்கள் நாத்திகப் பிரசார முமே'' எது நாத்திகம்? இனித்திடும் தனித்தமிழை இளைஞர்கள் ஏற்றிடச் செய்வதா? மூவேந்தர் வழிவந்த நமக்கு மொழியே நாட்டின் விழி என்பதா? அன்பே இறைவன் அறிவே ஆண்டவன் மக்கள் பணியே மாண்புறு திருப்பணி என்பதா?

அமைச்சர் அகராதிப்படி அனைத்துமா நாத்திகம்? எது நாத்திகம்? இமய முதல் குமரிவரை ஒரு மொழி வைத் துலகாண்டவன் எம் சொந்தக்காரன் என்பது நாத்திகம்? வடவரை வணக்கி வான்தோய் இமயத்திலே குடவரை கோமான் கொடி நாட்டினுன் என்பது நாத்திகம்,

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற திருமூலர் திருமந்திரத்தைத் திருப்பிக் கூறுவது நாத்திகம்.

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்—அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

என்ற வள்ளுவர் வாய் மொழியை வளர்த்து வருவது நாத்திகம்.

''சடங்கு வேறு சமயம் வேறு'' உள்ளக் கோயிலே உயர்ந்த கோயில் என்பது நாத்திகம். தெரியாத திரு வள்ளுவருக்குத் தவருன முறையிலே படமெழுதி அமைச் சரைக் கொண்டு திறப்பது தவறு என்று உரைப்பது நாத்திகம்.

ஆண்டவன் ஆலயத்திலே அன்னை மொழி முழங்க வேண்டும். அன்னைத் திருநாட்டினை அருந்தமிழ் மொழி ஆளவேண்டும் என்பது நாத்திகம்.

மண்டலம் ஆளவந்தார் மக்கட் பணி செய்க 'மகேசு வரனுக்காக வக்காலத்து வாங்கவேண்டா மென்றுரைப் பது நாத்திகம்.

பிறப்பிலே வேற்றுமை காண்பது பேதமையின் பாற் பட்டதென்பதைப் பரப்புவது நாத்திகம்.

''சாதிகள் இல்லையடிப் பாப்பா'' என்ற பாரதியின் பாட்டைப் பரப்புவது நாத்திகம்.

இத்தனையும் நாத்திகம் என்ருல் ஆத்திகம்தான் எது? வீடணர்களாகி அண்ணனைக் கெடுத்து அடுத்துக் கெடுப்

போனை ஆதரிப்பதா? அன்னை மொழியை இகழ்ந்து அடுத்த மொழி புகுத்தும் அற்பர்களை வாழ்த்துவதா? ஆண்டவன் நாமம் கூறி அக்கிரமம் பல புரிவதா?

இதுதான் ஆத்திகமா? என்று நம்மைப் பார்த்துக் கேட்கின்றனர் நண்பர்கள்........நாமென்ன சொல்வோம் ஆனால் ஒன்று மட்டும் கூறுகின்றோம். பட்டமும் பதவியும் மணல்மேடு என்பதை அமைச்சர் உணர்தல் வேண்டும்.

இந்த உலகத்திலேயே தமிழாசிரியர்கள் நரகத்தை அனுபவிப்பார்கள் என்பதெல்லாம் ஊதியத்தை உயர்த்த மாட்டேன், அதுமட்டுமல்ல குறைக்கவும் செய்வேன் இல்லாத தொல்லைகளை இவர்களுக்குக் கொடுப்பேன் என்பதன்றி வேறென்னதான் பொருள். இவரால் வேறென்னதான் செய்ய இயலும். நாடாள வந்தோருக்குக் கேடு காலம் கூடாது.

ஆண்டி அரசனான கதை ஆகக் கூடாதென்பதே நமது விருப்பம். மணிமுடி தரித்தோர் பலர் மண்ணாகிப் போன காட்சி சரியாக மறையக்கூட இல்லை. அதற்குள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டோர் மக்கள் மனம் பதறச் செய்தால் மண்டலம் ஆள வந்தோர் என்ன ஆவர் என்பது நமக்குத் தெரியாமலில்லை. நமக்குத் தெரிந்தால் மட்டும்போதாது நாடாள வந்தோரும் தெரிந்திருக்க வேண்டும்.

> " இன்னா செய்தாரை யொறுத்தல் அவர் நாண
> நன்னயஞ் செய்து விடல் "

என்ற வள்ளுவன் வாய்மொழிக் கேற்ப தமிழனை தமிழாசிரியர் இனத்தை எள்ளி நகையாடும் கல்வி அமைச்சரை மாநாட்டுத் திறப்பாளராக ஏற்றது போற்றத்தக்கதே என்பரோ அன்பர் என்ற ஐயப்பாடு எழத்தான் செய்கிறது.

கனம் கல்வி அமைச்சரே! திருவள்ளுவர் திருவுருவத்தைத் திறந்து வைத்த பெரியோரே! தாங்கள் திருவள்ளுவர் திருவுருவத்தைத் திறந்து வைத்தால் மட்டும்போதாது. திருவள்ளுவர் உள்ளத்தைக் கொஞ்சம் திறந்து காணுங்கள்....காலம் கிடைக்கா விட்டால் கீழே காட்டியவற்றையாவது கண்டு தெளிவுறுங்கள்.

> " தெரிதலும் தேர்ந்து செயலும் ஒரு தலையாய்ச்
> சொல்லலும் வல்ல தமைச்சு "

[கதையமைப்பையோ, கற்பனைக் கருத்துக்களையோ, சொற்றொடர்களையோ எடுத்தாள எண்ணுவோர் ஆசிரியர் தம் இசைவு பெறல்வேண்டும்]

திருப்புக் காட்சி 22

[இடம்: நீலகிரி........செங்குட்டுவன், சஞ்சயன் முதலியோர்.]

செங்கு: போர் என்றால் பொங்கு தேடும் ஆரியர்கள் மறத் தமிழர் வீரத்திலே மாசு கற்பித்தனராம் அந்த மடையர்கள்.... .... புதுப்பாடம் கற்பிக்கப் புறப்பட்டுவிட்டது நமது படை, பொன்னி யாற்றுப்படை கங்கையாற்றுக் கரையிலே போர்க்களம் அமைத்து விட்டது... ...நூற்றுவர் கன்னர்க்கு இதனைச் சாற்றுக.... ....கங் கைப் பேரியாற்றைக் கடக்க வங்கப் பெருநிரை அமைத்தால் அதுவே போதும்!

சஞ்சயன்: மதுவுண்ட மயக்கத்திலே மதியிழந்து கூறி யிருப்பர்.

மகிழ்வூட்டி: இல்லை.... ....மதுவுண்ட மயக்கத்திலே அல்ல.... மதி செய்த சதியிலே... ....

செங்கு: என்ன.... ....!

மகிழ்வூட்டி: மன்னர் மன்ன! இதனைக் கேட்டருள்! காவிரி நாட்டானை கங்கை நாட்டான் இகழ்ந்ததாக நமக்கு அறிவித்தவர்கள் யார்?

வில்லவன்; இமய மலையில் வாழும் அடிகள்... ....இமயத் தாபதர்.

மகிழ்வூட்டி: அல்லன நீக்கி நல்லனவாற்ற வேண்டிய ஆரிய முனிவர்கள். கொள்கையை விடுத்து நம் நாட்டில் புகுந்து கோள் மூட்டவேண்டிய காரணம்? ஆண்டவன் அருள் நாடும் கூட்டத்தார் நாட்டில் அமைதியைக் காண்பதா? அமைதியின்மையை உண்டாக் குவதா?... ...

வில்லவன்: அப்படியென்றால்.......

மகிழ்வூட்டி : இமயத்தாபதராக இங்கு வந்தோர் பசுத்தோல் போர்த்திய புலிகள்… ….

வில்லவன் : என்ன ?

மகிழ்வூட்டி : ஆம் ! நான் கூறுகின்றேன் கேளுங்கள் : மங்கை யொருத்திக்கு மாலை சூட்டி வடநாட்டு மன்னர்கள் மகிழ்ந்த நேரத்திலே

காட்சி 23

[இடம் : கங்கைக் கரை மணப்பந்தல் : கனக விசயன் முதலானோர் வீற்றிருக்கின்றனர்.]

கனகன் : களங்கம்! தென்னாட்டானுக்கு வட நாட்டான் சிந்து பாடினான் என்பது நமது புகழுக்கே களங்கம்…. ….மடியாத மாசு…. அது மாறவேண்டும். இல்லை ; மாற்றப்பட வேண்டும்.

விசயன் : ஆம்! அதற்கு ஒரே வழி போர் போர் போரேதான். தமிழ் நாட்டான் நம் நாட்டைத்தான் பணியச் செய்துவிட்டான்……..

கனகன் : நாம் தென்னாடு சென்று அவர்கள் திமிர்வாதம் போக்கவேண்டும்.

உருத்திரன் : ஆம் இமயத்திலே பறக்கும் தமிழ்க்கொடி இறக்கப்பட வேண்டும். பொதிகையிலே நமது கொடி—நமது வெற்றிச் சின்னம்—பொறிக்கப்பட வேண்டும், தமிழரை வெற்றிகொள்ளும் அந்த நாள் நமது பொன்னாள்! அதற்கு ஒரே வழி நாம் அனைவரும் ஒன்றுசேர வேண்டும்…. …போர் புரிய வேண்டும்… …. அந்தப் புல்லர்களைத் தலைசாய்க்க வேண்டும்.

சித்திரன் : நடைபெறக்கூடியதல்ல

எல்லோரும் : என்ன சொன்னாய்!

சித்திரன் : உண்மையைத்தான் சொன்னேன். பொறுமையாகப் புகல்வதைக் கேளுங்கள்—ஒரு புது வழி…….புத்திசாலித்தனமான வழி… ….

கனகன் : என்ன வழி ?

சித்திரன் : இமயத்தாபதர் வேடத்தில் நமது ஆட்களை அனுப்புவோம் செந்தமிழ் நாட்டாரை இந்த நாட்டார் இகழ்ந்ததாகச் செப்பச் செய்வோம்……சீறியெழுவர் செந்தமிழ் நாட்டார், சிங்க ஏறுகளென இங்கு தோன்றுவர்…. …கங்கைக் கரையிலே கால்வைத்ததும் எதிர்ப்போம், அழிப்போம்! கங்கையாற்றிலே குருதி நீர் கால் கொண்டோடச் செய்வோம்.

விசயன் : வெற்றி பெறச் சரியான குறுக்கு வழிதான்.

சித்திரன் : குறுக்கு வழி மட்டுமல்ல வேலையும் சுருக்கம். செந்தமிழ் நாட்டிலே சென்று வெல்வதினும் வந்தாரை வென்று வாகை சூடுதல் எளிதாக முடியும்…….

கனகன்: இமயத்தாபதர் எழட்டும்... ....செங்குட்டுவன் செவிகளிலே நமது இன எழுச்சிக் குரல் ஒலிக்கட்டும். ஆரியர்களால் இந்த அகிலத்தையே, தமது அறிவுத் திறனல் ஆளமுடியும் என் பதை அறியட்டும்.... ....சூழ்ச்சித் திறனல் சொர்க்கவாசலையே விலைக்கு வாங்குவர் என்பதை அந்தச் சேரன் உணரட்டும்.

காட்சி 24

[இடம்: நீலகிரி, செங்குட்டுவன் முதலியோர்]

மகிழ்வூட்டி: நடந்தது இதுதான்.... ... ...இதனை ஆராய்ந் துணராமல்.... ....

சஞ்சயன்: உண்மையாகவா?

மகிழ்வூட்டி: பின் என்ன! பொய்யா!

வில்லவன்: மகிழ்வூட்டியின் மதிநலம் சிந்தனைச் செல்வம் தான்.

செங்கு: எப்படியிருந்தால் என்ன சஞ்சயா, நீ சென்று ஆவன புரிக. (சஞ்சயன் செல்லல்)

பணியாள்: மன்னர் மன்ன! வாழ்க! தென்னர் இட்ட திரை யொடு கஞ்சுகமார்கள் இங்கே வந்துளர்... ....

செங்கு: வரச்சொல். (பணியாள் சென்றதும்)

[தூதர்களில் ஒருவன் உள்ளே வந்து]

தூதர்: மன்னர் மன்ன! வாழ்க! தென்னரிட்ட திரைப் பொருள்கள் முத்தும், சந்தனமும் பெற்று வந்தோம்!

செங்கு: நமது மகிழ்ச்சியை தென்னர்க்கு தெரிவிக்க (வில்ல வன் கோதையைப் பார்த்து) ....கங்கை பேரியாற்றை நோக்கி புறப்படட்டும் நமது படைகள்.

வில்ல: மன்னர் விருப்பம்.

மகிழ்வூட்டி: என் விருப்பமும் அதுதான்.

வில்ல: எது?

மகிழ்வூட்டி: கங்கையைக் கடந்து கனகவிசயர் தலையிலே கல் சுமத்தி.... ...

வில்ல: ஓ அப்படியா?

(தொடரும்)

வானத்தின் நீலம்

— கண்ணரசு —

வானத்தின் நிறம் என்ன வென்று கேட்டால் சிறு குழந்தையும் நீல நிறம் என்று கூறும். ஆனல், நீல நிறம் அதற் கெவ்வாறு வந்ததென்று நம்மை வினவுமாயின், நாம் திகைக்கத் தான் வேண்டி யிருக்கின்றது. குழந்தையுள்ளம் என்ன அறியும்! அது ஒவ்வொரு பொருளைப் பற் றியும் கேட்டுத்தான் அறிந்து கொள்ள முடியும்; அறிந்து கொள்ள வேண்டும். ஆனல் இப் பொழுது நாமே, வானத்திற்கு நீல நிறம் எப்படி வந்ததென்று அறியாமல் இருக்கும் பொழுது என்னவென்று கூறுவது? சிலர் சொல்லலாம், நம்முடைய வீடு களில் விறகு எரிக்கிறேமல்லவா, அப்பொழுது கிளம்பும் புகையா னது மேலே சென்று நீலநிறமா கத் தோன்றுகிறதென்று. இத் தகைய பொருளற்ற பொருத்த மற்ற செய்தியைச் சொல்லிக் குழந்தையின் அறிவை மழுப்பி அதை வளரவிடாமல் நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டு மனதை அமைதிப் படுத்திக் கொள்கிறேம். இது நேர்மை யான முறையா? நேர்மையற்ற முறையென்றுதான் எல்லோரும் கூறுவார்கள். தவறுடைய விடை யைக் கூறுவதைவிடத் தெரியா தென்று கூறிவிடுவதே மேலா னது அல்லவா? ஆனல், நமக்குத் தெரியாதென்று சொன்னல் அதையோர் இழிவாகக் குழந்தை நினைத்துவிடுமென்று எண்ணுதல் மிகவும் தவருன எண்ணமாகும். இவ் வளவு சிக்கல்களைக் கொடுக்கும் இதை என்னவென்று விஞ் ஞானக் கண் கொண்டு நாம் சற்று நோக்குவோம்.

வானத்தின் நீலநிறத்தை விளக்க எவ்வளவோ வகை வகையான விளக்கங்களைக் கூறி ஞர்கள். ஆனல் அவையாவும் விஞ்ஞானிகளின் மனதுக்கு ஏற்றதாக இல்லாததால், அவ் விளக்கங்கள் யாவும் கைவிடப் பட்டன. நியூட்டன் (Newton) என்னும் விஞ்ஞானி, வானத் திலே தங்கியுள்ள தெளிபொருற் துகள்களால் (Transparent Particles) பிரதிபலிக்கப்பட்ட (Reflected) ஒளிக்கதிர்கள் "இண் டர்பியரன்ஸ்" (Interference) என் னும் நிகழ்ச்சிக்குட்பட்டு நீல நிறத்தைக் கொடுக்கின்றன எனக் கூறினர். பிறகு, ஒளியா னது மெல்லிய தெளிபொருற் படலங்களினூடே (Sheets) நுழைந்து வெளியேறும் போது நீலநிறம் உண்டாகின்றதெனக் கூறினர். ஆனபோதிலும் இந்த நிகழ்ச்சியால் ஏற்படும் நீலநிறம் வானத்தின் நீலத்தைக்காட்டிலும் வேறுபட்டிருந்தது. மற்றெரு "ப்ரூவ்ஸ்டர்" (Browster) என் னும் விஞ்ஞானி ஒளியானது "போலரைசேஷன்" (Polarisation) என்னும் நிகழ்ச்சிக்குட்படுவதால் ஏற்படுகிறதெனக் கூறினர், ஆனல், இவ்விரு விளக்கங்களை யாரும் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டனர். பிறகு "டிண்டல்" (Tyndall) என்பவர் 1869-ஆம் ஆண்டில் தன்னுடைய இடை விடா ஆராய்ச்சிகளின் பயனக

ஒரு சிறு உண்மையை வெளியிட்டார். இச்சிறு உண்மையை அடித்தளமாக வைத்துக்கொண்டு பின்பு, "ராலே பிரபு" (Lord Rayleigh) என்னும் விஞ்ஞானி *1871* ஆம் ஆண்டில் உண்மையும் பொருத்தமும் உள்ள விளக்கமொன்றை வெளியிட்டார்.

விண்ணிலே பரந்து கிடக்கும் சிறிய சிறிய தூசித்துகள்கள், நீர்த்துளிகள் இவைகள் மீது ஒளி மோதிச் சிதறும்போது நீல நிறம் உண்டாகின்றதென "டிண்டல்" என்னும் விஞ்ஞானி கூறினர். ஆனல் இந்த நீல நிறம் வானத்தில் தூசித்துகள்கள், நீர்த்துளிகள் இல்லாத மிக உயர்ந்த இடங்களிலும் கூட சிறிதும் மாறுபடாமல் இருப்பதைக் கண்டனர் விஞ்ஞானிகள். இதனுல் இக் கொள்கையுங் கூட கைவிடப்பட ஏதுவாக இருந்தது. ஆனல் இக்கொள்கையின் உதவியால் "ராலே" விஞ்ஞானி நீல நிறம் உண்டாவதற்கு தூசித்துகள்களும் மேகங்களும் அதாவது நீர்த்துளிகளும் தேவையில்லையென்றும் விண்ணில் உள்ள காற்று மூலகங்கள் (Air molecules) மட்டும் இதற்குக் காரணம் என்றும் ஆய்ந்தறிந்துக் கூறினர். ஆதலின் வானத்தின் நீல நிறம் ஒளி காற்று மூலகங்களின் மீது மோதிச் சிதறுவதால் உண்டாகின்றதென நாம் அறிகின்ருேம்.

பகலவனது ஒளி விசும்பின் (Ether) வழியாக வரும் பொழுது சிதறப்படுவதில்லை. ஆனல், வானத்தின் காற்று மண்டலத்தை அடைந்தவுடன், உயர்ந்த இடங்களில் தூசித்துகள்கள், நீர்த்துளிகள் உதவியாலும் ஒளி சிதறப்படுகின்றது.

அறிவிப்பு

சந்தா, ஏஜென்ஸி விபரங்களுக்கும், மணி ஆர்டர், போஸ்டல் ஆர்டர், செக் முதலியவைகள் அனுப்புவதற்கும்,

பொன்னி லிமிடெட்

111, பவழக்காரத் தெரு,

சென்னை—**1.**

என்று குறிப்பிடவும்.

இவ்வாறு ஒளி சிதறப்படும் பொழுது ஒளியில் இறுக்க (Light Intensity) மாறுதல்கள் ஏற்படுகின்றன. இவ்விறுக்க மாறுதல்கள், ஒளியின் சிதறும் முன் உள்ள, சிதறிய பின் உள்ள அலை நீளங்களுக்குத் தொடர்புடையவைகளாய் இருக்கின்றன. ஆதி ஒளியின் (அதாவது சிதறப்படா முன் உள்ள ஒளியின்) இறுக்கத்திற்கும், சிதறப்பட்டபின் உள்ள ஒளியின் இறுக்கத்திற்கும் உள்ள "தகவு" (Ratio) 'குறிப்பிட்ட' நேர்விகிதத்தில் உள்ளது என "ராலே" கூறுகின்ருர். எடுத்துக்காட்டாக ஒளியின் அலைநீளம் 4 எனக் கொண்டால், ஆதி ஒளியின் இறுக்கத்திற்கும், சிதறப்பட்ட (Scattered) ஒளியின் இறுக்கத்திற்கும் உள்ள தகவு 256-க்கு ஒன்று என்கிற நேர்விகிதத்தில் உள்ளதெனக் கூறுகிருர். இதனின்று நாம் அறிவது ஒளியின் அலை நீளம் குறையக் குறைய சிதறப்படும் ஒளியின் இறுக்கம் மிகுதிப்

படுகின்றது. எடுத்துக் காட்டாக 4-ஐ விடச் சிறிய எண் 2-ஐ எடுத்துக் கொண்டால், முன் செய்த கணக்கின்படி ஒளியின் இறுக்கத் தகவு 16-க்கு ஒன்று என்ற நேர்விகிதத்தில் இருக்கும். இங்கே, முன்னதைவிட 16 மடங்கு பெரிதல்லவா? இதனுல் சிதறப்பட்ட ஒளியின் இறுக்கம் அலை நீளம் நான்காக இருக்கும்பொழுதைவிட, இரண்டாக இருக்கும் பொழுது பதினுறு மடங்கு இருக்கிறது. ஆகையால், அலைநீளம் குறையக் குறைய சிதறப்பட்ட ஒளியின் இறுக்கம் மிகும் என்பது கண்கூடு. மற்றும் ஒளியின் அலை நீளங்கள் 2 அல்லது 4-ஐ விட எவ்வளவு சிறியவைகளாக இருக்கின்றன என்பதை ஊகிக்கலாம். நம் கண்ணுக்குப் புலப்படும் ஏழு நிற ஒளிகளின் அலை நீளங்களில், நீல நிற ஒளியின் அலை நீளமே ஏறக்குறைய மிக மிகக் குறைவாக இருப்பதால், ஒளியானது தூசித்துகள்கள், நீர்த்துளிகள், காற்று மூலகங்கள் இவைகளின் மேல் மோதிச் சிதறும்போது நிறமாலையில் (Spectrum) உள்ள இந்த நீல நிற ஒளியே சிதறி வெளிப்படும் ஒளியில் மிகுந்து இருப்பதால் நீல நிறமாகத் தோன்றுகின்றது.

தொலைவிலுள்ள பனிமூட்டம், காடுகள் தீப்பற்றி யெரியும் போது உண்டாகும் புகை இவைகள் மங்கிய நீலமாகத் தெரிவது எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்திருக்கும். இது மேற்கூறிய நிகழ்ச்சியால் ஏற்படுவதொன்றே. மற்றும் நதியின் மேற்பரப்பில் பரந்து கிடக்கும் நுண்ணிய சுண்ணும்புத் துகள்களால் ஒளி சிதறப்பட்டு தண்ணீர் ஆழ்ந்த நீலமாகத் தெரிகின்றது. ஓர் ஒளி அலையானது ஒருதுகளின் மீது மோதிச் சிதறிய பின் அது பெற்றிருக்கும் ஆற்றல், ஆதி ஒளி அலையினின்று எடுத்துக் கொண்ட ஆற்றலாகும். இவ்வாறு, முறைமுறையே ஆதி ஒலியானது பன்முறை சிதறப்பட்ட பிறகு, தன்னுடைய ஆற்றலனைத்தும் இழந்து இறுதியில் அவ்வொளி அலை அழிந்துவிடுகின்றது. இவ்வாறு பகலவனின் ஓர் ஒளிக்கதிரானது, போதுமான தொலைவு வானத்தினூடேசென்ற பின் முழுதுமாகவோ அல்லது பகுதியாகவோ தன்னுடைய நீல, ஊதா நிறங்களை இழந்துவிடுகின்றது. பின் அவ்வொளிக் கதிர் மஞ்சளும், சிவப்பும் மட்டுமே அமைந்ததாகி விடுகின்றது. இக்காரணத்தினுலேயே, பகலோன் தோன்றும் போதும் மறையும் போதும் மேகங்கள் மஞ்சளும், சிவப்பும் அல்லது இவ்விரண்டு நிறங்களும் தொடர்புள்ள ஆரஞ்சு முதலிய நிறங்களைப் பெற்றுப் பொலிந்து திகழ்கின்றன.

விற்பனையாளர்களுக்கு :

கூடுதலாக இதழ்கள் வேண்டுவோர் அதற்குரிய முன் பணத்தொகையையும் தவருது முன் கூட்டியே அனுப்பி வைக்கவேண்டும்.

—பொறுப்பாளர்.

எந்த நாளோ!

பெரி. சிவனடியான்

செந்தமிழ் தாழ்ந்த தென்று
தெரிந்ததும் படையைக் கூட்டி
முந்தினுன் வடக்கை நோக்கி
முழக்கினுன் முரசம். போரில்
சிந்தினுன் இரத்தம், சேரன்
தேக்கினுன் தமிழர் வீரம்
அந்தநாள் உறுதி மானம்
அடைந்திடல் எந்த நாளோ !

முரசது நகரப் பின்னர்
மொழிநிறைப் புலவர் சென்றே
இருந்திடக் கட்டிலின் மேல்
இமைத்திடக் கண்ணி ரண்டும்
அரசனும் அதனைக் கண்டே
அன்புடன் கவரி ஓச்சப்
பரந்தஅத் தமிழுள் ளத்தைப்
பார்த்திடல் எந்த நாளோ !

நீதியைப் போக்கி வாளை
நீட்டினுன் பாண்டி மன்னன்
ஆதியோ டந்த மாக
அடுக்கினுள் அணங்கொ ருத்தி
ஏதினி மான மென்றே
எண்ணிட உயிரை விட்டான்
மேதினி சிறக்கும் அந்த
அரசியல் மிளிர்வ தென்னுள்?

நாதனை இழந்தோர் நாட்டில் நலிவதும், வறுமைக் கேட்டால்
வேதனை யடைந்து பெண்கள் விலைமக ளாவதும் போய்
காதலின் உயர்வைக் கண்டு களித்துநம் நாட்டி லுள்ள
மாதர்கள் முகமலர்ந்து மகிழ்ந்திடல் எந்த நாளோ !

செய்தித் திரட்டு

மதுவிலக்கு ஒழிய வேண்டுமா ?

சென்னை மாநிலத்தில் மது விலக்கின் நடைமுறை அனுபவத்தை அறிய பொது மக்களிடம் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பதுபற்றி சட்டசபையில் விவாதிக்க ஒரு உறுப்பினர் தீர்மானம் அனுப்பி இருக்கிறார்.

பள்ளிக்கூடம்
நாட்டிய அரங்கமாகிறது !

அடுத்த ஆண்டிலிருந்து மைசூர் அரசாங்கம் எல்லா பள்ளிக்கூடங்களிலும் பரத நாட்டியம் சொல்லித்தர முடிவு செய்திருக்கிறது.

கல்விக்கு ஐந்து கோடி !

கல்வி அபிவிருத்திக்காக 5 கோடி ரூபாய் திட்டம் ஒன்றை தேசிய திட்ட கமிஷன் ஏற்றுக் கொண்டுள்ளது. இத் திட்டம் அடுத்த இரண்டு ஆண்டுகளில் அமுலாக்கப்படும்.

50 ஆயிரம் பேர் பலி !

மிகக் கொடிய வியாதியான புற்று நோய்க்கு ஆண்டு ஒன்றுக்கு 50 ஆயிரம் பேர் பலியாகின்றனர் என்று புற்றுநோய் வைத்திய விடுதியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

பஞ்சாயத்துக்கு
போலீஸ் அதிகாரம் !

பெரிய பஞ்சாயத்து போர்டுகளுக்கு போலீஸ் அதிகாரங்கள் கொடுப்பதுபற்றி சென்னை அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

சீனாவில் 20 பேருக்கு
தூக்கு தண்டனை !

மக்கள் சீனாவை எதிர்த்துச் சதி செய்த 20 துரோகிகள் தூக்கிலிடப்பட்டனர் என்றும் 30 பேர் சிறையில் அடைக்கப்பட்டனர் என்றும் சீனச் செய்தி கூறுகிறது.

உழுபவனுக்கு நிலம் !

நிலத்தில் நேரடியாகப் பாடுபடும் விவசாயிகளுக்கு அரசாங்கத்துக்குச் சொந்தமான 15 லட்சம் ஏகர் நிலங்களைப் பிரித்துக் கொடுக்க ஆந்திர அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

குடுமி பள்ளிக்கூடம்

புதிதாக துவக்கப்பட்ட குடந்தை அகோபிலம் மட பள்ளியில் சேருவோர் குடுமி வைத்துக் கொள்ள வேண்டுமாம்.

பிரதமர்கள் சந்திப்பு !

இந்தியப் பிரதமர் பண்டித நேருவும், சீனப் பிரதமர் சௌ-என்-லாயும் டெல்லியில் சந்தித்து உலக அரசியல் குறித்துப் பேசினர். அதே நேரத்தில் வாஷிங்டனில் அமெரிக்க ஜனாதிபதியும், ஐசனோவரும், பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சிலும் சந்தித்து உலக சமாதானத்துக்கு வழி காண முயன்றுள்ளனர்.

தேர்தலில் காமராஜர் !

சென்னை சட்டசபைக்கு நடைபெறப் போகும் இடைக்காலத் தேர்தலுக்கு குடியாத்தம் தொகுதியில் சென்னை முதன் மந்திரி காமராஜர் போட்டியிடுகிறார். இவரை எதிர்த்து இருவர் போட்டி போடுகின்றனர். தேர்தல் ஆகஸ்ட் முதல் தேதி நடைபெற இருக்கிறது.

அச்சாணி ஆடுகிறது!

— எம். ஏ. சுவாமி —

இன்று எத்திசைத் திரும்பினும் 'விவசாயப் புரட்சி', 'நிலச் சீர்திருத்தம்', என்ற ஒலிகள் முழங்குகின்றன. ஏடுகளைப் புரட்டிடிலோ 'லால்குடியில் விவசாயிகள் வேலை நிறுத்தம்', 'அம்பையில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்', 'தஞ்சையில் மீண்டும் தகராறு'—இம்மாதிரித் தலைப்புடன் செய்திகள். எல்லா கட்சிகளும் விவசாய சீர்திருத்தம் வேண்டும் என்று பலமாகக் கூப்பாடு போடுகின்றன. அனைத்திந்திய காங்கிரசின் பொதுச் செயலாளர் அகர்வால் ஆணையிடுகின்றார், எல்லா ராஜ்ய சர்க்கார்களும் இதுபற்றி சட்டம் இயற்ற வேண்டும் என்று. காமராசர் மந்திரிசபை கூட சில திங்களில் நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப் போவதாகத் திருவாய் மலர்ந்துள்ளது. கிராமாந்திரப் பாடுபடும் மக்களோ ஆவல் மிக்குடன் மாறுதலை எதிர்நோக்குகிறார்கள். காமராசரின் இந்த 'அதிர்வேட்டை'க் கேட்டதும் பத்து ஏக்கர் சொந்த நிலமுள்ள பரமசிவன் பிள்ளையிலிருந்து பத்தாயிரம் ஏக்கர் நிலத்தைத் தன் பையில் போட்டுள்ள வடபாதிமங்கலங்கள் வரை பாம்பை மிதித்தாற்போல் பயந்து அலறுகின்றனர். இத்தனை கூப்பாடுகளும் ஆர்ப்பாட்டங்களும் பீதியும் ஏன்?

நம் நாடு ஒரு விவசாய நாடு. நம் மக்களில் பெரும்பாலோர் உழவுத் தொழிலைச் செய்தோ, அன்றி அதைச் சார்ந்தோ வாழ்பவர்கள். எனவே விவசாயத் துறையில் எது சம்பவிப்பினும் அது இன்றைய சமூகம் முழுமையுமே பாதிக்கிறது. இன்றைய நெருக்கடியின் பிரதான காரணங்களாவன :

(அ) இயந்திர வளர்ச்சியில் நாடு பின்தங்கி நிற்பதால் விவசாயத் துறையில் ஜனநெருக்கம்.

(ஆ) விவசாயத்தில் நேரடியாக ஒரு பங்கும் எடுத்துக் கொள்ளாதார் கையில் பெருமளவு நிலப்பரப்பு — உழுபவன் கையில் நிலமில்லை.

(இ) விஞ்ஞான உலகில், பழைய பத்தாம்பசலி உற்பத்தி சாதனங்கள் (மேழி, கலப்பை முதலியன)

(ஈ) பாடுபடும் விவசாயிக்குப் போதிய ஊதியமின்மை.

(உ) நீண்ட காலமாக அவர்களை அழுத்திவரும் கடன் சுமை.

இவற்றிற்கு விடை கூறுவதில் தான் இன்றைய நிலைமைக்குப் பரிகாரம் காணமுடியும்.

காந்தி சீடரான ஆசாரியபாவே கூறுகிறார் :

" இன்றைய அமைதியின்மைக்குக் காரணம் சில தனிநபர்களோ கட்சிகளோ அல்ல. விவசாயியின் நில தாகம் இன்று தீவிரமடைந்துள்ளது. சாகுபடி செய்யத் தயாராயுள்ள கோடானு கோடி விவசாயிகளுக்கு நிலம் கிடையாது. உழுபவனுக்கு நிலம் கிடைப்பதில்தான் நாட்டின் அமைதி அடங்கியுள்ளது " என்று. பிரிவினைக்கு முந்திய சென்னை மாகாணத்தில் 1931-ம் வருட சர்க்கார் கணக்குப்படி 43 சதவிகித விவசாயிகள், நில

மற்ற விவசாயக் கூலிகள். இன்றைக்குக் குறைந்தது 70 சதவிகிதத்தினராவது இருப்பர் என்பதில் ஐயமில்லை. ஆனல் திருவாடுதுறை ஆதீனத்திற்கு மட்டும் 20 லட்சம் ஏக்கர் நிலம் தமிழ் நாட்டில் உண்டு. மக்களுக்கு (இகத்தை மறந்து) மேலுலக வாழ்வின் மேன்மையை உணர்த்த வந்த ஆதினங்கட்கு, இவ்வுலகில் லட்சக்கணக்கான ஏக்கர் நிலம். இது போல் ஆண்டவன் பெயரிலும், இன்னும் தனிநபர்கள் கையிலும் ஏராளமான நிலப்பரப்பு முடங்கியுள்ளது.

ஒரு நாட்டின் செழுமை அந்நாட்டு மக்களின் வாங்கும் சக்தியையே (வருவாய்) பொறுத்துள்ளது. மக்களின் வாங்கும் சக்தி அதிகரிக்கையில்தான் நாட்டின் பொருளுற்பத்தி பெருகும்; நாடு சுபீட்சப் பாதையில் முன்னேறும். முன்னளில் மன்னராட்சி நடைபெற்றபோது கூட உற்பத்தியில் 'ஆறிலொன்று' தான் மன்னன் மக்களிடம் இறை வசூலித்தான். இது நாம் சரித்திரங்களில் படித்தது. முதியோர்கள் கூறக் கேட்டது. ஆனல் இன்ருே!

குத்தகை வார சாகுபடியாளரிடமிருந்து பல வகைகளில் நிலப்பிரபுக்களும், சர்க்காரும் உற்பத்தியில் முக்கால் பாகத்தை வசூலித்து விடுகின்றனர்—இல்லை—அபகரிக்கின்றனர். விவசாயக் கூலியை எடுத்துக்கொண்டாலோ ஆண்டில் சரிபாதி நாட்கள் அவனிடம் தாங்கொணு வறுமை. கிடைக்கும் கூலியோ மிகவும் குறைவு.

ஆட்சி பீடமேறிய காங்கிரசு ஆளவந்தார்கள் விவசாயிகளின் நிலைபற்றி ஆய்ந்துரை கூற இது வரை மூன்று விசாரணைக் குழுவினரை நியமித்தனர் — டாக்டர் குமரப்பா, ராகவேந்திர ராவ், சுப்பிரமணியம் ஆகியோர் தலைமையில். ஆய்வுக் குழுவினரே உற்பத்தியில் சாகுபடிக்காரனுக்கு இன்று கிடைக்கும் பங்கு மிகக் குறைவு என்றும், விவசாயத் தொழிலாளிக்கு குறைந்த பட்ச சம்பளம் நிர்ணயிக்க வேண்டுமென்றும், சொந்த நிலம் வைத்துக்கொள்ள வரம்பு நிர்ணயிக்க வேண்டுமென்றும், கூறியுள்ளனர். முடிவு? விசாரணை அதிகரித்ததே தவிர விவசாயியின் வேதனை தீர மார்க்கமில்லை.

எனவேதான் பாடுபடும் உழவர் கூட்டம் என்று மில்லா வகையில் இன்று போர்ப்பறை கொட்டுகிறது.

* நிலத்தில் இறங்கிப் பாடுபடும் உழவனுக்கு நிலம் வேண்டும்.
* தரிசு நிலங்களை நிலமற்ற விவசாயிக்கு கொடு.
* ஆதீனங்கள், பெரு நில மன்னர்கள் நிலத்தை நிலமற்ருேர்களுக்கு பிரித்துக் கொடு.
* சாகுபடிகாரனுக்கு உற்பத்தியில் நியாயமான பங்கு வேண்டும்.

இவைகளே இன்றைய விவசாயப் புரட்சியின் பேரொலிகள். இக் கோரிக்கைகளை ஜனநாயக வாதிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும், இன்றேல் நாடு தொழில் வளர்ச்சிப் பாதையில் ஓரடி கூட எடுத்து வைக்க முடியாது. "உழுவார் உலகத்தார்க் காணி" என்ருர் வள்ளுவர். சீனத்தின் பாதையில் நம் நாடு செல்லுமா? இயந்திரத் தொழில் வளர்ச்சிக்கு வித்திட நிலவுடமை முறையை மாற்றி முன் செல்லுமா? காலம் பதில் சொல்ல வேண்டும்.

சாக்கடையிலிருந்து

"இதயன்"

நம் நாடு, திராவிட நாடு, தீப் பொறி, விடுதலை என்று கூவி அலைந்துக் கொண்டிருந்தான், சிறுவன்.

செய்தித் தாள்களும், வார ஏடுகளும் அன்றாடம் தாங்கி வந்துள்ள செய்திகளை, சிறுகதைகளை அவன் மூலம் ஒரு அணு இரண்டணு விலையில் வினியோகமாக்கின! அவனுக்குத் தாள் ஒன்றுக்கு அரையணு காலணு கிடைக்காமல் போகாது! அந்த நடமாடும் 'செய்தி தாங்கி' உழைத்து அறுவடை பண்ணும் பலன் சொற்பமே! சாக்கடைக் கடை அம்மாகண்ணுவின் 'மொத்தை சாததுக்கு' காக்கா கடை தேயிலை கஷாயத்திற்கு—மாமுல் மொழியில் 'ஸ்ட்ராங்' ஒன்று என்று கூறப்படுவது—கட்டு 'காந்தி ஜூனியர்' பீடிக்கு.... இத்யாதி செலவுக்கு வரவு சொற்பமே! கட்டி வராது...ஆனுலும் அவன் மாய்ந்து விடவில்லை! கலங்கிப் போய்விடவில்லை! முழு அளவோ அரையளவோ—அவன் வயிற்றுப்பாடு அன்றாடம் வழி கண்டுக் கொண்டுதான் இருக்கிறது! தன் காலிலேயே தான் நிற்கிற கவுரவம் அவனுக்கு உண்டு!—யார் மெச்ச? மெச்சுகிறவர்கள் யார் அவனை?

"போடா சோமாறிப் பயலே... 'ஸ்கவுண்ட்ரல்'..........!" என்று நேற்றொருவன் அவனைக் கன்னத்தில் கொடுத்துவிட்டான்! பையனுக்கு 'ஆத்ம சக்தி' அதிகம்! போராட்ட உலகம், அவனை அந்த அளவுக்கு பண்படுத்தியிருந்தது! வாங்கிய அடியில் அவன் சுருண்டுவிடவில்லை! துடைத்துக் கொண்டான்! வாலாயம்போல "நம் நாடு, திராவிட நாடு........" என்று கூவிக்கொண்டே சென்ருன்.

ஏமாறியவன் சோமாறி என்கிருன்! மேலே இடித்து மோதியதற்காக சிறுவன் அடிபட்டுவிட்டான்! ஆனுலும் அவனுக்கு லாபமே! அவன் சகாவிடம் பறி மாறி ஓடிவிட்டது 10 ரூபாய் சில்லறையோடு கூடிய 'அன்வர் ஷூ' கம்பனியின் விளம்பரத்தோடு உள்ள பளபளவென மினுக்கிய பிளாஸ்டிக் பர்ஸ் ஒன்று! எல்லாம் கண்மூடிக் கண் திறக்கும் வேளைக்குள் நிகழ்ந்து விட்டது.

பர்ஸை பறி ஈந்தவனைப் போல 'செய்தி ஏந்தி' சிறுவன், நாலு

குழந்தைக்கு அப்பாவாகியும் மாமியார் அகமே மகோன்னத சுவர்க்கம் என்று மதிப்பு மழுங்கி இடக்கிறவன் அல்ல! காலுக்கு மேஜோடு, ரிஸ்ட் வாட்ச் ரிப் பேர் கூலி,.......இத்தியாதி பகட்டுக்கு பெண்டாட்டியிடம் கையேந்தி வாங்கி வந்தவன் அந்த சொகுசு இடத்துப் பிள்ளை அதையும் போக்கடித்துவிட்டு மைனர் நடை போட்டபடி 'டேக்ஸி ஸ்டாண்டை' நோக்கிச் சென்றது! 'பிளாட்பார வாசி' 'பேப்பர்' விற்றபடியே "ஐயா மைனர்! நான் சோமாறி.......", என்று அடித்த கொள்ளைக்குப் பூரித்துப் போனான். இன்று அவனுக்கு படேல் காகா கடையில் 'பிரியாணி' காத்துக் கிடக்கப் போகிறது.

நேற்று அந்தி நேரம்! பிரமாதமாக விளம்பரப்படுத்தப்பட்ட ஒரு சோடை படம், தனது 'செக்ஸ் அப்பீல்' சுவரொட்டி விளம்பரங்கள் மூலம் மக்களை ஈர்த்து வந்து சினிமா முன்னடி திருவிழாவாக்கியிருந்தது.

ஜனங்கள் 'ஆலையாடி' சிறுவனை வெளியே தள்ளினார்கள்! ஆனால் சக்கை போல இருக்க வேண்டுமே அவன்?

"ஒன் போர் (One four!) ஒன் போர், சார்!"..........என்று 10 அணு டிக்கட்டை விலை கூற ஆரம்பித்தான். மக்களிடையே சிக்கி நெருக்குண்டு வெளியே பிதுங்கிக் கொண்டு வந்த அவன் உடலில் அதன் சாரம் போல் வியர்வை வழிந்தது. வலை போலாகிக் கிடந்தது உடை! அவன் கூறும் 'கறுப்பு சந்தை' விலையில் கூட டிக்கட் வாங்கி விடலாம் போல் இரக்கம் ஊட்டியது அவன் தோற்றம்! எனக்கென்னமோ கொடுக்க மனதைக் காணோம்.

"வாங்கிக் கோங்க சார்! பொழுதானால் கிடைக்காது" என்று உணர்ச்சி ஊட்டினான்.

இவன் கஷ்டத்தில் "புக்கிங் கிளார்க்குக்கும்' கொள்ளையா? நான் வாங்க தயங்கினேன்.

அவன் மின்னலாகி விட்டான். மேனேஜர் வருவதை அவன் மோப்பம் பிடித்து விட்டான்!' பிறகு அவன் கிடைக்கவில்லை. கிடைக்கவில்லையா?

அவனைப்போல் ஆயிரமாயிரம் சிறுவர்கள், இளைஞர்கள் எங்கும் தட்டுப்பட்டார்கள் — சமுதாயத்தின் கீழ்மட்டத்தின் அளவுகோலாக! ஆனால் அவன் கிடைக்கவில்லை.

சினிமா எதிரில் அன்றொரு நாள் என்னை அவன் கவர்ந்து விட்டவன்! மீண்டும் கிடைக்கவில்லை! மறந்தும் விட்டேன்— காலம் ஒரு ஆண்டுக்கு மேல் பறந்து விட்டதால்.

என்ன அதிசயம்? இதோ இருக்கிறானே அந்த சிறுவன்! மண்டையில் கட்டு! முழங்கையில் முழங்காலில் எங்கும் கட்டு! சர்க்கார் ஆஸ்பத்திரியின் தாழ்வாரத்திலே அவன் முனகிக்கொண்டு படுத்திருந்தான்! அருகே ஈக்களை தவிர யாருமில்லை.

"என்னடா பையா....இதெல்லாம்?"

அவனால் திரும்ப முடியவில்லை. நானே அவன் பார்வை படும்படியாக நின்றேன்!

"அப்பாவு அடிச்சிட்டான் சாமி!"

"அது யார் அப்பாவு?"

"கேடி, பொறுக்கி, ரவுடி!"

எனக்குசிரிப்புவந்தது, மறைக்காமல் சிரித்துவிட்டேன். "ஏன் அடித்தான்?"

"சண்டை!"

"ரணகள சண்டைதான்!"

"மீரி ஆட கூப்பிட்டான் சாமி!"

மீரி, உங்களுக்குத் தெரியவில்லையே? அதுதான்; சற்று தூரத்திலிருந்து 7 கோலி குண்டுகளை உருட்டிவிடுவார்கள், குண்டுகள் ஒற்றைப் படையாக குழியில் விழுந்தால் பந்தயம் தோற்றதுபோல; இரட்டைப் படையாக விழுந்தால் வெற்றி பெற்றது போல! எங்கள் பக்கத்து 'மீரி' என்கிற விளையாட்டு இதுதான்.

"அப்புறம்?" என்று ஈயை வீசி ஓட்டிவிட்டு கேட்டேன்.

"நீங்க யாரு சாமி? காந்தி கட்சி ஆளுங்களா?"

"ஏண்டா?"

"ஒரு நாள் முழுவதும் ஆச்சி சாமி! யாரும் வந்து மருந்து போடலை சாமி!"

"ஐயோ பாவம். நான் டாக்டரண்டை சொல்லி கவனிக்கச் சொல்கிறேன்?"

மீரி ஆட்டத்தில் அவனுக்கும் அவன் தோழனுக்கும் உண்டான சண்டையில் அப்பாவு விட்ட அடி இவனை ஆஸ்பத்திரியைப் பார்க்க வைத்துவிட்டது!

டாக்டருக்கும் எனக்கும் வாக்குவாதமே தொடங்கிவிட்டது. "நீங்கள் நாய் வாலை நீட்டுகிறீர்கள்!" என்ருர்,

"அவனை படிக்கப் போட்டு, ஒரு தொழிலை வேலையை காட்டி முன்னுக்கு வரவிட்டால் என்ன? நானும் வாழ்க்கையில் சொற்பமான வசதி படைத்தவன்தான்; ஆனலும் அந்தச் சிறுவனைக் கண்டதிலிருந்து இப்படி எனக்கு ஒரு உணர்ச்சி! இந்த சமுதாயம் இன்று சாக்கடை நிலையிலே இருக்கிறது என்ருல் அதிலே நெளியும் சின்னஞ்சிறு புழுக்கள் தான் இவர்கள்! இன்று, இவர்கள் சின்னஞ் சிறு புழுக்கள்! நாளை, வம்ஸ விருத்தி பண்ணி

விடும் அளவுக்கு பெரிய புழுக்கள்! அன்று சமுதாயம் சாக்கடையாக இராது; சாக்கடை சமுதாயமாகி விடும்! என்னுலானது, நான் ஒரு புழுவையாவது சாக்கடையிலிருந்து எடுத்து அந்தண்டை விடுகிறேனே? நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?''

இந்த கேள்விக்கு டாக்டரிடமிருந்து வந்த பின்கண்ட பதில் எனது ஆர்வத்தின் மூளையை மழுக்கி விட்டது.

"உங்கள் சமுதாய நல உணர்ச்சி, உங்கள் கனிந்த உள்ளம் வீணுக ஒரு புழுவைச் சாக அடிக்கப் போகிறது. இதுவா உங்களால் ஆன சேவை? — தொண்டு?''

டாக்டரின் கேள்வி எனக்கு மயக்க மூட்டியது! அவரே என் மயக்கத்தை விரட்டினுர், "ஒரு முறை தன் நண்பனின் குழந்தையை வாழ்த்த சென்ருர். 'இவன் முட்டாளாக இருக்கட்டும் முடிச்சவிக்கியாக இருக்கட்டும். கேடி, ரவுடியாகக் கூட விளங்கட்டும்! இதனுலெல்லாம் இவன் பசி பட்டினி வறுமை கொடுமை என்று வருந்தி சாகமாட்டான்! மாருக மந்திரியாவான்; மலர் மாலை சூட்டிக் கொள்வான்; மகிமை பெற நாட்டுக்கே கீர்த்தியாக விளங்குவான் என்று ஆசிர்வதித்தார். நல்லவன் வாழ இந்த உலகமில்லை; அங்கே துளி இடமில்லை. ஆகவே நான் சொல்லுகிறேன்: நீங்கள் சிறுவனை வீணுக நல்லவனுக்கி கொடுமைக்கு ஆளாக்கி விடாதீர்கள். கடல் நீர் உப்பு கரிக்கிறது என்று வாளை மீனைப் பிடித்து சொம்பு நல்ல நீரில் விடாதீர்கள்!''

டாக்டர் சொன்னது என் சிந்தனைக்கு விருந்தாக இல்லை; அதை ஒரு கலக்குக் கலக்கி விட்டது! பயம் என்ன — நீங்களும் சிந்தியுங்களேன்.

தவறென்ன?

தமிழ் நாட்டில் தமிழன் கட்டிய சிதம்பரம் போன்ற கோவில்களில் கூட தமிழிலுள்ள திருவாசகத்தை சன்னிதானத்தின் சமீபம் ஓதக் கூடாது என்ற நிலையைக் காண தமிழன் எவனுக்கும் உணர்ச்சி எழாமலிருக்க முடியாது.

தமிழ் நாட்டிலுள்ள எல்லா கோவில்களிலும் தமிழில் எல்லா வழிபாடுகளும் செய்ய தமிழர்களாகிய நாம் ஆவன செய்தல் அவசியமாகும். தமிழ்த்தெரியாத சாமி தமிழ் நாட்டில் இருப்பாரா? அவ்விதம் தெரியாத சாமியைத் தமிழ் கற்று தமிழ் நாட்டில் இருக்கட்டும் என்று நாம் கூறக்கூடாதா?

அரசியல்வாதிகள் செய்யும் சில தவறுகளைப் போல் சமயவாதிகளும் சில தவறு செய்வதால் நாத்திகம் பரவுகிறது என்பது என் திட்டமான அபிப்பிராயம். மக்களுக்காக இலக்கியத்தைச் செய்யாமல் சிலர் சமயத்திற்காக இலக்கியத்தைப் பரப்பியதால் பல தவறுகள் நேர்ந்துவிட்டன.

சொ. முருகப்பா.

கவந்தன்!

— உலகப்பன் —

1502-ம் ஆண்டு.

அப்போது அவனுக்கு வயது பதினைன்று.

அண்ணி காதரினேடு விளையாடிக் கொண்டிருந்தான். பள்ளிப் பாடம் ஒருபுறம் கிடந்தன.

அரண்மனை பணி மகன் வந்தான். அடங்கி ஒடுங்கி நின்ருன். கண்களில் நீர் மல்க நின்ருன் உதடுகள் துடித்தன...

என்ன ?—காதரின்

இளவரசர்......!

வரச் சொன்ஞரா ? இதோ....

அல்லம்மா........இறந்து விட்டாராம் !

ஐயோ......ஐயோ......

ஐயோ தம்பி...உன் அண்ணன் போய் விட்டாராமே....!

எனக்கு யார் கதி இனி ?

ஏன் நானிருக்கிறேன் அண்ணி! பயப்படாதே.

அழுகையிலும் சிரித்தாள். கணவன் மாண்டதை எண்ணிக் கதறும் காதரினுக்கு மைத்துனன் நானிருக்கிறேன் என்ருல்....அறியாத பாலன் பொருள் தெரியாது பேசிஞன்.

*   *   *

1509-ம் ஆண்டு.

அண்ணி காதரினுக்கும் அவனுக்கும் திருமணம் !

அண்ணன் இறந்ததும் நானிருக்கிறேன் என்று அறியாமல் சொன்ஞன். ஏழாண்டுக்குப் பிறகு உண்மையாகவே கணவஞஞன், அரசுக் கட்டில் ஏறியதும்,

அன்பு அண்ணி ஆசைக் கண்ணுட்டியாகி விட்டாள். அரசன் அவன். செல்வம், சிறப்பு, இன்பம் கொள்ளை கொள்ளை.

இரண்டாண்டுகளில் ஒரு ஆண் குழந்தைப் பிறந்தது. அடுத்த மாதம் இறந்தது.

மேலும் ஐந்து ஆண்டுகள்; மேரி பிறந்தாள்.

*   *   *

1526-ம் ஆண்டு.

அரண்மனை பணி மகளில் ஒருத்தி ஆன் பொலீன்—இருபது ஆண்டு குமரி—அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டாள்.

கண்ணே ஆன் பொலீன் !

கண்ஞளா....

என் இதயராணியாவாயா !

பட்டத்து இராணியான பிறகு !

ஐயோ...

இல்லா விட்டால் எட்டிப் போக வேண்டியதுதான். அரச பதவி மட்டும் வெல்லம். மற்றவர்கள்...

அதற்கு மேலும் அவன் தாள முடியுமா ?

காதரினை விவாக ரத்து செய்து கொள்ளகோரி ரோமுக்குத்தூது பறந்தது. போப்பாண்டவருக்கோ காதரின் அண்ணன்—ஸ்பெயின் அரசனிடம் பயம், காலம் கடந்தது.

இங்கிலாந்தைப் பொறுத்தவரையிலே தானே அரசனும் மதத தலைவனும் என்று கட்டளையிட்டான்.

மாதாக் கோயில் சரியாக நடக்கவில்லை யென்று குற்றஞ் சாட்டி சொத்துகளை பறிமுதல் செய்தான்.

குருமார்கள் கொட்டம் அடங்கியது.

* * *

1533-ம் ஆண்டு.

ஆன் பொலீன்—ஆசைக் கண்ணாட்டி—அரசியுமானாள்.

எலிசபெத் பிறந்தாள்.!

குழந்தை ஈன்ற குமரியின் வனப்புக் குறைந்தது.

குற்றஞ் சாட்டப்பட்டாள். அவள் தலை தரையிலே உருண்டது.

1533-ம் ஆண்டு.

ஆன் பொலீன் இறந்த பத்தாம் நாள்.

ஜேன் செய்மூர் அரசியானாள்.

எட்வர்ட் பிறந்தான். முன் மனைவிகள் மூலம் பிறந்த மேரியும் எலிசபெத்தும் அரச பதவிக்கு இலாயக்கற்றவர்களாக்கப் பட்டார்கள்.

ஆனால் விரைவில் நோய்வாய்ப்பட்டு இறந்தாள் ஜேன்.

* * *

1539-ம் ஆண்டு

ஐரோப்பாவில் ஸ்பெய்ன் அரசன் ஐந்தாம் சார்லஸின் செல்வாக்குப் பெருகி வரும் காலம்.

ஜர்மன் நாட்டு இளவரசி—கிளிவஸ் அன்னி—மனைவியானாள் அரசியல் செல்வாக்குப் பெற கல்யாணம்.

ஆனால் அவள் பிடிக்கவில்லை.

விவாக ரத்து உதவிப் பணம்; உதறிவிட்டான்.

* * *

1540-ம் ஆண்டு

நராபோல்க் பிரபு நண்பன். அவன் தங்கைகாதரின் ஹோவார்டு விழியாலே மொழி பேசினாள். அவளோ பிரபுவின் தங்கை.

அரசனின் அரவணைப்புக் கிட்டினால்....! அவள் எண்ணினாள்.

அவனே அரசன்.

திருமணம் இனிது நடந்தேறியது.

இரண்டு ஆண்டுகள் ஓடிமறைந்தன. அவளும் தப்பமுடியவில்லை!

* * *

1543-ம் ஆண்டு.

காதரின் பரா, விதவை. ஆனாலும் அழகு மேனி ஆசையூட்டும் கண்கள் இனிக்கும் பேச்சு, உற்சாக உள்ளம் அவளுக்கு இருந்தது. அரசன் கலந்து கொள்ளும் விருந்துசாரில் சந்தித்தாள் அவள். அவள் அவனைப் பார்த்தாள், அவன் அவளைப் பார்த்தான்.

கணவன் மனைவியாயினர்.

அவளுக்கு அவன் இரண்டாவது கணவன்!

அவனுக்கு அவள் ஆறும் மனைவி. ஐந்து மனைவிகளை அவன் ஆட்டிப் படைத்தான், ஆறும் மனைவி அவனை ஆட்டிப் படைத்தாள், சாகும் வரை!

* * *

இஷ்டம்போல் துள்ளி விளையாடினான் ஒன்றுக்குப் பின் ஒன்றாக—காதரின்— ஆன் பொலீன்—ஜேன் செய்மூர்—காதரின் ஹோவார்டு—காதரின்பரா — மணந்தான் சட்டப்படி ஊராருக்கு அழைப்பு விடுத்து. மறைவில்...? பெண்ணென்றால் பேயும் இரங்கும் என்பார்கள் ஆனால் இவனே பெண்ணென்றால் பேயனானான்!

இந்த ஆறுமனைவிக்காரன், அடங்காப் பசிக்காரன்—1491-ல் பிறந்தான் ஏழாம் ஹென்றிக்கு மகனாக; தந்தைக்குப் பிறகு தரணியை நிர்வகித்தான் தகுதியோடு, 1547-ல இறந்தான் அந்தக் கவந்தன் பெயர், எட்டாம் ஹென்றி!

[குறிப்பு:-இது கற்பனைக் கதைதான்! யாரையும் எதையும் குறிப்பிடுவதல்ல; தனிப்பட்ட நபர்களையோ, ஸ்தாபனங்களையோ, சர்க்காரையோ தாக்கும் நோக்கமுடையதல்ல; எனவே, மதவாதிகள் மருள வேண்டாம்; கதாகாலட்சேபக்காரர்கள் கதறவேண்டாம்; பஜகோவிந்த வாதிகள் பதற வேண்டாம். அவ்வளவுதான்! இனிக் 'கீழே' படியுங்கள்!]

வள்ளி வனப்புள்ள மங்கை! வாழப் பிறந்த வனிதையர் கூட்டத்திலே அவளும் ஒருத்தி! வாழ்க்கையைப் பல கோணங்களிலிருந்தும் பல 'கோணல்'களிடமிருந்தும் அனுபவித்து ரசித்தவள்! அவளுக்கா வாழ்வின் ருசி தெரியாது? வாழ்க்கையின் 'செண்டர் – ஆப் – கிராவிடி' என்னவென்று தெரியாத பெண்கள்தான் 'ஐயோ, வழுக்கி விழுந்து விட்டோமே' என்று பதறிப்போய் அந்தச் சறுக்கு நிலத்திலேயே 'ஸ்கேட்டிங்' விளையாடி, முடிவில் தற்கொலை என்னும் சமநிலைக்கு வந்து விடுகிறார்கள்! அத்தகைய பைத்தியக்காரியல்ல, வள்ளி!

இப்போது அவள் முன்னிருக்கும் பிரச்னை உண்மையிலேயே அவள் உள்ளத்தை அசைத்துவிட்டது என்றுதான் கூற வேண்டும். நீண்ட காலமாக அவளது வாழ்வு தொடர்கதையாகவே இருந்தது. இன்று முற்றுப்புள்ளி வைக்கச் சுப்ரமண்யம் துணிந்துவிட்டான். 'சிரி' என்று சொல்லுகிறான்! 'சரி' என்று சொல்லி விட்டாலே போதும்! தொடர்கதை முடிந்து புதிய நாவல் முரசொலிக்க ஆரம்பித்து விடும். ஆனால்......

கடைசியாக வைத்தியம் பார்க்க வந்த பழனியப்பன் கடிதம் எழுதுவதாகச் சொல்லிவிட்டுப் போனான். அவன் கூறிய முகூர்த்த லட்சணமோ என்னவோ, அதற்குப் பிறகு தபால்காரன் அந்த வீட்டுப் பக்கம் தலைகாட்டுவதே இல்லை. உலகத்திலே ஆண்கள் எல்லோரும் மோசக்காரர்கள் என்ற முடிவுக்கு அவள் இன்னும் வரவில்லை. ஏனென்றால் தூதுவந்த சுப்ரமண்யம் இன்னும் போகவில்லை. அவளுடைய பதிலுக்காகத் துடித்துக் கொண்டிருக்கிறான். அவனது பார்வை சூலாயுதத்தைப் போல அவளது உள்ளத்தை ஊடுருவிப் பாய்ந்தது.

ஜமீன்தார் நம்பிராஜன்

அவள் கண்களை மூடினுள்! வழக்கம் போல், கடந்த கால நிகழ்ச்சிகள், சினிமாப் படம் ஓடுவது போல அவளது மனத் திரையிலே நிழலாடின.

* * *

ஜமீந்தார் நம்பிராஜனுக்குப் பயப்படா விட்டாலும் அவரது மீசைக்குப் பயந்தார்கள் அந்த வட்டாரத்து மக்கள். அவர் மிகவும் கண்டிப்பான கரூர்பேர்வழி! அவருடைய ஒரே பெண்தான் வள்ளி!

வள்ளி அவருடைய சொந்தக் குழந்தை என்றுதான் ஊரிலே எல்லோரும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். பல நாட்களாகக் குழந்தையில்லாத நம்பிராஜன் ஒரு நாள் வேட்டைக்குச் சென்ற இடத்திலே கண்டெடுத்த குண்டுமணிதான் வள்ளியெனும் மலர்ச் செண்டு! ஒரே குழந்தை—அவளே ஆணும் பெண்ணுமாக அவரது குழந்தை ஆசையைத் தீர்த்து வைத்தாள். எனவே அவளது உரிமைகள் மிகவும் உரம் பெற்றிருந்தன.

பங்களா அவளது ராஜ்ஜியம்! அதைச் சுற்றியுள்ள காட்டுப் பிரதேசம் அவளுடைய 'பிளே—

பாரஸ்ட்ரேஞ்சர் வேலன்

கிரவுண்டு' சாயந்திரம் 'வாக்கிங்' போனுல் சில சமயம் இரவு திரும்ப மாட்டாள். மிகவும் துணிச்சல்காரி!

ஒரு நாள்!

வழக்கம் போல் உலாவி விட்டுப் பங்களாவுக்குத் திரும்பிக் கொண்டிருந்தாள். 'டுமீல், டுமீல்' என்ற துப்பாக்கி வேட்டுச் சத்தத்தைத் தொடர்ந்து அவள் முன்னுல் புள்ளிமான் ஒன்று துள்ளி விழுந்தது. பக்கத்திலிருந்த புதருக்குள்ளிருந்து ஹாட்டும் சூட்டுமாக ஒரு இளைஞன் துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு வெற்றிச் சிரிப்போடு வெளியே வந்தான்.

"ஒரு மானுக்குத்தான் குறி வைத்தேன். எதிர்பாராத வெற்றி!" என்ருன்.

"சூரப்புலிதான்!" என்ருள் வள்ளி.

"சூரப்புலிகளை வேட்டையாடும் வீரப்புலி நான்—என் பெயர் வேலன்!"

"வேலன்! ஹூம், உன்னுடைய வேட்டை முடிந்துவிட்டதா?"

"இல்லை; இனிமேல்தான் ஆரம்பம்! ஆமாம், உன் பெயரென்ன, நீயார்?"

"அதைப் பற்றி உனக்கென்ன அக்கறை உன் வேலை முடிந்து விட்டால் போகலாம்."

"வேலையை முடித்து விட்டுத்தான் போவதாக இருக்கிறேன். நீ என்ன, இந்தக் காட்டுக் குறவர்களின் வீட்டுக் கரசியோ?"

"என்ன?"

"ஒன்றுமில்லை. மரியாதை என்பது இந்த வட்டாரத்திலேயே கிடையாது போலும்!

நேரம் இருட்டிக் கொண்டிருந்தது. பட்டுவிழுந்த மானைக்கூட விட்டுவிட்டு வள்ளியைத்தொடர்ந்தான் இளைஞன். வேலனைக் கண்ட பிறகு வள்ளியின் உணர்ச்சி வளையங்கள் கொஞ்சம் கொஞ்சமாக விரிவடைய ஆரம்பித்தன. அதை இன்னும் அதிகமாகத் தூண்டிவிடும் அளவுக்கு வேலன் சரியான வாயாடியாக இருந்தான்.

"ஏன் என் பின்னுல் வருகிருய்?"

"பின்னுல் வரவில்லையே, உன் பக்கத்தில்தான் வருகிறேன்"

"அதுதான் ஏன் என்று கேட்டேன்?"

"வழி தெரியவில்லை"

"எதற்கு?"

"உன் வீட்டுக்கு!"

"என் வீட்டுக்கா?"

"ஆமாம். பெயரைத்தான் சொல்ல மறுத்துவிட்டாய். விலாசத்தையாவது கொடு"

"உனக்கெதற்கு இந்த வம்பு?"

"வம்பா, இன்பமல்லவா இது!"

"சரியான பைத்தியம்!"

"அது எங்க அப்பா!" வள்ளியால் சிரிப்பை அடக்க முடியவில்லை. சிரிக்கச் சிரிக்கப் பேசும் கோமாளிகளிடத்தில்தான் பெண்கள் விரைவாகத் தங்களை ஒப்படைத்து விடுகிருர்கள்" என்று மேல்நாட்டு அறிஞன் ஒருவன் கூறியிருக்கிருன். அதை அனுபவச் சுவடியிலே எழுதப்பட்ட பொன் மொழி என்றுதான் புகல வேண்டும்.

"நீ எவ்வளவு நாட்களாக வேட்டை யாடுகிருய்?"

"நீண்ட நாட்களாக – ஆனுல் மான் வேட்டை இன்று தான் ஆரம்பம்!"

"இந்தக் காட்டில் நிறைய மான்கள் இருக்கின்றன"

"தெரிகிறதே! ஆனுல் உன்னைக் கண்டவுடன் ஒளிந்து கொண்டன போலும்"

"ஏன்?"

"என்னைக் கேட்டால்?"

"பின் யாரைக் கேட்பதாம்?"

"உன் கண்களைக் கேள்! கதை கதையாகச் சொல்லும்"

"கண்களா? கதை சொல்லுவதா? வேடிக்கைதான்!"

"ஆமாம். வேடிக்கையான கதைகள் — விநோதமான கதைகள்—விளங்காத கதைகள்! புருவத்தின் அசைவிலே, இமைகளின் துடிப்பிலே, விழியின் வேகத்திலே அப்பப்பா, எத்தனை கதைகள், எத்தனை நாவல்கள்—நாடகங்கள்! பேசாத சித்திரமே, உன் கண்கள் பேசுகின்றன! உன் பார்வை என் மேல் போர் தொடுத்துவிட்டது"

இளைஞன் கற்சிலையாக நின்றுன். அவனது பேச்சுகள் அவளுக்குப் புதுமையாக இருந்தன, ஒரு விதமான போதையை ஊட்டின. வானக் குளத்திலே நிலா,

சுட்டு வீழ்த்திய மான்

நீச்சலடித்துக் கொண்டிருந்தது.

"என்ன, மரமாக நின்றுவிட்டாய்!"

"ஆமாம். மரமாகத்தான் நிற்கிறேன். மலர்க்கொடி உன் முன்னால்........"

"நீ புதுமாதிரியாக இருக்கிறாய்; புதுமையாகப் பேசுகிறாய். எனக்கு ஒன்றும் புரியவில்லை".

"புரியாத சங்கதிதான் புள்ளி மானே! ஆனால் பழங்காலந் தொட்டு அமுலாக்கப்பட்டு வருகிறது. உன் கண்கள் என்ன சொல்லுகின்றன தெரியுமா? அதை மொழி பெயர்த்துச் சொல்லட்டுமா?"

"மொழி பெயர்ப்பதா? எப்படி?"

"இதோ பார்....என்னைப் பார் ...உன் உதடுகளை அசைக்காதே ....இப்படி...."

வள்ளி புரிந்து கொண்டாள். முதலில் திமிறினாள். பிறகு அடங்கினாள். நிலவு சிரித்தது.

வள்ளி அன்று இரவு வீடு திரும்பவில்லை. வேலனும் வள்ளியும் நிலவை விரட்டிக்கொண்டிருந்தார்கள். தென்றலுக்குத் தடை உத்தரவு போட்டுவிட்டார்கள். அவர்கள் இடையிலே அது நுழையக்கூடாதாம்!

கார்ப்பென்டர் ஆறுமுகம்

விடிந்தது. வேலன் புறப்பட்டான். "வள்ளி, என் உள்ளத்தை அள்ளிக்கொண்ட கள்ளி! உன்னைவிட்டு எவ்வாறு பிரிவேன்?"

"ஹா....பிரிவதா? பங்களாவுக்கு வாருங்கள்"

"நாளை மாலை மீண்டும் வருவேன். எனக்காகக் காத்திரு. சொர்க்க வாசலுக்குப் போகலாம்!"

"மாலை வராவிட்டால் என் பிணம்தான் காத்திருக்கும்."

"நிச்சயமாக வருவேன். உன் நீல மலர்விழிகளை மூடிக்கொள். என் நெஞ்சைத் துளைக்கின்றன"

"அவை என்ன சொல்லுகின்றன என்று இன்னொரு தடவை மொழி பெயர்த்துச் சொல்ல மாட்டீர்களா?

"இச்....போதுமா?"

"போகிறீர்களா?"

அவன் போய்விட்டான். வேட்டை முடிந்துவிட்டது. ஆனால் வள்ளிக்கு.... அதுதான் ஆரம்ப விழா!

* * *

அதற்குப் பிறகு எத்தனையோ நாட்கள் காட்டுக்கு வந்து காத்திருந்துவிட்டுப் போயிருக்கிறாள். ஓடிப்போன வேலன் திரும்பவே இல்லை. காயாத கானகத்தே அவளுக்குக் 'காதல்' ஓயாத தொல்லையாக இருந்தது! சிந்தையறிந்து வந்து சேதி சொல்லச் சேடிகள் கிடையாது, வேலனின் விலாசமும் தெரியாது; என் செய்வாள் பேதை!

இரண்டு மாதங்கள் இறந்துவிட்டன. பங்களாவுக்குப் புது பர்னிச்சர்கள் செய்வதற்காக

நம்பிராஜனைத் தேடி வந்தான் ஆறுமுகம். வேலையும் கிடைத்தது.

பங்களாத் தோட்டத்திலேயே தனது கடையை விரித்துக் கொண்டான் ஆறுமுகம். புதுப் புது மேஜைகள், நாற்காலிகள், பீரோக்கள், படுக்கையறைக் கட்டில்கள் எல்லாம் உருவாகிக் கொண்டிருந்தன. தோட்டத்துப் பக்கம் போகும் பொழுதெல்லாம் வள்ளி ஆறுமுகத்தைக் கவனிக்காமலிருப்பதில்லை. அவனது கரங்கள் பலகைகளுக்கு இழை போட்டுக் கொண்டிருக்கும்போது வள்ளியின் கண்கள் அவனை எடைபோட்டுக் கொண்டிருந்தன.

ஆறுமுகம் அதிகம் பேசமாட்டான். தானுண்டு, தன் வேலையுண்டு என்றுதான் இருப்பான். ஆனாலும் அவன் இயந்திரமல்லவே! மனிதன்தான்! தவச்சிரேட்டரான விஸ்வாமித்திர முனிவரே மேனகையிடம் மயங்கி விட்டாரென்றால் அப்பாவி ஆறுமுகம் என்ன கதி!

"ஏம்ப்பா, இந்த மரப்பலகைகள் நீ சொன்னபடி ஆடுகின்றனவே!"

"ஆமாம்!"

"வளைந்தும் நெளிந்தும் கிடந்த பலகைகளுக்கு வனப்பை ஏற்றி விட்டாய்!"

"ஆமாம்!"

"நீ நல்ல கைராசிக்காரன்!"

"ஆமாம்!"

"இரவில்கூட வேலை செய்கிறாயா?"

"அம்மா......"

"சும்மாதான் கேட்டேன்"

* * *

ஆறுமுகம் வேலையை முடித்து விட்டுப் போகும்போது நம்பிராஜன் நிறையக் கூலி கொடுத்தார்! 'நல்ல வேலைக்காரன் எவ்வளவு கொடுத்தாலும் தகும்!' என்று வள்ளி சிபார்சு செய்ததில் ஆச்சரியம் இல்லை!

குறி சொல்லவந்த குமாரசாமி

இடையிலே ஆறுமுகம் குறுக்கிட்டிருந்த போதிலும் ஆதியிலே வந்த வேலனை அவளால் மறக்கவே முடியவில்லை. சிரிக்கச் சிரிக்கப் பேசி, கைவளை தொட்டு, கண்கள் பேசும் கதைகளை மொழி பெயர்த்துச் சொன்னதையெல்லாம் இப்போது நினைத்தால்கூட அவளுக்கு இனிப்பாகத்தான் இருந்தது. பாவம், பாரஸ்ட் ரேஞ்சர் வேலன் மறுநாளே 'டிரான்ஸ்பர்' உத்திரவை வாங்கிக் கொண்டு வேலூருக்குப் போய் விட்டான் என்பது அவளுக்கு எப்படித் தெரியும்?

நம்பிராஜன் எப்போதும் வீட்டிலிருப்பதில்லை. ரேஸ் ஸீஸன் ஆரம்பமானவுடன் சென்னையிலேயே தங்கிவிடுவார்! பிறகு 'தீர்த்த யாத்திரை'யிலிருப்பார். இடை வேளை ஏதாவது கிடைத்தால் பங்களா ரிபேர்களைக் கவனிக்க ஆரம்பித்துவிடுவார்! எனவே வள்ளியின் எதிர்காலத்தைப் பற்றி நினைக்கவே அவருக்கு நேரமில்லாமல் போய் விட்டது.

வள்ளி துவண்டுகொண்டிருந்தாள்! குறி சொல்ல வந்த குமாரசாமி, வளையல் விற்கவந்த கந்தையா, தூரபந்து என்று சொல்லிக் கொண்டு 'ஓரிரவு விருந்தாளி' யாகத் தங்கிய சண்முகத் தாத்தா—இப்படியாகப் பட்டியல் வளர்ந்துகொண்டிருந்தது. ஆயினும் வேலன் நினைவு அவளது நெஞ்சை வேல்கொண்டு குத்தியது. அவள் படுத்த படுக்கையானுள்! நோயறியா மருத்துவர்கள் எதை எதையோ கொடுத்துப் பார்த்தார்கள். ஒன்றும் பயனில்லை. கடைசியில் செந்தூர் டாக்டர் பழனியப்பன் வந்து சேர்ந்தார்.

வள்ளியின் நாடியைப் பார்க்கும் போதே அவரது நாடி நின்று விட்டது. நோயைப் புரிந்து கொண்டார்! ஆனல் மருந்து அவருக்குத் தேவை! வள்ளி இசைய வேண்டுமே!......

வளையல்கார கந்தையா

டாக்டருக்கு என்ன தெரியும் காதல் கீதங்களைப் பற்றி! அவர் படித்ததெல்லாம் வாயிலே நுழையாத வியாதிகளின் பெயர்கள்! கேட்டதெல்லாம் இழவு கீதங்கள்! கண்டதெல்லாம் எலும்புருக்கிகளையும் இருமல் காள வாசல்களையும். வள்ளி அவருக்குப் புதுமையான 'பேஷண்ட்' எனவே புதுவிதமான ட்ரீட்மெண்டை ஆரம்பித்தார்! அது பலன் தரவும் செய்தது. அன்று டாக்டர் நாடி பார்த்துக்கொண்டிருந்தார், நெடுநேரமாக.......

"டாக்டர்...." என்ருள் வள்ளி.

"பேசாதே, வள்ளி"

"என் கைகள்........"

"ஆமாம், இது உன் கைகள்; இல்லை, சிறு வாழைத் தண்டு! இது உன் கன்னங்கள்; இல்லை, செந்தாமரைக் கிண்ணங்கள்! இவை உன் கண்கள்-கிடையாது, காதல் காவியங்களை ஒலி பரப்பும் 'ரேடியோ வால்வ்' கள் இதுதான் முகம்—முழுநிலா! இவைகள் உதடுகள், உண்மையல்ல; தேன் குடங்கள்! வள்ளி...வள்ளி ..."

"டாக்டர்... ...."

"அப்படிச் சொல்லாதே வள்ளி! எனக்குத் தான் மருந்து தேவை! ஆமாம், நீ.... ...."

"டாக்டர், அப்பாவுக்குத் தெரிந்தால்... ...."

"சரி என்று சொல்லிவிடுவார். நீ மட்டும் சம்மதம் என்று சொல்லிவிடு! நாளையே திருமணம்!"

வள்ளி சரியென்று சொன்னுள். டாக்டர் பழனியப்பனின் வியாதியும் குணமாகியது. ஊருக்குப் போய் கடிதம் எழுதுவதாகச் சொல்லிவிட்டுக் கிளம்பினர்! அவ்வளவுதான்!

வள்ளி கண்களைத் திறந்து பார்த்தாள்! எதிரே சுப்ரமண்யம்!

சுப்ரமண்யம் பஞ்சாமிர்த வியாபாரி! அகில இந்தியப் புண்ணிய ஷேத்திரங்கள் தான் அவனுக்கு மார்க்கட்டு! தீர்த்த யாத்திரை போயிருந்த நம்பிராஜன் அவனை அழைத்து வந்திருந்தார் 'விருந்தாளியாக.'

வள்ளியைக் கண்ட பிறகு 'விருந்து' நீடித்தது! ஒரு நாள் தனது தீர்மானத்தை வெளிப்படையாக வள்ளியிடம் எடுத்துச் சொன்னான். அவள் பயந்தாள்! தயங்கினாள்! மயங்கினாள்!

"வள்ளி, வாழப் பிறந்தவளே! தவறு செய்யாத மனிதன் உலகத்திலேயே கிடையாது! ஆனால் செய்த குற்றத்தையே திரும்பச் செய்வதுதான் சட்ட விரோதம்! வேலன் வரமாட்டான்; கந்தசாமி கைவிட்டு விட்டான்; பழனியப்பன் மறந்து விட்டான்! குமாரசாமி, சண்முகம், ஆறுமுகம் — இவர்களெல்லாம் நாடகத்திலே வரும் 'சமயோசித'ப் பாத்திரங்கள்! இனிமேல் உன் வாழ்க்கையின் ஓரத்திற்கு அவர்கள் வரவே மாட்டார்கள்! மறந்துவிடு!

"வள்ளி, சிரி! சிரி, வள்ளி சிரி! இதுதான் உலகம்! இந்தப் போலி உலகைக்கண்டு சிரி! நீ வாழ வேண்டும்"

"வழி?"

"சிரி! சரி என்று சொல்லிவிட்டுச் சிரி, வள்ளி சிரி! நான் ஏற்கெனவே மணமானவன்! முதல் மனைவி உயிரோடு இருக்கிறாள், T. B. ஆக! தீராத நோய்! அவள் பெயர் தெய்வயானை! அவள் அனுமதியோடு நாம் திருமணம் செய்து கொள்ளலாம். உன்னைக் கைவிட எண்ணியிருந்தால் நானும் வேலனைப் போல 'வருகிறேன்' என்று சொல்லிவிட்டுப் போய்விடலாம்! ஆனால் நானே உன்னை வருந்தியழைக்கிறேன்! வள்ளி, வா! வாழ்க்கையின் உன்னதப் பகுதிக்கு வா! உலகத்தின் முடி மீது ஏறிச் செல்வோம். இரவோடிரவாக என்னுடைய ஊருக்குப் போய்விடலாம்......... அழாதே வள்ளி, அப்பாவுக்குத் தெரிந்தால் கோபிக்கத்தான் செய்வார் – ஆனால் நீ வாழ வேண்டாமா? எங்கே, சிரி, வள்ளி சிரி!"

* * *

வள்ளி சிரித்தாள்! பஞ்சாமிர்த வியாபாரி சுப்ரமண்யத்தோடு வள்ளி ஓடிப்போய் விட்டாள் என்று ஊரார் பேசிக் கொண்டது நம்பிராஜனின் காதுகளில் பஞ்சாமிர்தமாக விழவில்லை – நாராசமாகத்தான் இருந்தது ஆனால் வள்ளியோ வாழ்க்கையைப் பஞ்சாமிர்தமாக அனுபவித்துக் கொண்டிருந்தாள். சுப்ரமண்யத்தோடு!

*

என்றும் வேண்டும்

('ஆசைக் கிளியே' என்ற பாடலின் அமைப்பு.)

எழில் வேந்தன்

அன்பை வளர்ப்பீர் அறிவை வளர்ப்பீர்
பெண்களே! பெண்களே!!

இன்பம் பெற்றே இனிதுவாழப்
பெண்களே! பெண்களே!!

நாட்டின் நலம்பேணும் நல்லோர்
பலரும் தோன்றிடவும்

பாட்டால் உணர்வூட்டும் பாவலர் பல்லோர்
நிறைந்திடவும்

காட்டு வாழ்க்கை நீங்கியேநாம்
காதல் வாழ்வு வாழ்ந்திட

ஏட்டுக்கல்வி மாதருக்கே என்றும்
வேண்டும் நாட்டிலே

அந்த வீட்டின் திண்ணையில் அமர்ந்தவாறே, கண்களை இறுக மூடிக் கொண்டான் சுந்தரம்.

அவன் மெதுவாகச் சிரித்தான்- அவனைச் சுற்றி அநேகர் நின்று கொண்டிருப்பதுபோலவும் அவர்களும் அவனுடன் சேர்ந்து சிரிப்பது போலவும் பிரமை தட்டியது. சுந்தரம் மேலும் தன் கண்களை இறுகப் பொத்திக் கொண்டான்.

சிறிது நேரம் சென்றது. சற்று முன்பு கேட்ட கூச்சல் வரவர கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்துகொண்டே வந்து கடைசியில் மடிந்து விட்டது.

சுந்தரம் மறுபடியும் மனதிற்குள்ளாகவே ஒரு தரம் சிரித்தான். இப்போதும் ஒரு சிரிப்பொலி அவன் காதில் விழத்தான் செய்தது. ஆனால் இது சுற்றியிருந்தவர்களின் கேலிச் சிரிப்பு அல்ல—அதற்கு முற்றும் மாறுபட்டதாகத் தெரிந்தது.

அந்தச் சிரிப்பின் ஒலி—விண் தவழும் தென்றல் மல்லிகையுடன் கொஞ்சும் போது உண்டாகும் இசையை விட மிகவும் நன்றாக இருந்தது. அந்தச் சிரிப்பொலியைத் தொடர்ந்து இருவர் குரல் கேட்டது. அந்த இருவர் பரிமாறிக் கொண்ட கேள்வி பதில்கள் அவர்களைக் காதலர்களாக அறிமுகம் செய்தது.

அவர்கள் பேசிய பேச்சைக் கேட்க—நேற்றுவரை தானிருந்த நிலையுடன் அதை ஒப்பிட்டுப் பார்க்க—அவன் உள்ளம் பெருமூச்சு ஒன்றை வெளியிடத்தான் செய்தது.

"காதல்.........அது ஒரு கானல் நீர்!"

"காதல்.........அது ஒரு தொடு வானம்!!"

என்றைக்குக் காதல் என்ற சொல்லிலிருந்து களங்கம் என்ற தப்பபிப்பிராயத்தை நீக்குகிறார்களோ, காதல் கொள்வது கண்ணியமான முறைதான் என்று ஒப்புக் கொள்கிறார்களோ, அதுவரைக்கும் காதலின் முடிவு....காதலர்களின் கதி......

பாம்புக்குப் பால் வார்க்கும் இந்த வஞ்சக உலகம் ஏனோ பாசத்தால் ஒன்றுபட்ட காதலர்

களுக்கு உதவி செய்ய மறுக்கி றது. அது மட்டுமல்ல. காதலொரு தொத்து நோய்; அந்நோய்க்கு மருந்து உடனே அது பிடித்த வர்களை வேறொருவருக்கு மணம் செய்து கொடுப்பதுதான் என்று தப்புக் கணக்கு போட்டு விடு கிறது. அந்த எண்ணத்தின் விளைவால் பிரிக்க முடியாத பாசத்தைப் பிரிக்க, பிறகு அதை மறக்க வழி தெரியாது கடைசியில் துன்பப் படுகுழியில் இடறி வீழ்ந்து துடிதுடித்துச் சாகும் நிலைதான் வந்து விடு கிறது காதலர்களுக்கு. உம்.... உலகத்திற்கு எங்கே தெரியப் போகிறது ....தீயை அணைக்க அதன் மீது எண்ணெய் ஊற்று வது போன்ற முட்டாள்தனம் தான் காதலர்களைப் பிரிப்பது என்பது?

கயவனுக்குப் பாதுகாப்பு அளித்தாலும் அளிப்பார்கள்— ஆனால் காதலர்களுக்கு மட்டும் பாதுகாப்பு அளிக்கமாட்டார்கள். அளிக்காதது மட்டுமல்ல—அவர் கள் அறுக்க முடியாத அன்புக் கயிற்றை அறுத்துவிட முயற்சி செய்வார்கள் — அதன் முடிவு? தூண்டில் மீன் போலத் துடிதுடித் துச் சாகும் நிலை வந்து விடு கிறது. இந்த முடிவைக் காண அவர்களுக்கு விருப்பமும் கூட. இல்லாவிட்டால் ஆரம்பத்திலே அவன் கட்டிய மனக் கோட்டை யெல்லாம் இப்படித் தரை மட்ட மாக ஆகியிராதல்லவா?

அன்பெனும் பாதரஸம் பூசப் பட்ட அவன் மனக் கண்ணாடி யிலே நிரந்தரமாகத்தெரியவேண் டிய இன்ப உருவம் இப்போது நீக்கப்பட்டுவிட்டது பலவந்த மாக. காரணம்? பாதரஸம் தேய்ந்துவிட்டதா அல்லது கண் ணாடியே சுக்கு நூறாகி விட்டதா?

அவன் உள்ளத் தடாகத்திலே சிந்தனையெனும் சிறு கல் விழுந்த காரணத்தால், எண்ணமெனும் சலசலப்பு உண்டாகியது. சிந்தனையைச் சுற்றி உண்டாகிய சலசலப்பு சிறுசிறு வட்ட அலை யாக உருவாகி, கடைசியில் வரவரப் பெரிதாகி கொண்டே சென்றது அந்த அலைச் சுழிப்பி னூடே அவனும் அங்குமிங்கும் அலைக்கழிக் கப்பட்டான்.

* * *

தன்னிடமுள்ள பணமனைத்தும் பரிசுப் போட்டியில் செலவழித் தும் வெற்றி பெறாது ஏமாற்ற மடைபவனைப் போல, சுந்தரமும் வறுமையைப் பொருட்படுத்தாது 'இண்டர் வரை' படித்தும், கடை சியில் எங்கு சென்றாலும் வேலை யில்லை என்ற ஏமாற்றம்தான் வரவேற்பளித்தது, அவனுக்கு.

செக்கு மாடு போல தினமும் விடிந்தால் வேலைக்காக அலைந்து, பொழுது அடைந்தால் வீடு திரும்புவது அவனது தினசரி வேலையாகி விட்டது. கடைசி யில் அவனது விடா முயற்சியின் பலனாக அந்த ஊரிலுள்ள ஒரு டாக்டரின் வீட்டில் படிப்பு சொல் லிக் கொடுக்கும் வேலை கிடைத் தது.

தினமும் சாயங்காலம் டாக்ட ரின் வீட்டுக்கு வரவேண்டியது— அவர் மகன் சேகருக்கு படிப்பு சொல்லிக் கொடுக்க வேண்டி யது—இது தான் அவனுக்குக் கிடைத்த வேலை. நாலு நாள் பட்டினியால் பரிதவிப்பவனுக்கு ஒரு பிடி சோறு கிடைத்தது போலிருந்தது அந்த வேலையில் கிடைக்கும் ஊதியம். நீரில் மூழ்

கித் திணறுபவன், மிதந்துவரும் சிறுகட்டையைக் கூடப் பற்றிப் பிடித்துக் கொள்வது போல, சுந்தரமும் அந்த வேலையை ஒப்புக் கொண்டான்,

அன்றுதான் முதன் முதலாக சேகருக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கச் சென்றுன் அவன். ஆருவது வகுப்பு படிக்கும் அவனுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பது அவ்வளவு கடினமாகத் தெரியவில்லே. இரண்டு பாடங்களேச் சொல்லிவிட்டுப் பிறகு கணக்கு போடச் சொன்னுன். சேகரும் நோட்டை எடுத்துக் கணக்கு போடுவதில் முனேந்தான்.

வீட்டின் நடு ஹாலில் உட்கார்ந்திருந்த சுந்தரம் சுற்று முற்றும் ஒரு முறை தன் பார்வையைச் செலுத்தினுன். சுற்றிக் கொண்டே வந்த அவனது விழி, திடீரென்று நிலே குத்தினுற்போல நின்று விட்டது. சுந்தரம் தன்னே மறந்த நிலேயில் அந்த அறையையே ஒரு கணம் உற்று நோக்கினுன்.

"ஸார்..........!"

கணக்கு போட்டு முடித்த சேகர் அழைத்தான். அந்த அழைப்பு சுந்தரத்தின் விழிகளே அடுத்த அறையினின்றும் 'வாபஸ்' பெறச் செய்தது.

திரும்பிய சுந்தரம் சேகரைப் பார்த்தான். சேகரின் சப்தம் கேட்டு அடுத்த அறையிலுள்ள அவளும் திரும்பினுள்—அவள் கண்களிலே சுந்தரம் தென்பட்டான். சிறிது நேரம் கழித்து மீண்டும் அடுத்த அறையினுள் விழிகளேப் பாய்ச்ச சுந்தரம் ஆரம்பித்தான்.

அவள் சுந்தரத்தைப் பார்த்தாள்— சுந்தரம் அவளேப் பார்த்தான் — இருவரையும் மாறி மாறிப்பார்த்தான் சேகர்.

மூவர்கண்களிலும் உருவாகிய தடுமாற்றம் மூன்றுவித கோணங்களேப் பிரதிபலித்தது.

"சேகர்...அது யார்?...."

"என் அக்கா....பவானி!"

"உம்...என்னப டிக்கிருள்?"...

கேள்விகளேப் போட்டு அதன் மூலமாக அவள் பற்றிய சில குறிப்புகளேயும் அறிந்து கொண்டான். அதோடு மட்டுமல்ல, தன்னேப் பற்றிய சில குறிப்புகளேயும் சேகரிடம் சொல்வது போலச் சொல்லி அவள் அறியச் செய்தான்.

டாக்டரின் வீட்டை விட்டுச் சுந்தரம் திரும்பிவரும் பொழுது தான், உணர்ந்து கொண்டான். அப்போது கண்ணில் பட்ட காரிகை இப்போது கருத்திலும் புக ஆரம்பித்து விட்டாளென்று. இதற்குமுன் அவன் எத்தனேயோ பெண்களிடம் பழகியிருக்கிருன் நல்லவன் என்ற பெயரோடு. அப்போதெல்லாம் தோன்ருத ஒரு தனிக் கவர்ச்சி இப்போது கண்டான்; அவள் கயல் விழிகளிலே கருத்தையே பறிகொடுத்தான். அன்று முழுவதும் அவள் பற்றிய எண்ணங்கள்தான் ஆட்சி புரிந்தன அவன் இதயத்திலே.

மறுநாள் சாயங்காலம். எப்போதும்போல, டியூஷன் சொல்லிக் கொடுக்கச் செல்கிருன் அவன்—அதே நேரத்திலே, அவளும் அடுத்த அறையில் அமர்ந்திருக்கிருள்—சுந்தரத்தைக் கண்டதும் அவள் உள்ளே ஓடுகிருள் —மறுகணம் ஒரு டம்ளரில் காபி

கொண்டுவந்து கொடுக்கிருள்— சுந்தரம் சுற்றுமுற்றும் ஒரு தடவை பார்க்கிருன் யாருமில்லை வீட்டில் — உடனே காபி தம்ளரை வாங்கும்போது அவள் கைகளை மெதுவாகப் பற்றுகிருன்—பவானி அப்போது திணறவில்லை — திகைக்கவில்லை —திமிறவில்லை — கைகளை விடுவித்துக் கொள்வது போல பாசாங்கு மட்டும் செய்கிருள்— அதையடுத்து முல்லைச் சிரிப்பு— அந்தச் சிரிப்பிலே சுந்தரம் தன்னை மறக்கிருன் —உடனே அவளும் கைகளை வெடுக்கென்று விடுவித்துக்கொண்டு உள்ளே ஓடுகிருள் —முன்போலவே ஒரு தம்ளரில் காபியோடு காட்சி தருகிருள்.

"பவானி! இது என்ன? இரண்டாவது தடவையாக.......?"

"பரவாயில்லை! முன்பு கொடுத்தது என் தம்பிக்கு ஆசிரியர் என்ற முறையில்; இப்போது கொடுப்பது எனக்கு........"

"சொல் பவானி!"

"எனக்கு......அன்பன் என்ற முறையில்!"

"அன்பன்! அப்படியானல் நான் உன்னை விரும்புவது போலவே நீயும் என்னை......."

"பவானி!"

அவளது பதில் அவனுக்கு ஆனந்தத்தை உண்டாக்குகிறது —உடனே ஒரு தாவு—அவளைப் பற்றிப் பிடிக்க முயலுகிருன்— அதற்குள் அவள் ஓட்டம்பிடித்து விடுகிருள் உடனே.

அவள் பற்றிய இன்பக் கனவு தூக்கத்திலும் வந்து பிடித்துக் கொண்டதை எண்ண உவகை பொங்கியது உள்ளத்திலே. அந்தக் கனவு நனவாகி விடாதா என ஏங்கினன்.

கனவு பற்றிய எண்ணங்கள் கருத்திலே மின்ன, அவன் இன் முகத்தோடு படுக்கையைவிட்டு எழுந்தான்.

இதுகாறும் கண்டிராத ஒரு தனி உவகை—வெகு நாளாகக் கிடைக்காதா என ஏங்கியிருந்த ஏதோ ஒன்று—உள்ளத்திற்கு எப்போதும் நிரந்தரமாக உறவு கொள்ள ஒரு நபர் கிடைத்துவிட்டது என்ற மகிழ்வு, எப்போது சாயங்காலம் ஆகும் என எதிர் பார்க்கச் செய்தது அவனை. ஆனல் சாயங்காலம் வந்ததும் அவளைக் கண்ட அவன்........

மிகவும் நெருங்கிப் பழகியவன் போல இதுவரை கருதிவந்த அவன் இப்போது அவளைப் பார்க்கக்கூட அஞ்சினன். எப்படி அவளிடம் பேச முற்படுவது என்ற ஆராய்ச்சியிலே பாதி நேரத்தைச் செலவிட்டுவிட்டான்.

மலர் என்ருல் மணம் வெளிக் கிளம்பத்தானே செய்யும்? அது போல அவன் உள்ளம்....இல்லை ....அவர்கள் உள்ளங்கள் சும்மா யிராது, விழிகள் வழியாக ஒன்றுக்கொன்று கருத்துக்களைப் பறிமாறிக் கொண்டன.

ஆணுக்குள்ள தைரியம் பெண்களுக்கு இல்லாததுபோல, கண்களுக்கு உள்ள தைரியம் வாய்க்கும்........

இந்தக்குறை வெகு நாட்களாக நீடிக்கவில்லை. நாளடைவில் கண்களைக் கண்டு வாய்க்கும் தைரியம் பிறந்துவிட்டது. அதன் பலன்? இரு உள்ளங்கள் ஒன்றுபட்டன, நாளடைவில்.

காலமெனும் கதாசிரியர் மாத இலக்கிய ஏட்டினிலே எத்த

ளையோ துயர் படிந்த கதைகளை எழுதிவிட்டார். சுந்தரமும் எத்தனையோ மாதங்கள் சம்பளமும் வாங்கி விட்டான். டாக்டரின் மேஜை மீது 1954ம்நாட்குறிப்பு இடம்பெற்று விட்டது. ஆருவது வகுப்பு படித்துக் கொண்டிருந்த சேகர், ஏழாவது படியில் கால் வைத்து விட்டான்.

இந்த இடைக் காலத்திலேதான் எத்துணை மாறுதல்கள்?

அவன்து விதவைத் தாய் மூப்பு காரணமாக உலகத்தைத் துறந்து விட்டாள், மகனை அனுதரவாக விட்டு விட்டு. முன்பு வீட்டிலே தாயுடன் வசித்து வந்த அவன், இப்போது அதே தெருவில் ஒரு மாடியை வாடகைக்கு அமர்த்திக் கொண்டான். சாயங்காலம் சேகரையும் சேர்த்து, 6,7 பேருக்கு பாடம் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்து விட்டான். இதற்கெல்லாம் மேலாக உள்ளது அன்புத் தெய்வம் தாயை இழந்த அவன், அன்புத் துணைவியாக பவானியை அடையப்பெற்றது தான்.

பவானி! அவனது வாழ்க்கைச்சோலையிலே பூத்துக்குலுங்கும் ரோஜாவாக மாறிவிட்டாள். அன்பெனும் பாதரஸம் பூசப்பட்ட அவன் மனக் கண்ணுடியிலே அவளது உருவம் நிரந்தரமாகப் பதிந்து விட்டது. தான் இந்த உலகில் வாழ்வதும், வீழ்வதும் அவள் கையில்தான் இருக்கிறது என்ற அளவுக்கு முற்றி விட்டது அவர்கள் அன்பு.

கடந்த ஒரு வருட காலத்திற்குள்ளே கற்றுக்கொண்ட பாடங்கள் புதுப்புதுக் கருத்துக்களை அவர்களுக்கு ஊட்டின. களவு செய்பவனையும், காதல் செய்பவனையும் ஒன்ருகக் கருதும் இந்த கயமை உலகத்தில் கருத்தொருமித்த அவர்கள் எப்படி வாழ வழி தேடுவது என்ற பிரச்னையையே கண்ணுகக் கொண்டிதார்கள்.

வயது வந்தோருக்கெல்லாம் வாழ்வுப் பட்டமளிக்கும்

பொருட்டு உலகம் நடத்துகிற அந்தப் போட்டியில், காதல் வாழ்வு எனும் கௌரவப் பட்டம் எப்படியும் அடைந்தே தீர வேண்டும் என்று உறுதி பூண்டனர் இருவரும் —அடையுமளவிற்குத் தகுதியும், திறமையும் அடைந்து விட்டனர். ஆனால்........?

டாக்டரோ தன் வாழ்வுச் சோலையிலே பூத்த மலரை, தனது தமக்கையின் மகன் இராமநாதனின் அன்புக் கோட்டிலே சூட்டி அழகுபடுத்த எண்ணினர். அதன் விளைவு? இராமநாதன் ஒரு வாரம் 'லீவ்' எடுத்துக்கொண்டு டாக்டரின் வீட்டிற்கு வர நேர்ந்தது.

தான் வந்திருப்பதின் உட்கருத்தை ஓரளவு இலைமறை காயாக அறிந்திருந்ததால் பவானியைக் கண்டதும் முன்பைவிட மிகவும் புதுமுறையில்—தாராளமாக—பேச—பழக ஆரம்பித்தான் இராமநாதன். ஆனால் பவானிக்கோ தனது தந்தையின் திட்டம் தெரியாதாகையால் ராமநாதனின் திடீர்ப்போக்கு கண்டு திடுக்கிட்டாள் —இருந்தாலும் ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டாள்.

மறுநாள் காலையில் தந்தை வெளியிட்ட செய்திகள் அவளை ஓர் அபாயக் கடலில் கொண்டு போய்த் தள்ளியது —அவள் திடுக்கிட்டாள் — திணறினாள் — அத்தானின் வருகை எவ்வளவு ஆபத்தானது என்பதை அப்போதுதான் உணர ஆரம்பித்தாள்.

"பவானி! உனக்கோ இந்த வருடத்தோடு படிப்பு முடிந்துவிடும்; அதற்குள் உன்னைக் குடும்பக் கல்லூரியில் சேர்த்துவிட்டால் நல்லது என்பது எனது ஆசை. ஆகவே உன்னை இராமநாதனுக்கே வாழ்க்கைத் துணைவியாக்கிவிடுவது என்று தீர்மானித்து விட்டேன்.

தந்தை வெளியிட்ட தகவல் அவளது வாழ்வுக் கோட்டையைத் தகர்க்கும் வெடிகுண்டுகளாக மாறியது. எதிர்பாராத தாக்குதல் அவளுக்குத் திகைப்பை ஊட்டியது. தகப்பனுருக்குப் பதில் கூறத் தெரியாது திணறினாள்.

"இராமநாதனுக்கு வாழ்க்கைத் துணைவியாவதா? சே! இதயத்திலே இடம் பெற்றுவிட்ட சுந்தரத்தை விலக்கிவிட்டு, அதற்குப் பதில் இராமநாதனை ஏற்றுக் கொள்வது என்பது.........? இல்வாழ்க்கை என்பது வாடகைவீட்டில் குடியிருப்பதைப் போலல்லவே, அடிக்கடி வேறு இடம் மாற்றிக்கொள்வதற்கு? உள்ளம் என்ன கண்ணாடியா பலரின் உருவங்களைப் பிரதிபலிக்க?"

உணர்ச்சியலைகளின் மோதுதலால் உள்ளப் படகு பயங்கரமாக அலைக்கழிக்கப்பட்டது.

"என்ன! பவானி! உனக்குச் சம்மதம்தானே?"

".... ... ..."

"உம்......சொல் பவானி?"

"யோசித்துச் சொல்கிறேனப்பா!"

வார்த்தைகளை இப்படி உதறிவிட்டு உள்ளே ஓடினாள். பவானி மாடியில் நின்றுகொண்டு எட்டாத வானவெளியை நோக்கினாள். உள்ளம் ஊழிக்காலத்து இரைச்சலைப்போல ஓலமிட்டது. எதிர்பாராத தாக்குதலால் சூடேறியிருந்த அவள் உடலைக் காற்றிலே தவழ்ந்து வந்த தென்

றல், மெதுவாக வருடிச் சென்றது

"ஆவல்! தந்தையின் ஆவல்!! அதை நிறைவேற்ற வேண்டுமாம் நான். அப்படியானுல் உள்ளத்தின் ஆவலைப் பலியிட்டால் தான் முடியும்!"

"என்ன! தந்தையின் தணியாத ஆசைக்கு என் வாழ்வைப் பலியிடுவதா?"

"உம்......திருமணம் என்ருல் என்னவென்று எண்ணிக்கொண்டாய்? தனது உரிமையைப் பிற ஒரு ஆடவனுக்கு உயில் எழுதி வைப்பதைப் போல....இல்லை... அட்குவைத்து அடிமையாவதைப் போல........

"இருக்கட்டும்! அந்த நிலை சுந்தரத்திடம் எனக்கு ஏற்பட்டால்......?"

"அதுதான் நடக்காத காரியம். உன் தந்தையின் விருப்பப்படி தான் நடக்கும், உன் விருப்பப்படி அல்ல. இந்தத் திருமணத்திற்கு நீ இசைந்தாலும் சரி, இசையா விட்டாலும் சரி, எப்படியும் உன் கழுத்தில் இராமநாதன் 'மூன்று முடிச்சுகள்' போடத்தான் போகிருன்!"

"மூன்று முடிச்சுகள்! அன்பு, ஒற்றுமை, பணிவு இம் மூன்றையும் ஆதாரமாகக் கொண்டு தான் ஆடவன், ஒரு பெண்ணின் கழுத்திலே மூன்று முடிச்சுகள் போடுகிருன், தாலிக்கயிற்ருல். தாலி! அது பெண் விரும்பும் வாலிபன் கட்டினுல் அன்பு என்ற அறுக்கமுடியாத கயிருகும். விருப்பமில்லாத வாலிபன் கட்டினுல், அது வாழ்வையே சிறுகச் சிறுகச் சித்திரவதை செய்யும் தாம்புக் கயிறுதான். பிறகு அவன் போட்ட அதே மூன்று முடிச்சுகள் வெறுப்பு, பித்து, மனக் கசப்பு இவைகளை உருவாக்கிவிட்டு, கடைசியில் அவள் வாழ்வையே தற்கொலையில் முடிக்கும் தாம்புக் கயிற்றின் மூன்று முடிச்சுகளாக மாறி விடும்!"

"எது எப்படியானுலும் சரி! கடைசியில் தந்தையின் விருப்பம் தான் நிறைவேறும்! மணப் பெண்ணின் மனதறிந்து நிறைவேற்ற, எளிதில் சம்மதமளிக்க சமூகம் இடம்தரவே செய்யாது."

உள்ளத்திற்கும் உணர்ச்சிக்கும் நடந்த போராட்டம் அவள் சிந்தையைக் கலக்கியது. காதல் வாழ்வெனும் கௌரவப் பட்டம் எப்படியும் அடைந்தே தீருவது என உறுதி பூண்டாள். அதற்காக அந்த அந்தி நேரத்திலே, ஆதவன் மலைக் குகையினுள் நுழையும் போது அவனைத் தொடர்ந்து அன்னநடை பயிலும் அழகு அம்புலி போல, பவானி ஆசைக் காதலன் சுந்தரத்தின் மாடியறைக்குச் சென்ருள்.

அவள் வரவு ஆச்சரியத்தையும் ஆவலையும் ஒருங்கே ஊட்டியது சுந்தரத்திற்கு.

வண்டுதான் மலரை நாடி வரும் என்பார்கள். ஆனுல் வண்டை நாடிவரும் மலரைப் பார்ப்பது என்பது......?

நம் காதலின் கவர்ச்சி அவளை இங்கு கொண்டுவந்து நிறுத்தி விட்டது என்பதை எண்ணி, காதலின் திண்மையை உணர்ந்தான். ஏதோ பத்திரிகைக்கு கதை எழுதிக்கொண்டிருந்த அவன் துள்ளியெழுந்து வரவேற்ருன். ஆனுல் அப்போது அவள் அழகு வதனத்திலே நிலவிய துயரக் கோடுகளைக் கண்டதும்......?

"பவானி உன் முகம் ஏன் வாட்டமுற்றுக் காணப்படுகிறது?"

"மலருக்கு தன்னைப்பற்றிய கவலை வந்துவிட்டது."

"தன்னைவிட்டு வேறுமலருக்கு வண்டு தாவிவிடும் என்ற பயமா?"

"என் அன்பர் வண்டு மனப்பான்மை கொண்டவரல்ல! இது எனக்கு நன்கு தெரியும்."

"பின் எதற்காக.... ....?"

"சுந்தரம்! மொட்டாக இருக்கும் மட்டும் தான் பாதுகாப்பு அளிக்கிறான் தோட்டக்காரன். பிறகு அது மலர்ந்துவிட்டால்....? அதைப் பறித்து யாருக்காவது மணம் நுகர அளித்துவிடுகிறானல்லவா?"

"மலருக்கு மனம் கிடையாது. மங்கைக்கு அப்படி அல்லவே!



போர்ட்டர்:—மயக்கம் தெளிஞ்சதும் ஐயாவைத் தூக்கிக்கிட்டு வந்ததுக்கும் சேர்த்து கூலி போட்டு கொடுப்பாரு பேசாமெ வா அண்ணே"

மனமிருக்கிறது. மனத்தில் உணர்ச்சிகள் ஏராளமாக இருக்கிறது. அது யாருக்குத்தான் வழங்கப்பட வேண்டுமென்ற உறுதியிருக்கிறது!"

"இருக்கலாம்! கடலில் செல்லும் கப்பலைக் கவிழ்க்க திமிங்கலத்தால்தான் முடியுமே தவிர கேவலம் நத்தையால் முடியாதே; அதுபோல்தான், சமூகத்தை எதிர்த்துப் போராட......!"

"பவானி! உன் வார்த்தைகள் என்னை ....?"

"ஒரு பெண்ணின் வாழ்வு வறட்சியாகு முன்பு காணும் அறிகுறிகள். சுந்தரம்! என் தந்தை என்னைக் குடும்பக் கல்லூரியில் சேர்த்துவிடுவது என உறுதி பூண்டுவிட்டார். அதற்காக உபாத்தியாயரையும் தேர்ந்தெடுத்துவிட்டார்!"

"அப்படியானால் நம் பாதை இரண்டாகப் பிரியவேண்டியதுதானா?"

"உம்.........பாதை இரண்டாகப் பிரிந்து பாலைவனத்தை நோக்கிச் செல்வதைவிட, நிலமே இரண்டாகப் பிளந்து நாம் பலியாகி விட்டால் எவ்வளவோ நல்லது. சுந்தரம்! அறிந்தோ அறியாமலோ என் கண்களின் கருமணி வழியாக கருத்தினுள் புகுந்துவிட்டீர்கள்; எனது வாழ்க்கைப் பாதையின் ஒரே வழித்துணையாக நான் தங்களையே தேர்ந்தெடுத்துவிட்டேன்! அதன் காரணமாக கரடு முரடான பாதையையும் பொருட்படுத்தாது காத தூரம் வந்து விட்டோம். இருவருமே இந்த நிலையில் நான் தங்களை இழந்துவிட்டு வேறொரு வழித்துணையுடன் செல்வது என்பது.... ...."

"பாதையோ கரடு முரடு, இரு புறமும் நச்சுப் பாம்புகள் வளர்ந்து கிடக்கும் முட்புதர்கள்—செல்லும் நேரமோ இருட்டு—இந்த நிலையில் நாம், பாதை கடந்து இன்பச் சோலையை அடைவது என்பது......"

"அப்படியானால் நாம் கொண்ட அன்பு—அது இணைத்த காதல் பாலம் — கணப் பொழுதில் இடிந்து விழ வேண்டியதுதானா? என் தந்தையின் விருப்பப்படி கலியாண பீடத்திலே என்னையே நான் பலியிட்டுத்தான் தீர வேண்டுமா?....

"பவானி! அந்தி நேரம்! ஆதவனைத் தேடி அழகு நடை பயிலும் அம்புலி வருகிற நேரம்! எவ்வளவு அழகாக இருக்கிறது, ஆனால் சிறிது நேரம் சென்று விட்டால்....இருள் சூழ்ந்துவிடும்! அதுபோல்தான் காதலும் நம் நாட்டைப் பொறுத்தவரையில்!"

"நாம் ஒன்று பட்டோம் உள்ளத்தால் இந்த உரிமையை உயிருள்ள வரைக்கும் நிலை நிறுத்த போராட வேண்டும்! அதற்கு வழி.......?"

"வழியா?"

"ஆம்! சுந்தரம்! என் வாழ்வின் இன்ப உயிலை நான் தங்களுக்கு எழுதிவைத்து விட்டேன். அதை வேறொருவர் அபகரிக்கும் முன்பே நாம் அவர்கள் கண்களினின்றும் மறைந்து விட்டால்.......?"

"மறைந்து விடுவதா?"

எங்கு வஞ்சகமும் வக்கிரபுத்தியுமில்லையோ, எங்கு காதல் செய்வது கண்ணியம் எனக் கருதப் படுகிறதோ, அங்கு செல்வோம் நாம். அதற்கு வேண்டிய வாழ்வுத் தேவைகளுடன் நான் வருகிறேன். எப்படியும் இந்த சூது மதியினர் கண்களினின்றும் நாம் தப்பித்தாக வேண்டும். அன்பன் என்ற சொல்லை மாற்றி 'அத்தான்' என்றழைக்கும் அரிய வாய்ப்பை எனக்குத் தாருங்கள்! சுந்தரம்!"

"களவு செய்பவன் கூட தப்பித்துக் கொள்ள வழியுண்டு. ஆனால் காதல் செய்பவன் தப்பவே முடியாது. பவானி! உன்னோடு வாழும் பேறு எனக்குக் கொடுத்து வைக்கவில்லை. அவ்வளவுதான். நீயாவது இராமநாதனுடன் சுகமாக........"

"இதுதானா தங்கள் முடிவு? எனது கோரிக்கையை தாங்கள் மறுத்துவிட முடிவு செய்து விட்டீர்களா?"

"அப்படியில்லை பவானி! எவ்வளவோ எதிர்ப்புகள்—இதைக்

ஆசிரியர் :—டேய் கழுதை! கண்ணிருந்தும் குருடன் யார்?

மாணவன் :—என்னை நேரில் பார்த்துக் கொண்டே கழுதை என்று சொல்கிற தாங்கள் தான் சார்!

கடந்து நாம் ஒன்று சேருவது என்பது முடியாத காரியம். அப்படியே ஒன்று சேர்ந்தாலும் போர்க்களத்திலே வீரன் கலியாணம் செய்து கொண்டதைப் போலத்தான் ஆகிவிடும், எப்போது ஆபத்து வருமென்று கூற முடியாதபடி!''

''உம்....இவ்வளவு பயந்த உள்ளம் கொண்டவர்கள்தான தாங்கள்?.... எனக்குள்ள தைரியம் கூட தங்களுக்குக் கிடையாதா?'' பயந்த உள்ளம் கொண்ட நீர், இந்த பாவையின் மனத்தை ஏன் அபகரித்துக் கொண்டீர்?..என்னை ஏன் காதலித்தீர்?'' ஆசைகாட்டி மோசம் செய்வதை விட ஆரம்பத்திலேயே மறுத்திருக்கலாமே? இப்போது காதலின் வேண்டுகோளைப் புறக்கணித்துவிட்டு, அவள் துடிதுடித்துச் சாவதைக் கண் குளிரப் பார்த்துக் கொண்டிருக்க முடிவு செய்து விட்டீரா?''

''தவருக எண்ணுதே பவானி! நம் காதல் அழியாதது!''

''நேற்றுவரை இந்த மாதிரி சொற்கள் அமுதமாகத்தான் காட்சியளித்தது எனக்கு; ஆனல் இன்று.......! சுந்தரம்! இதை விடத் தங்களுக்கு என் மீது காதலே இல்லையென்று கூறி விடுவதுதானே? அப்போதாவது, 'நம்பியிருந்தவன், தன்னை நட்டாற்றில் விட்டு விட்டான், முதன் முதலிலேயே கண்டதும் கருத்தைப் பறிகொடுத்தது என் குற்றம்தான்—அதற்குரிய தண்டனைதான் இது' என்று ஏற்றுக் கொண்டிருப்பேனே! அதை விடுத்து இப்படி ஏன் சித்திர வதை செய்கிறீர்கள்? ஆரம்பத்திலே—கண்ணும் கண்ணும் சந்திக்கும் போதே தாங்கள் கொஞ்சம் முகத்தைச் சுழித்திருந்தாலும் போதுமே! நான் விலகிக் கொண்டிப்பேன், தங்கள் பாதையினின்று. அதைத் தாங்கள் செய்யவில்லை. காதலுக்காக போராடும் வலிமையிழந்த நீர், வலிய வந்து என்னை ஏற்றுக் கொண்டீர்! இப்போது வஞ்சகர்களின் பயமுறுத்தல் கண்டு என்னை உதறிவிட விரும்புகிறீர்! அப்படித்தானே! உம் ... காதல் என்பது ஆண்கள் விரிக்கும் அபாயவலை! அதிலே பெண்ணினமாம் புள்ளினம் சிக்கிச் சீரழியவேண்டும்.......... இதுதானே காதலைப்பற்றிய தங்கள் முடிவு?''

''அன்று நான் தங்களை விரும்பினேன்—அதன் பலன்? இன்று நடுக் கடலில் பேரலைகளைச் சமாளிக்கும் திறனிழந்து திண்டாடுகிறேன். உம்........பரவாயில்லை! இதயத்திலே இடம் பெற்ற என் அன்பரே என்னை நடுக் கடலில் தள்ளிவிடும் போது...நான் குமுறும் அலைகளுடன் போட்டியிட விரும்பவில்லை! உடனே சமாதானம் செய்துகொள்ளவே விரும்புகிறேன்....எனது தகாத போக்குக்கு இதுவும் வேண்டும்........ இன்னமும் வேண்டும்......சரி.... போகிறேன்....சுந்தரம்....''

இதுகாறும் சூடேறிக் கொண்டே வந்த உள்ளம் உணர்ச்சிக் கனல்களை கக்கி முடித்தது. அவள் விறுவிறுவென்று வெளியே நடக்க முற்பட்டாள்,

என்ன செய்வது என்று புரியவில்லை சுந்தரத்திற்கு, சமூகத்திற்குப் பயந்தால் காதல் கருக்கப்பட்டுவிடும். அதனல் ஒரு கன்னியின் வாழ்வு கருகிய மொட்டாக ஆக்கப்பட்டுவிடும்!

கன்னியின் வாழ்வு பாழாகி விடுமே என்று பயந்தால் சமூகமே எதிர்த்துவரும்! உம்...... சமூகத்தின் எதிர்ப்புக்காக ஒரு பெண்ணின் வாழ்வைப் பலியிடுவதா! முடியாது......முடியவே முடியாது.......

எண்ண மின்னல்கள் மின்னின இதய வானில். அந்த ஒரு கணப் பொழுதில் தெரிந்த வெளிச்சம் அவனுக்கு ஒரு புதிய பாதையைக் காட்டியது. அதன் பலன்? அவன் வாய் திறந்தது திடீரென்று.

"பவா........னி.......!"

வாசற்படிவரை சென்ற அவள் திரும்பினாள். ஆனால் பேசவில்லை. கயல் விழி—அது கொண்டுள்ள காந்த சக்தி—அது அனுப்பும் தூது—அதிலடங்கிய இன்ப வார்த்தைகள்—அவனுக்கு புதிய உற்சாகத்தை ஊட்டியது. அவன் மலர்ந்த முகத்தோடு பவானியைப் பார்த்தான்.

"பவானி! இப்போது போ வீட்டிற்கு! நாளை வா! நடு இரவு இங்கிருந்து புறப்படும் ரயில் நமக்கு சென்னைக்கு வழி காட்டட்டும்! அதற்குரிய தேவைகளோடு நீ வந்து சேர்! நானும் தயாராக இருக்கிறேன்! ரயில் புறப்படும் நேரத்திலே நாமும் புதுவாழ்வு தொடங்குவோம்! அதற்கறிகுறியாக இன்ப கீதமாக ரயிலின் ஊதல் அமையட்டும்! சரிதானே பவானி! நாளை இரவு வருவாயா நீ.... ....?"

திரும்பிய அவள் வதனம் திடீரென்று மலர்ந்தது. கண்களிலே மீண்டும் கவர்ச்சி தோன்றியது.

"சுந்தரம்! தங்கள் அன்பின் ஆழத்தை அறியாது, ஏதேதோ உளறிவிட்டேன்! மன்னித்து விடுங்கள்!

வாசற்படியில் நின்றுகொண்டிருந்த அவள் உடனே ஓடிவந்து அவன் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

ஆனந்தம் பொங்கியது, இருவருக்கும். வாழ்நாள் முழுவதும் வீணாகக் கழிக்க நேர்ந்தது குறித்து சற்று முன்பு கவலைப்பட்ட அவர்கள் இப்போது வழி தெரிந்ததும் களிப்புக் கடலில் நீந்த ஆரம்பித்தார்கள்.

"அன்பன் என்ற சொல்லை மாற்றி 'அத்தான்' என்றழைக்கும் உரிமையைப் பெற்றுவிட்டேன் சுந்தரம்!"

காதல் பாதை பிரிகிறது என்று பயந்த பவானி இப்போது உணர்ந்து கொண்டாள்; சிறிது நேர ஓய்வுக்குப் பிறகு மீண்டும் அதே பாதையில் பிரயாணம் தொடங்கி விட்டோம் என்று.

அன்றிரவு பூராவும் தூக்கம் வரவில்லை அவளுக்கு, துக்கத்தால் அல்ல. நாளை முதல் நடத்தப்போகும் புதுவாழ்வு பற்றிய எண்ணங்களின் அலை மோதுதலால்.

மறுநாள் இரவு வந்தது. தான் இதுவரை கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்து வைத்த இரண்டு பச்சை நோட்டுகளை எடுத்துச் சுந்தரத்திடம் கொடுத்தாள்—இந்த ஒருவித வழித்துணைத் தவிர வேறு எதையும் அவர்கள் எடுத்துக் கொள்ளவில்லை. சரியாக இரவு இரண்டு மணியிருக்கும், அவர்கள் ரயில்வே நிலையத்தை அடையும்போது.

சென்னைக்கு இரு டிக்கட்டுகள் எடுத்துக்கொண்டு, சற்று தூரத்திலே நின்றுகொண்டிருந்த பவா

னியை நோக்கி நடந்தான் சுந்தரம். அதே சமயத்திலே இருவரையும் நோக்கி ஒருவர் வந்து கொண்டிருந்தார்.

வந்தவர் யாருமில்லை—டாக்டர் தான். பக்கத்தூரில் ஒரு அவசர கேஸுக்கு செல்ல வந்த அவர் கண்களில் தற்செயலாக பவானியின் உருவம் தென்பட்டது. திடுக்கிட்டார் அவள் தனியாக நிற்பதின் உட்கருத்து விளங்காதபடி.

திரும்பினர்—சற்று தூரத்தில் சுந்தரம் வந்துகொண்டிருப்பதைக் கண்டார்—அவன் கையிலுள்ள இரு டிக்கட்டுகள் அவருக்கு ஓரளவு உண்மையை உளவு சொல்லியது. அதை மையமாக வைத்து, இதற்கு முன் நடந்தவைகள்—இப்போது நடக்கப் போகிறவை—இவைகளை ஒருவாறு ஊகித்துக்கொண்டார். அவ்வளவுதான்! உணர்ச்சியலைகள் மோதின உள்ளத்தில். வெகுளி அவரை உந்தித்தள்ள ஓடிவந்தார்.

"பவானி! அடி பாவி.... ...!"

ஓடிவந்த டாக்டர் பவானியின் கன்னத்திலே ஒரு அறை அறைந்தார். திடீரென்று கேட்ட தந்தையின் குரல்—அதைத் தொடர்ந்து அவர் அளித்த பரிசு—இவைகள் அவளைத் திணற வைத்தது.

"ஐயோ! என் தந்தை! இங்கு எங்கு வந்தார்? எங்கள் வாழ்வை செப்பனிட, வளமாக்க அவரால் தான் முடியவில்லை—நாங்களாகவே வளமாக்கிக் கொள்கிறோம் என்று புறப்பட்டால் அதற்கும் தடையா?"

பவானிக்குக் கொடுத்த பரிசை பிறகு சுந்தரத்திற்கும் கொடுப்பதற்காக டாக்டர் திரும்பினர். ஆனால் அதற்குள் மகள் ஓட முற்பட்டுவிட்டது கண்டு, பவானியைப் பின்தொடர ஆரம்பித்தார்.

பவானி திடீரென்று வெளியே ஓட ஆரம்பித்தாள், தான் ஓடினல் தகப்பனும் தன்னைப் பின் தொடருவார், ஆகவே சுந்தரம் எப்படியும் தப்பித்துக்கொள்ள வழியிருக்கிறது. அவராவது எங்காவது சுகமாக வாழ்ந்தால் போதும் என்ற நல் எண்ணத்துடன்.

சுந்தரத்திற்கு யாது செய்வது எனத்தெரியவில்லை. சற்று முன்பு காதலில் வெற்றியடைந்து விட்டதாகக் களிப்புக் கொண்ட அவன் உள்ளத்தில் கவலைக் கார்மேகங்கள் சூழ்ந்துகொண்டன.

போரிலே வீரமாகப் போர் புரிந்து வெற்றியோடு திரும்பிய வீரனை, மரத்தின் பின் ஒளிந்திருந்த ஒற்றன் அம்பு எய்து கொல்வது போலாகிவிட்டது. தான் கஷ்டப்பட்டு கட்டிய அழகு மாளிகையின் அமைப்பைக் காண விழைந்தவனையும்சேர்த்து, மாளிகையே புயலால் தாக்குண்டதைப் போலாகியது, அவன் உள்ளம்.

"காதல் வாழ்வு! போர்க்களத்திலே வீரன் கலியாணம் செய்து கொண்டதைப் போலத்தான் ஆகும், ஆபத்து எப்போது வரும் என்று கூறமுடியாதபடி."

இந்த எண்ண மின்னல்களின் இடைவிடாத தாக்குதல்களினல் மௌனச் சிலையாக நின்றான் சுந்தரம்.

திடீரென்று அவன் மோனநிலையைக்கலைத்தது, ரயிலின் ஊதல். சுந்தரம் மெதுவாக நடக்க ஆரம்பித்தான் ரயிலை நோக்கி.

''பவானி! நம் தூய காதலை, உலகம் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டது. நாமிருவரும் ஒன்று சேருவது என்பது முடியாத காரியம். நான் விரும்புவது எல்லாம் எப்படியும் நீ சுகமாக வாழவேண்டும்! நான் அதற்காக என்னையே பலியாக்கி விடுகிறேன்! ஆம்.... போகிறேன்! இங்கிருந்து.... .... இந்த ஊரைவிட்டு.... ... உன் கண்களில் இனி பட்டு உன்னைத் தொந்தரவு செய்யமாட்டேன். நான் போகிறேன். உன்னை என் இதயத்தில் தாங்கியபடி.''

சிறிது நேரத்திலே சுந்தரத்தின் துயர உடலைச் சுமந்துகொண்டு ஓடியது ரயில்.

இந்தச் சப்தம் என் வாழ்வின் இன்பகீதமாக ஒலிக்கும் என எதிர்பார்த்திருந்தேன். ஆனால்..... இப்போது... ....இன்னல் கடலின் பயங்கர ஓலமாக மாறிவிட்டது.

ரயிலின் ஊதல் அவன் சிந்தனையைக் குழப்பியது.

சென்னையை அடைந்த அவன், பவானியை இதயத்தில் தாங்கியபடியே ஊர் முழுவதும் அலைந்தான், மஜ்னுவைப்போல.

இரவு வந்தது. மிகக் களைப்போடு ஒரு வீட்டின் திண்ணையில் அமர்ந்து கொண்டு கண்களை இறுக மூடிக்கொண்டான், ஆனால் அப்போதும் கூட; உள்ளேயிருந்து வந்த குரல், அவனைத் தனது காதல் ஏட்டின் பழைய பிரதிகளைப் புரட்டிப் பார்க்கச் செய்தது.

* * *

விடிந்து விட்டது என்பதை அறிவிக்க காகம், சேவல் இரண்டுக்கும் போட்டி நடைபெற ஆரம்பித்தது. கண்களை மூடிக்கொண்டே கடந்துபோன காதல் நினைவுகளால் பிணைக்கப்பட்டிருந்த அவன், கண்களைத் திறந்து உலகை ஏறிட்டுப் பார்க்க விரும்பவில்லை.

வானம் நன்றாக வெளுக்க ஆரம்பித்தது. ஆனால் அவன் வாழ்க்கை வானத்தில் மூடியிருந்த கரிய இருள் மட்டும் ஏனோ விலகவில்லை. இன்னும் இருள் சூழ்ந்தபடியே இருக்க முடிவு செய்து விட்டது. ஆம்! அவன் வாழ்வு ''விடியா இரவு'' தானே.

*

ஸ்டுடியோ முதலாளி:— நீ தானப்பா மேக்கப் வேலைக்கு அப்ளிகேஷன் போட்டது.

மேக்கப்மேன் :—ஆமாங்க!

முதலாளி :—இதற்கு முன்பு எங்கே வேலை பார்த்தாய்?

மேக்கப் :—வீடுகளுக்கு சுண்ணும்பு அடித்து பழகி இருக்கேனுங்க!

அன்றும் இன்றும்

புலவர் சி. உண்மையொளியான்

வாழ்க்கை

பண்டைநற் றமிழர் கண்ட பண்புடை வாழ்க்கை தன்னில்
கண்டநற் கருத்தை யானும் கழறுவன் கருததாய்க் கேளீர் !
அண்டத்து மக்கள் போற்ற அகம்புற மென்ற வாழ்க்கை
மண்டியே மாசில் லாது மற்றவர் போற்ற வாழ்ந்தார்.

நல்லவராதல் வேண்டின் வள்ளுவர் குறளைப் போற்றித்
தொல்லோர்கள் பண்பு கொண்டு தூய்மையைப் பரப்பி மேலும்
வல்லராம் மேனாட் டாரின் வழியினைக் கொண்டு நாமும்
அல்லலை நீக்கும் நல்ல ஆராய்ச்சி யுடைய ராவோம்.

தமிழ்

வந்தநல் விருந்து போற்றி வாழ்க்கையின் சிறப்புக் கண்டு
நந்தமிழ் உயிராய்க் கொண்டு நானிலம் போற்ற வாழும்
அந்தமில் புகழைக் கொண்ட அறிஞராம் புலவர் போற்றும்
செந்தமிழ் சிறப்பே கண்ட செம்மையோர் பல்லோர் வாழ்ந்தார்.

இன்றுதான் தமிழைப் போற்று மியல்பினர் குறைந்த தாலே
மன்றங்கள் சிறக்க வாழ்ந்த மாண்புடைத் தமிழின் மேன்மை
குன்றியே கலைஞர் வாழ்வும் கலைகளும் குறைந்த தம்மா !
நன்றிசால் மக்க ளாயின் நாமவை போற்றல் வேண்டும்.

நூற்றுக்கு நூறுய் மக்கள் நுண்மையாய்ப் படித்தா ரன்று
சோற்றுக்கும் வழியில் லாது சோம்பேறி யானா ரின்று
காற்றுள்ள போதே தூற்றும் கண்ணிய மில்லா தன்றோ
வேற்றுமைப் பட்டு மக்கள் வீரிய மிழந்தா ரின்றே.

அரசு

மன்னனே நாட்டிற் கெல்லாம் மாண்புடை யுயிர தாகும்
என்னுநல் கருத்தைக் கொண்ட ஏறெனும் மன்னர் வாழ்ந்தார்
அன்னதால் செல்வம் கண்டு அறிஞர்கள் போற்றி னர்கள்
இன்னநா ளக்க ருத்தை யெண்ணுவா ரிலரே யம்மா !

அரசரை யரச ராக்கும் அறிஞர் தானன்று வாழ்ந்தார்
வரிசையில் மக்க ளெல்லாம் வளந்தனை சேர்க்கக் கண்டும்
உரைசெயா வாளா நீவிர் உலவிடல் வாழ்க்கை யாமோ ?
கரைசேர வேண்டு மாயின் கழகமாய் ஒன்று சேர்வீர் !

ஏழைபணக் கார னென்ற யேய்ப்பாடு தானன் றிலலை
கோழையாய் வாழ்ந் திடாதீர் குவலயம் தன்னில் நீவிர்
வாழையை வெட்டிட் டாலும் வளர்ந்திடும் சிங்கம் போலப்
பேழையில் முடக்கும் செல்வம் பெருமையாய்ப் பகுக்கச் செய்வீர்

புலவர்கள்

புலவர் களென்றால் நாட்டில் பொன்னெனக் கொண்டா ரன்று
கலகமே விளைந்த போதும் களமதிற் சென்று நின்று
உலகமே யுணரும் நல்ல உயருரை யாற்றிச் சென்ற
நிலமையை யுன்னின் அன்னார் நீர்மைதான் சிறப்ப தம்மா !

குற்றமே கண்ட போது குவலய மெதிர்த்திட் டாலும்
வெற்றிசால் வீரச் சொற்கள் விளம்பியே விளக்கா நிற்பர்
கற்றவர் போற்ற மேலும் கழறுவர் குற்றங் காணின்
மற்றவ ரரச ரேனும் மாண்புடைச் செயல்செய் வாரே.

காதல் வாழ்க்கை

காதல ரென்ரு லாண்பெண் கருத்தொரு மித்து வாழ்தல்
ஆதலை யெண்ணி வாழ்ந்த அறிஞர் களன்று வாழ்ந்தார்
சாதலே வந்திட் டாலும் சற்றுமே பிரிந்தி டார்கள்
பேதமே யில்லா தன்று பெருமையாய் வாழ்க்கை பூண்டார்,

கண்ணுறும் போது காதல் காரிய முடிந்த பின்பு
நண்ணுறும் காலைதன் னில்நா ஞரோ நீயா ரென்பர்
பண்ணுற வேண்டின் யாழில் பதிவுறும் நரம்பு போல
எண்ணுறும் போது கூடு மியல்பில் லாரின் றுவாழ்வார்.

சாதிப் பிரிவு

சாதிகள் அன்று இல்லாச் சமனிலை காண வேண்டின்
ஓதிய நூல்கள் சொன்ன உண்மையை யுன்னு வீரே
ஆதியில் மனித ரெல்லாம் அருங்குலம் ஒன்றுய்க் கொண்டார்
நீதியில் மக்கள் தானே நிலையில்லாச் சாதி கண்டார்.

சங்ககா லத்து மக்கள் சாதியை வகுத்தா ரில்லைத்
துங்கமே யுடையா ராகித் தொல்குலம் ஒன்றுய்க் கண்டார்
மங்கிய யிடைக்கா லத்தே மல்கிய சாதி தானும்
பங்கமே செய்து யின்று பலரையும் பிரித்தல் காணீர் !

பிறப்பொக் குமெல்லா மென்ற பெருமைசால் நாய னரின்
சிறப்பினைக் கண்டால் சாதி செய்தொழில் கண்ண தேயாம்
மறப்பினுல் இன்று வாழ்வார் பிறப்பினுற் சாதி யென்பார்
சிறப்பிணு லதனை நீவிர் சிந்தையிற் கொண்டுய் வீரே !

தொழில் நிலை

எலிமயிர் கொண்டும் நல்ல எழில்மிக்கக் கம்பளங்கள்
கலிமகிழ் சிறப்ப நெய்தக் கலைவல்லார் வாழ்ந்தா ரிங்கு
நலிவுற்ற தொழில்க ளின்று நாமினிச் செய்வ துன்னின்
மலிபெருந் தொழில்கள் மல்க மாண்புடன் உழைத்தல் வேண்டும்

தொழில்களைச் செய்வார் தன்னைத் தோழரா யெண்ணி வாழ்க !
இழிவாகக் கருதி நீவிர் புதுச்சாதி வகுத்திடா தீர் !
தொழில்செய் வாரிந் தநாட்டிற் துலங்குறு கண்க ளொப்பார்
வழிபல கண்டு அன்னுர் வாழ்க்கைக் குத்துணை செய்வீரே !

முடிவு

இந்நற் பண்பை யெல்லாம் இயல்புட னுய்ந்து மேலும்
பந்தமே கொண்டால் நாமும் பல்புகழ் பெறுதல் திண்ணம்
செந்தமிழ் நாளும் போற்றுஞ் செம்மலாய் வாழ்வீ ராயின்
நந்தமிழ் நாட்டைப் பெற்று நானிலஞ் சிறக்க வாழ்வோம்.

ஓடிப்போனவள்..

பொன். கு. கோதண்டபாணி

"சுசீலா! எங்கேயம்மா இருக்கே? கல்யாண கடிதத்தைப் பார்த்தாயா? இதோ! இங்கே வா" என்ற குரலெழுப்பிக் கொண்டே மாடிப்படியைக் கடந்து அறைக்குள் பிரவேசித்தாள் சொர்ணம்மாள்.

கையிலிருந்த புத்தகத்தைத் திருப்பி வைத்துவிட்டு எதிர் நோக்கி வந்த சுசீலா "யாருக்கம்மா கல்யாணம்? அப்பாவிடம் கொடுப்பது தானே அந்தக் கடிதத்தை" என்று கூறிய படியே தாயார் கொண்டுவந்த கடிதத்தை அவசர அவசரமாக பிரித்துப் படிக்கத் துவங்கினாள். சுசீலாவின் பார்வை கடிதத்தின் மீது விழுந்ததோ இல்லையோ அவளது முகம் மின்னல் வேகத்தில் மாற்றம் கொடுத்தது. கடிதத்தைப் பிடித்துக்கொண்டிருந்த அவளது கை விரல்களில் நடுக்கங் கண்டன. மேலால் படிக்க அவள் கண்கள் மறுத்தன; என்ன சொல்வதென்றுத் தெரியாமல் திணறினாள். தன்னை ஒருவாறு சமாளித்துக்கொண்டு பேச வாயெடுத்தாள், ஆனால் வார்த்தைகள் குளறிக்கொண்டு தட்டுப்பட்டன. ஒரு கண நேரத்தில் இவ்வளவு மாறுதலும் சுசீலாவிடம் கண்ட சொர்ணம்மாளுக்கு என்ன என்றே புரியவில்லை.

"என்ன சுசீலா? ஏன் ஒரு மாதிரியாக இருக்கின்றாய்? கடிதத்தில் ஏதாவது..." "அப்படியொன்றுமில்லையம்மா, இன்னும் கொஞ்சநாட்கள் பொறுத்து கல்யாணத்தை வைத்துக் கொண்டிருந்தால் எவ்வளவோ நன்றாக இருக்கும். எனக்கோ பிள்ளைப் பருவம். பள்ளிப் படிப்பும் முடியவில்லை. இதற்குள்ளாக ஏனம்மா எனக்குக் கல்யாணம். அப்பாவுக்குத்தான் இதெல்லாம் தெரியாவிட்டாலும் நீங்களாவது சொல்லித் தடுத்திருக்கலாமே" என்று பலவாறாக தன் உள்ளத்திலிருந்த உண்மைக் கருத்தை மறைத்து ஏதேதோ கூறி எண்ணத்துக்குத் திரை போட முயன்றுக் கொண்டிருந்தாள் சுசீலா. இந்த சில வார்த்தைகள் வெளிப்படுவதற்குள்ளாக அவள் முகமெல்லாம் வியர்க்கத் தொடங்கிவிட்டது, வியர்வைத்

துளிகள் ஒன்றிரண்டு முத்தாடவும் தொடங்கின.

சொர்ணம்மாளுக்கு இதையெல்லாம் பார்க்கும் போது ஒன்றுமே புரியவில்லை. "என்ன இருந்தாலும் நீ கல்யாணம் செய்துக்கொள்ள வேண்டியவள் தானே. உன்னொத்தப் பெண்கள் காலா காலத்தில் புருஷனும் பிள்ளைகளுமாகக் காலந் தள்ளும் போது நீ மட்டும் வீட்டிலும் பள்ளியிலும் அடைபட்டுக் கிடக்க என்ன வேண்டியிருக்கிறது! நாங்கள் இருக்கும் போதே இந்தக் கண்களால் பார்த்துவிட்டுப் போகலாமென்றுதான் இந்த ஏற்பாட்டில் இறங்கினேம். நல்ல இடமாகப் பார்த்து செட்டும் சீருமாக படித்தவரைத்தான் உனக்கு முடிச்சிருக்காரு, உன் அதிருஷ்டத்துக்குத்தான் என்ன குறைச்சல், கல்யாணம் ஆனபின் மட்டும் படிக்கக் கூடாதா? மனமுண்டானல் மார்க்க மில்லாமலாப் போகும். மனதை தைரியப் படுத்திக்கோ, அசடாட்டும் எதை எதையோ எண்ணி மனதைப் புண்ணுக்கிக் கொள்ளாதே! நீ கண்ணீர் வடித்துக்கொண்டிருப்பதைப்பார்த்து உன் அப்பா ஏதாச்சும் நினச்சிக்குவாரு. அப்புறம் என் தலைக்கு தீம்பைக் கொண்டு வந்து சேர்க்காதே அம்மா? வீண் பழியை சுமத்திக்கொள்ளாதே"

இப்படி சில இதோபதேசங்களை எடுத்து வீசிவிட்டு சொர்ணம்மாள் மாடி அறையிலிருந்து கீழே இறங்கினுள்.

சுசீலாவுக்குக் கல்யாணம் நடக்கப் போகும் செய்தி எங்கும் பரவியது. அவளுடன் படித்த சில வாயடிப்புப் பெண்கள் சம்மனில்லாது ஆஜராகிவிட்டார்கள் சுசீலாவின் மாடி அறையில். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக நையாண்டி செய்யத் தொடங்கினர், அவளது எதிர்கால வாழ்வைப் பற்றி. அப்பொழுது சுசீலா என்ன செய்துக்கொண்டிருப்பாள், எப்படி எப்படி புருஷனிடம் நடந்துக்கொள்ளப் போகிருள் என்பதை யெல்லாம் முன் கூட்டியே ஜோஸ்யம் கணிக்கத் தொடங்கிவிட்டார்கள். சுசீலாவின் "முதல் இரவு" நிகழ்ச்சிகளைக் கூறி சிரிக்கவைக்க முயற்சித்துக் கொண்டிருந்தார்கள் ஒரு சிலர்.

அவர்களது வருகை சுசீலாவுக்கு மேலும் வேதனையைத்தான் தந்தது. அவர்களது பேச்சுகள் அத்தனையும் அவசியமற்றதாகத் தோன்றியது.

ஞானசம்பந்தர் நடக்க வேண்டிய காரியங்களைக் குறித்து தன் மனைவி சொர்ணம்மாளுடன் பேசிக்கொண்டிருந்தார். எப்படி எப்படியெல்லாம் நடைபெற வேண்டுமென்றதற்கான் திட்டங்களைத் தீட்டும் வேலையில் தீவிரமாகச் சென்றுக் கொண்டிருந்தது அவர் மூளை. எங்கெங்கு பந்தல் போடவேண்டும். பந்தலை அலங்கரிக்கும் சாமான்களை யாரிடம் வரவழைப்பது. விருந்து வகைகள் எப்படி நடக்க வேண்டும். மாப்பிள்ளை தங்குமிடத்தை எவ்வாறு அலங்கரிக்கலாம். மாலை நிகழ்ச்சியை கச்சேரியில் கழிக்கலாமா அல்லது சாதாரண இங்கிலீஷ் 'பேண்டோடு' முடித்து விடலாமா, இப்படியெல்லாம் அவரது சிந்தனை ஓட்டம்சென்றுக் கொண்டிருந்தது.

"என்னங்க முதலியார்வாள்? வாங்க உங்களைத்தான் செட்டி

யார்! எல்லாம் உங்கள் பொறுப்புதான் கலியாணத்தைச் சொட்டு சொல்லாமல் நடத்தித் தரவேண்டிய பொறுப்பு உங்களைச் சார்ந்தது. ஒரே பெண்ணு பாருங்க. ஊரு உலகம் சொல்ருப்போலே கண்ணுக்கு குளிர்ச்சியாக செய்யணும். இன்னும் மூன்று நாள்தான் இருக்கு. இன்றைக்கே வேலையைத் தொடங்கி விட்டால்தான் சுலபமாக இருக்கும்.''

இப்படி ஞானசம்பந்தர் நடக்கப் போகும் திருமணத்தின் விருந்து வைபவத்துக்கும் கச்சேரி கேளிக்கைகளுக்கும் திட்டம் தீட்டிக்கொண்டிருந்த வேளையில் சுசீலாவின் மனம் இந்தத் திருமணத்தை எப்படித் தடைப்படுத்

துவது என்ற யோசனையில் ஈடு பட்டுக்கொண்டிருந்தது.

திருமணச் செய்தி காதில் விழுந்த நாளிலிருந்து அவளது உள்ளக் குமுறல் அதிகரித்து வந்தது. நாட்கள் நெருங்க நெருங்க பித்துப் பிடித்தவள் போல் காணப்பட்டாள், உடம் பெல்லாம் வெளுமைத் தட்டியது. திக்பிரமையால் பீடிக்கப்பட்டு கண்ணீர் சிந்திய முகத்துடன் என்ன செய்வதென்று அறியா மல் ஏங்கிக்கொண்டிருந்தது அவ ளது நிர்மலமான உள்ளம்.

தாயின் குணத்தையும் தகப்ப னுடைய நடத்தையையும் அனுப வத்தில் கண்டுவந்த சுசீலாவுக்கு இந்தத் திருமணத்தைப் பற்றி நேரில் கூறி தடுக்க மனம் இல்லை. யாரும் அறியாது காய்த்துக் கனிந்த அந்தக் காதல் நினைவுக ளும், அவள் அன்புக்குப் பாத்திர மாகிவிட்ட சேகரின் புன்முறுவல் பூத்த முகமும் அவளது உள்ளத் தில் இடையிடையே மின்னிக் கொண்டிருந்தது. அவசரக் கோலத்தை அள்ளித் தெளித்தது போல உணர்ச்சிக்கு இடங் கொடாது கட்டிக் காத்துவரும் அந்த இளங் காதலர்களின் வாழ்க்கை—எதிர்காலத்தில் எப் படியெல்லாம் இருக்கவேண்டு மென்று திட்டமிட்ட அந்த நாளை எதிர்நோக்கியிருந்த அவர் களுக்கு இந்தத் திருமணம் ஓர் தடைக்கல்லாக வந்து அமைந் தது. 'எண்ணித் துணிக' என்ற ஏற்பாட்டில்ஈடுபட்டிருந்த அவளை துள்ளிக் குதிக்கத் தூண்டியது அந்தத் திருமணக் கடிதம்.

தகப்பனின் உருட்டு விழியும், மிரட்டும் பார்வையும், காய்ப்பே றிப்போன கைகளின் அடிகளை யும் கண்டும் கேட்டும் அனுப வித்தும் வந்துள்ள சுசீலாவுக்குத் தன் எண்ணத்தை எடுத்துக்கூற தைரியம் பிறக்கவில்லை. அதை விட தன் தாயிடம் கூறி ஏதாவது பலன்காணலாமென்று ஓர் ஆசை தட்டியது. "சே! சே! ஐயோ பாவம். நமக்காக நம் தாய் தொல்லையைத் தாங்குவதா? கூடாது. அந்தத் தொல்லை நம் மொடு தொலையட்டும். நம்மால் பிறருக்குத் துன்பம் வேண்டாம். அப்படி நம்முடைய அந்தரங்க எண்ணத்தை வெளியிடுவதால் மேலும் நம்முடைய சுதந்திர நட மாட்டத்திற்கு கட்டுக்காவல் ஏற் பட்டு.... ....தொல்லைகள் மேலும் தொடர்ந்தால் என்ன செய்வது? வேண்டாம். இந்த எண்ணத்தை யாரிடத்திலும் கூறக்கூடாது. நாமே ஒரு முடிவுக்கு வருவதே மேல்'' என்று பலவாறு எண் ணியபடி மேஜையை நோக்கி நடந்தாள். நீண்டநேர யோச னைக்குப் பிறகு அவளது சிந்தனை யில் ஏதோ தோன்றியதை எழுதத் தொடங்கினாள்.

20-5-54

எனது அன்பு கனிந்த முத்தங்கள்!

[. கடிதத்தைக் கண்டதும் ஆசை யும், ஆர்வமும் படித்ததும் திகி லும் ஏற்படும் என்பதை அறி வேன்; இவற்றிற்கெல்லாம் காரணமாக அமைந்த 'அந்தத் திருமணக் கடிதத்தை' இதனு டன் அனுப்பியுள்ளேன்; விஷ யத்தைப் படித்தறிந்ததும் உங் கள் மனம் என்ன பாடு பட்டிருக் கும் என்பதை நான் அறிவேன். எனக்கு திருமணம்என்றசெய்தி கேட்டவுடன் உங்கள் உள்ளம் அனலிடைப்பட்ட புழுவாகி இருக் கும். அன்பரே! இந்தத் திரும

ணம் என்னுடைய சம்மதம் பெற்றதல்ல. என்னைக் கேட்டு முடிவு செய்யப் பட்டதுமல்ல. 'நாம் இருவர்' சேர்ந்து கட்டி வரும் இன்பக் கோட்டையைத் தகர்க்கப் பயன்படுத்தும் 'டைனமிட்' இந்தத் திருமணம். இந்தத் திட்டம் கோட்டையின் வெளிப்புறச் சுவற்றைத் தீண்டலாம், ஆனால் இலட்சிய பூமியை அணுக முடியாது. காலையில் இந்தச் செய்தியைக் கேட்டவுடன் ஏதேதோ எண்ணினேன். இந்தக் கட்டுப்பாட்டிலிருந்து நீங்க தற்கொலை செய்துகொள்ளலாமென்று கூட என்னுடைய பேதை மனம் தூண்டியது. அந்த எண்ணத்தை உங்கள் நினைவுதான் மாற்றி காப்பாற்றியுள்ளது.

திருமணத்திற்கு இன்னும் மூன்று நாட்கள்தான் உள்ளன. இதற்குள் நாமொரு திட்டம் தீட்ட வேண்டும், அதற்கொரு முடிவு காணவேண்டும். இனி நான் இங்கிருக்கும் ஒவ்வொரு கணமும் ஆபத்து நிறைந்தது, ஆகவே நான் நாளை காலை வண்டியில் அங்கு வருகிறேன். என்னை நிலையத்தில் அவசியம் சந்திக்கவும், மற்றவை நேரில்,

அன்புள்ள,
சுசீலா.

கடிதத்தைத் தபாலில் சேர்த்துவிட்டு வந்து அமர்ந்த சுசீலாவின் எண்ணம் ஆயிரம் குதிரை வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தது. நாளை பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை ஒரு கணம் எண்ணிப் பார்த்தாள். அதே நேரத்தில் தன்னை மணக்க நினைத்துள்ள ஜெய வீரனின் நினைவும் தாக்கத் தொடங்கின. "பாவம். இப்படியும் ஒரு அப்பாவி இருப்பாரா? மணக்கப் போகும் பெண்ணின் மனநிலையை — உள்ளக்கிடக்கையைக் கூட அறிய முயற்சிக்காத ஒரு மனிதனும் நாட்டில் உள்ளாரே, அவர் என்ன செய்வார், சமுதாயம் அந்த நிலைக்கு அவரைக் கொண்டு வந்துள்ளது. நாளை நான் இங்கு இல்லை என்ற செய்தி கேள்விப்பட்டால்—அதைவிட அதற்கு மறுநாள் திருமணத்தன்று மணமகள் இல்லை என்ற சொல் அவரது இதயத்தைக் குடைந்து அதனால் அடைந்த வேதனையால் தற்கொலைக்குக் கூட ஆளாக நேரலாம் அல்லவா? அவரது நிலையை நாம் எப்படி நிர்ணயிக்க முடியும். இருந்தாலும் நம்மைத்தான் துரோகியென்று அவரது வாய் தூற்றும். உண்மை நிலையை எடுத்து அவருக்கு கூறிவிடுவதால் இந்த அவமானத்திலிருந்து அவரையும், அதே நேரத்தில் நம்மையும் நீக்கிக்கொள்ளுவோம். ஆம். அதுதான் சரியான வழி. அவருக்கே நம் நிலையை எடுத்து விளக்கி விடுவதுதான் நல்லது.

மறுநாள் திருமணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்த ஜெயவீரன் 'சார் தபால்' என்ற சப்தம் கேட்டு வெளியே வந்தான், கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான். சுசீலாவின் கையெழுத்திடப்பட்ட அந்தக் கடிதத்தைப் படிக்க அவனது மனம் மேலும் தாவியது. ஏட்டினில் கண்கள் பாய இதயத்தால் படிக்கத் தொடங்கினான்.

நண்பர் ஜெய வீரரே!

கடிதத்தைக் கண்டதும் ஆச்சரியத்தால் தாக்கப்படுவீர்கள் என்னடா இது நாளைக் காலை நம்மை மணக்கப் போகும் சுசீலா

கடிதம் எழுதுவதா! முன்பின் அறியாத அவள் என்னதான் கூற இருக்கிறது என்ற எண்ணம் உங்களுக்கு உதிக்கும். நீங்கள் எண்ணுவது போலத்தான் நானும் எண்ணினேன் நண்பரே. ஓர் ஆண் மகன் முன்பின் அறியாத ஒரு பெண்ணை மணமுடிக்க இசைவதா என்றெல்லாம். திருமணம் சிலர் கூடி செய்யும் முடிவு அல்ல. அது ஒரு தொடர் கதை—சில அத்தியாயங்களில் முடியக் கூடியதும் அல்ல. தொடரக் கூடியது. மனமொத்த இரு உள்ளங்களின் கூட்டுச் சக்தியே திருமணம். அந்தக் கூட்டு சக்தி ஆசைக்கும் உணர்ச்சிக்கும் கட்டுப்பட்டதல்ல. அலங்காரப் பொருள்களாலோ ஆடம்பர நிகழ்ச்சிகளாலோ வரையறுத்து விட முடியாது. காதலர் இருவரின் கருத்து ஒருமித்து ஆதரவு பட்டதோடு ஒருவரை ஒருவர் அறிந்து உள்ள உறுதி பெற்ற பின்பே அந்தக் கூட்டு சக்தி வெற்றி பெறும் அப்படி அமையும் வாழ்க்கையில்தான் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் வளர்ச்சிக்கு இடமும் இருக்கும், இன்ப வாழ்வு அமையும். இல்லையேல் மண வாழ்க்கை கொலைக் களப் பூமியாகத்தான் விளங்கும். அங்கே அமைதி இருக்காது ஆதிக்கம் தாண்டவமாடும் ஒருவரை ஒருவர் வைரியாகத்தான் கருதுவர். இப்படி எவ்வளவோ எழுதிக் கொண்டு போகலாம் நேரமில்லை. நண்பரே! பெண் மனம் என்ன எண்ணுகிறது என்பதைக் கூட அறியாமல் இந்த விஷயத்தில் நீர் தலையிட்டது பற்றிக்கூட ஆச்சரியப்படவில்லை நான். ஏனென்றால் இன்றை சமூக வளர்ச்சி உங்களை இவ்வாறு அமைத்து விட்டது. அது உங்கள் குற்றமல்ல; வழிவழி வந்த வாழ்க்கை. அதை இனியாவது தங்கள் போன்றவர்கள் முயற்சித்தால் மாற்றி அமைக்க முடியும். அதிகம் கூறுவானேன் நண்பரே, இந்தத் திருமணம் என் சம்மதம் பெறாதது என்னுடைய இலட்சியத்துக்கு புறம்பானது. நான் ஏற்கனவே ஒருவரை தேர்ந்தெடுத்து விட்டேன். அந்த இலட்சிய பூமியை அழகிய பூஞ்சோலையாக்கும் முயற்சியில் நாங்கள் ஈடுபட்டிருக்கும் வேளையில் இந்தத் திருமணக் கடிதம் எனக்கு அதிர்ச்சியை ஊட்டியது. ஆழ்ந்து யோசித்து ஆவனசெய்ய முயன்றுக் கொண்டிருக்கும் எங்களை அவசரப்படத் தூண்டி விட்டது அந்தக் கடிதம். பூஞ்சோலை அமைத்துக் கொண்டிருந்த இடத்தில் பூநாகம் தலை காட்டியது போல் இருக்கிறது அந்தத் திருமண ஏற்பாடு. அதிகம் வளர்த்த ஆசைப்படவில்லை. என்னைப்பற்றிய எண்ணத்தை இனியாகிலும் விட்டுவிடுங்கள். உள்ளம் ஒத்த திருமணத்துக்கு முயற்சி செய்யுங்கள்.

இந்தக் கடிதத்தைத் தாங்கள் படித்துக் கொண்டிருக்கும் இதே வேளையில் நான் என் காதலரிடம் சென்றிப்பேன். அது எங்கே என்று கேட்கின்றீர்களா? அது யாருக்கும் தெரியாதது. ஒன்று மட்டும் நிச்சயம் செய்து கொள்ளுங்கள், என்னுடைய இந்த முயற்சியால் தாங்கள் ஒரு பெரும் பழியில் இருந்து மீண்டு விட்டீர்கள். இல்லையேல் உலகம் தங்களைத் தூற்றக் கூடிய கொலை ஒன்று நடந்திருக்

கும் ஆகவே திருமண வீட்டில் என்னை எதிர்பார்த்து ஏமார்ந்து திரும்பாதீர்கள். உங்கள் இருப்பிடத்திலிருந்தே உறுதி படுத்திக் கொள்ளுங்கள்.

தங்களைப் பழியிலிருந்துக் காத்த,

சுசீலா.

ஜெயவீரன் கடிதத்தை படித்து முடித்துவிட்டு நீண்டதொரு பெரு மூச்சு விட்டான். அவனது உள்ளம் என்னவெல்லாமோ எண்ணியதை முகக் குறி காட்டிக் கொண்டிருந்தது. "அந்தக் கடிதத்தில் குறித்திருந்தவை அனைத்தும் உண்மைதான்" என்ற வாசகம் மட்டும் அவன் வாயிலிருந்து வந்தது. அவன் கண்கள் 'கேலண்டரை' நோக்கின. நாளை தான் கல்யாணம். கைகடியாரத்தைப் பார்த்தான் மணி பத்தரையாகிக் கொண்டிருந்தது, கால்கள் அவனையறியாமல் தபால் நிலையத்தை நோக்கி வேகமாக நடந்துக் கொண்டிருந்தன.

வீட்டின் முகப்பை அலங்கரிக்கும் பந்தல் வேலைகள் தீவிரமாக நடந்துக் கொண்டிருந்தது. ஞான சம்பந்தர் அந்த வேலைகளை மேற்பார்வை செய்துக் கொண்டிருந்தார். "சார் தந்தி" என்ற குரலைக் கேட்டு வாயற்படிக்கு வந்து தந்தியை படிக்கத் தொடங்கினார். ஜெயவீரன் என்ற கையெழுத்துடன் இருந்த வாசகங்களை மனதுக்குள்ளாகப்படித்துக் கொண்டார்.

மீளாப் பழியிலிருந்து என்னைக் காத்த சுசீலாவுக்கு என் நன்றி. சுசீலாவுக்கும் அவளது காதலருக்கும் அன்பு கலந்த வாழ்த்து. சுசீலாவின் கடிதத்தால் சகலமும் அறிந்தேன். திருமண ஏற்பாட்டை நிறுத்தி விடவும்,

ஜெயவீரன்.

ஞானசம்பந்தருக்கு தலை சுற்றியது, இது என்ன புதிய குழப்பம் என்று வாய் முணுமுணுத்துக்கொண்டே வீட்டிற்குள் ஓடினார். "சுசீலா எங்கே! காணோமே கொஞ்ச நேரத்துக்கு முன்பு இருந்தாளே" என்று கூறிக் கொண்டு சொர்ணம்மாள் எதிர் நோக்கி ஓடிவந்தாள், எல்லோரும் மாடியைநோக்கி ஓடினார்கள், அங்கே மேஜைக்குள் ஒரு கடிதம் இருந்தது. அந்தக்கடிதத்தில்—

சுப்பு :—டேய் குப்பு! உனக்கு எங்கடா வேலை?

குப்பு :—எமலோகத்திலே!

சுப்பு :—என்ன!

குப்பு :—ஆமாடா! "எமலோகம்" என்ற பத்திரிகை ஆபீசிலே.

அன்புள்ள பெற்றோர்களே!

நன்றி. உங்கள் ஏற்பாடுகள் தடைபட்டதற்கு வருந்தியிருப்பீர்கள். நான் மட்டும் மகிழ்ச்சி அடைகிறேன். ஜெயவீரரும் இந்நேரம் விஷயமறிந்திருப்பார். என்னுடைய உணவு, உடை, படிப்பு வகைகளில் என் மனதறிந்து நடந்துக் கொண்ட தாங்கள் திருமண விஷயத்தில் மட்டும் அந்த எண்ணம் கொள்ளாததின் காரணம் என்னவோ? விருப்பாத இரு உள்ளங்களை ஒன்றுப் பிணைத்து அதற்கு திருமணம் என்ற பெயர் சூட்டி வாழ்க்கையை நடத்துவதாக எண்ணி எக்காளம் போட்டிருப்பீர்கள். அந்த வாழ்க்கை போர்க்களமாகத்தான் இருந்திருக்கும். என்னுடைய நிலையை நானே ஏன் எடுத்து கூறி இருக்கக் கூடாது என்று நீங்கள் கேட்கலாம். அப்படிக் கூறி இருந்தால் என்னை என்ன பாடு படுத்தி இருப்பீர்கள் என்பதை எண்ணியே நான் இந்த நடவடிக்கையில் இறங்கி விட்டேன். என்னை ஓடிப் போனவள் என்று ஊர் தூற்றும். அந்த மீளாப் பழியை குடும்பத்துக்கு ஏற்படுத்தி விட்டேன் என்று உங்களில் பலர் எண்ணலாம். ஊர் எதற்குத்தான் குறை சொல்லவில்லை. உங்கள் இஷ்டபடி நீங்கள் குறித்தவரையே ஏற்றுக் கொண்டு பிறகு ஓடி வந்துவிட்டாலும் அந்த பழி மட்டும் உங்களை விட்டு மறைந்து விடுமா? அதைவிட இந்தஏற்பாடு எவ்வளவோ சிறந்தது என்பதை நல்லறிவாளர்கள் நன்கு உணர்வார்கள். திருமணத்தின் பேச்சை நீங்கள் எடுக்காமல் இருந்தால் எனக்குகந்த கணவரை நானே தேர்ந்தெடுத்து உங்களிடம் கூறியே அந்தத் திருமணத்தை முடித்திருப்பேன். அதற்கேற்பட்ட களங்கம் உங்களால் விளைந்ததே. அது என்னுடைய குற்றமல்ல; நான் இப்பொழுது எனது காதலருடன்தான் இருக்கிறேன். ஆச்சரியப்படாதீர்கள்! அவர் எங்குள்ளார் என்று கேட்காதீர்கள். எங்கள் வாழ்க்கையைப்பற்றிய நிகழ்ச்சிகளை உங்களுக்குஎழுதிக் கொண்டிருப்பேன். அந்நேரத்தில் நாங்கள் துவண்டு போனல் தூக்கி விடுங்கள். ஆனல் எங்கள் நல்வாழ்வுக்கு மட்டும் முட்டுக் கட்டையாக நிற்காதீர்கள்.

சுசீலா.

ஜீவனற்று விளங்கியத் திருமண வீட்டைக் கண்ட எல்லாரும் ஆச்சரியத்தால் தாக்குண்டனர்.*

> உண்மையை மறைத்து புதைத்து வைத்தாலும் அது வளரத்தான் செய்யும். அது மட்டுமல்ல, என்றேனும் ஒரு நாள் அது பூமியை வெடித்துக் கொண்டு வெளிவரும் போது அதன் அழிவுச்சக்தி, வழியில் காணும் எதனையும் தூள் தூளாக்கிவிடும்.
>
> —எமிலிஜோலா
>
> உலகத்தில் இரண்டு சோக சம்பவங்கள் இருக்கின்றன, ஒன்று நம் உள்ளம் எதை நாடுகிறதோ அதைப்பெற முடியாமற் போவது! மற்றென்று அதைப் பெற்று விடுவது.
>
> —பெர்னட்ஷா

விநோத மண முறைகள்

எஸ்.என்.கே.ராஜன்

மறவர்:

கிழக்கு மலைத் தொடர்வாசிகளான மறவர்கள் தங்களிடம் மணச் சடங்கை நடத்தப் போதுமான பணம் இல்லாவிட்டால் மணச் சடங்குகளையும், விருந்து கேளிக்கைகளையும் நிறுத்திவிட்டு வெறும் தாலியை மட்டும் கட்டி மணமக்கள் வாழ்க்கை நடத்த ஆரம்பிப்பர், விட்டுப்போன மணச் சடங்குகளும், விருந்தும் பிறகு எப்பொழுதாவது சௌகரியப்பட்டபோது நடத்தப்படும். மூன்று அல்லது நான்கு குழந்தைகளைப் பெற்றபிறகுகூட அவற்றை நடத்துவார்கள். ஆனால் மணச் சடங்கு நடத்தப்படா முன்பு கணவன் இறந்தால் உறவினர்கள் எப்படியாவது பணம் திரட்டி, கணவனின் சவத்தை மனைவிக்கருகில் வைத்து மணச் சடங்கை முடித்துவிடுவர். மறுநாள் மனைவியின் கழுத்திலிருக்கும் தாலி அறுக்கப்படும். விதவையானவள் மீண்டும் வேறொருவனை மணந்துக் கொள்ளலாம்.

கைக்கோளர்:

சேலம் ஜில்லாவைச் சேர்ந்த கைக்கோளர்களான நெசவுத் தொழிலாளர்களிடையே ஒரு குடும்பத்துக்கு ஒரு பெண், தன் ஜாதியிலிருந்துக் கொண்டே தாசியாக (தேவர் அடியாளாக) இருப்பாள். அவ்வாறு இருக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்ணைக் கோவிலுக்கு அழைத்துச் சென்று, மணப்பீடத்தில் அமர்த்தி அவளுக்கெதிரில் ஒரு வாளையும், அதற்கடியில் ஒரு தாலியை (பொட்டு)யும் வைப்பர். மணச் சடங்கு முடிந்த பின் அங்கே வந்திருக்கும் ஒருவள் அப்பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டுவாள். அதன்பிறகு அவள் வீட்டிற்குச் சென்று தனக்குப் பிரியமுள்ளவருடன் கூடி வாழ்வாள். குடும்பச் சொத்தில் அவளுக்குப் பங்கு உண்டு.

கைக்கோளர்:

கோயமுத்தூரைச் சேர்ந்த வாத்தியார்களாகிய கைக்கோளர்களிடையே ஒரு குடும்பத்தில் மூத்த பெண் கோவிலுக்குப் பணிசெய்ய விடப்படுவாள். அவள் இசையிலும் நாட்டியத்திலும் பயிற்சிப் பெற்று திருவிழாக் காலங்களில் இசைபாடி நாட்டியமாடுவாள். தாலி (பொட்டு) கட்டும் நாளன்று அவளை ஆபரணங்களாலும், புத்தாடைகளாலும் அலங்கரித்து ஆலயத்திற்கு அழைத்துச் செல்வர். அங்கே விக்கிரகத்தை அலங்கரிக்கப் புதுத்துணி, பொட்டு

(வட்டமான பொன் பில்லையில் கருமணிகள் பதிக்கப்பட்டிருக்கும், அக் கருமணிகள் அவளுக்கு அதிர்ஷ்டத்தைக் கொடுக்குமாம்) மற்றும் பூஜைக்கு வேண்டிய பொருள்களையும் சேகரித்து வைத்திருப்பர். பெண்ணை விக்கிரகத்திற்கருகில் உட்கார வைத்து, கோவில் பூசாரி (பிராமணன்) அவளுக்குச் சந்தனம், பூ முதலியவற்றைக் கொடுத்து தாலியை அவள் கழுத்தில் கட்டுவார். பிறகு அப்பெண் கோவிலுக்குச் சொந்தமாகிவிடுவாள். அவள் தனக்கு விருப்பமானவரைக் கூடி வாழலாம்.

கைக்கோளரில் ஒரு பிரிவு:

கைக்கோளர்களிடையே கோவிலுக்குத் தாலி கட்டியவளைத் தவிர மற்றப் பெண்களுக்கு உலக வழக்கப்படி மணமாகும். அவர்களில் "சிறு தாலி கட்டும் மணம்" வழக்கிலுண்டு. அதாவது அவர்களில் ஒருவன் தன் மாமன் அல்லது அத்தை மகளை மணக்க விரும்பினால் தன்னுடைய பெற்றோர், ஜாதித் தலைவன் இவர்களின் சம்மதம் பெற்று அதிகமான மணச் சடங்குகள் இல்லாமல் ஒரு சிறு தாலியையோ அல்லது பெண்ணின் புடவையிலிருந்து கிழிக்கப்பட்ட நீளமான துண்டுத் துணியையோ பெண்ணின் கழுத்தில் கட்டுவான். ஆனால் பின்னர் அப்பெண் அவனைவிட்டு நீங்கினால் அவளை மீண்டும் அடைய அவனுக்கு உரிமை இல்லை. அவளுக்குச் சம்மதம் இருந்தால் தன் கணவனுடன் ஒற்றுமையாக வாழ்வாள்.

ஜக்குலா:

கிருஷ்ணா ஜில்லாவில் ஜக்குலா (Jakkula) என்னும் தெலுங்கரிடையே ஒரு குடும்பத்தில் ஒரு பெண்ணை (அநேகமாக மூத்தவளை)த் தாசியாக்கும் வழக்கம் உண்டு. பருவமடைந்த அந்தப் பெண்ணுடன் முதலில் எவனொருவன் கூடுகிறானோ அல்லது எவன் அதிகப் பொருளைக் கொடுக்கிறானோ அவனைக் கொண்டு கோவிலிலே மணச்சடங்கை முடித்து, அதன்பின் அவளைத் தாசியாக்குவர்.

எடப்பிரபு:

நாயர் ஜாதியில் எடப்பிரபு (Edaprabhu) என்ற பிரிவினரில் தேவதாசி முறைக்கு ஒத்ததான "தாலிகட்டுக் கலியாணம்" என்ற மணமுறை வழக்கிலுண்டு. ஒரு க்ஷத்திரிய வாலிபன் குறிப்பிட்ட முகூர்த்த நாளன்று வரவழைக்கப்படுவான். ஜாதியார்களும் நண்பர்களும் சூழ்ந்திருக்க, தேவதாசி முறைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பெண்ணின் கழுத்தில் ஒரு தாலியைக் கட்டிவிட்டு, அதற்கெனக் கொடுக்கப்படும் கட்டணம், பரிசு முதலியவற்றைப் பெற்றுக் கொண்டு அவ்வாலிபன் போய்விடுவான். ஆனால் அவ்வாலிபன் அப்பெண்ணிற்குக் கணவனாக மாட்டான். அப்பெண் மற்ற எவரையாவது கூடி வாழ்வாள்.

கள்ளர்:

மேற்கு மலைத்தொடர்ச்சியில் வாழும் கள்ளர் ஜாதியிலே ஒருத்தி இரண்டு, நான்கு அல்லது ஆறு கணவரை மணப்பாள். அவர்களில் யாராவது ஒருவருவனுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு அத்தனைபேரும் தந்தை ஸ்தானத்தைப் பெறுவர்.

(தொடரும்)

குற்றவாளி!

கோவை. க. இரத்தினம்

"கனம் நீதிபதி அவர்களே! இதோ கைதிக் கூண்டில் இருக்கும் கைதி,....ஹென்றி கோமெலடஸ் மிகப்பெரிய குற்றங்கள் பல புரிந்திருக்கிறான். கவுரவம் மிக்க பல குடும்பங்கள் இவனால் வாடி வழியற்றுத் தவிக்கின்றன; கண்ணியம் மிக்கவர்கள் என்று கூறப்படும் பலர் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர். நமது நாட்டில் என்னைப் போன்ற திறமை மிக்க எத்தனையோ எண்ணற்ற வழக்கறிஞர்கள் வேலையின்றித் தவிக்க இவனது — இக்கைதியின்—செயல்கள் காரணமாயின. ....'' இவ்வாறு பேசிக்கொண்டே வந்த அந்த வழக்கறிஞன், இவ்விடத்தில் சற்று நிறுத்தி, வழக்கு மன்றத்தில் கூடியுள்ள பெருந்திரளான மக்கள் கூட்டத்தை ஒரு முறை நோக்கினான். அனைவரது கண்களும் தன்னையே நோக்கிக் கொண்டிருப்பதைக் கண்டான். மக்களது உள்ளத்தில் கொதித்துக்கொண்டிருந்த கோபக்கனல், அவர்கள் முகத்தில் நன்கு ஒளி விட்டுத் தெரிவதையும் அந்த வழக்கறிஞன் கவனிக்காமலில்லை.

அவன் மேலும் தொடர்ந்தான்:-

''நீதிபதியவர்களே! குற்றவாளிக் கூண்டிலே கொஞ்சமும் அச்சமின்றி, சிரித்த முகத்துடன் சிங்காரப் புருஷன் போல நின்றிருக்கிறானே இவன்—இந்தக் கைதி—ஹென்றி கோமெலடஸ் என்பவன்—யார் என்பதை உங்களுக்குச் சற்று விளக்க விரும்புகிறேன். இவனைப் பற்றி நீங்கள் அறியாமலிருக்க முடியாது; நிச்சயம் தெரிந்திருப்பீர்கள். ஆம்! ஏனெனில் இவனது புகழ் நமது தாயகம் முழுவதும்— இத்தாலி நாடெங்கும் பரவியுள்ளது. இவனை அறியாதவர்கள் நமது நாட்டில் எங்கணுமே இல்லை என்று துணிந்து கூறலாம். அப்படிப்பட்ட இவனைப் பற்றி நான் உங்களுக்கு அறிமுகம் செய்கின்றேனென்றால் அது பூக்கடைக்கு விளம்பரம் தேடுவது போலத்தான் என்று எண்ணுகிறேன். என்றாலும் இவ்விடத்தில் எத்தகைய அறிமுகமானவராக இருந்தாலும் குற்றவாளிக் கூண்டில்

கைதியாக நிறுத்தப்பட்டால் அவரது பூர்வோத்திரத்தை நாம் மீண்டுமொருமுறை நமது நினைவுக்குக் கொண்டுவருவது அவசியமாகிறது. அத்தகைய முறையில் நான் இன்று இக்கைதியை தங்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டிய நிலையிலுள்ளேன்''

''இந்த ஹென்றிகோ மெலடஸ் நமது இத்தாலி நாட்டு தொழிலாளர்களின் தலைவன்: பாட்டாளிகளின் கூட்டாளி–தொழிலாளர்களின் தந்தையெனப் போற்றப்படுபவன். இவனது சீரிய முயற்சியால் — இடைவிடாத நற்பணியால் — தொழிலாளர்கள் மிக உன்னத நிலைக்கு உயர்வடைந்துவிட்டனர். அவர்களிடையே மலிந்துகிடந்த அநீதிகள் அகற்றப்பட்டு விட்டன. அடிதடி சண்டைகள் வெகுவாகக் குறைந்துவிட்டன. கண்ணியத்தையும் கட்டுப்பாட்டையும் கடைபிடிக்கத் தொடங்கி விட்டனர். ஒழுக்கத்தின் மேன்மைபற்றி, நீதியின் உயர்வுபற்றி பிறருக்கு உபதேசம் செய்யுமளவுக்கு முன்னேறிவிட்டனர். அந்த ஒன்றுமறியா உழைப்பாளிக் கூட்டத்தின் உயர்வுக்கு — அவர்களது நல்

வாழ்வுக்கு, குடி, கொலை, கொள்ளை முதலிய அநீதிச் செயல்களிலிருந்து அந்த உழைப்பாளர் வர்க்கம் விடுதலையடைந்ததற்கு இந்த ஹென்றி கோ மெலடஸே பொறுப்பாளியாவான். பெருமைப்படத்தக்க விஷயம் என்பீர்கள்; ஆனல், அதனல்— இவனது நல்ல செயல்களினுல் விளைந்துள்ள விபரீதத்தையும் சற்று எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன். இந்தக் கைதியின் இடையரு உழைப்பால் தீய செயல்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டது பாட்டாளி வர்க்கம். கொலையும் கொள்ளையும் பெருகி வந்த நமது இதாலியில் அன்பும் அறமும் அரசோச்சத் தொடங்கியது; கண்ணீரும் கம்பலையுமாக வாழ்ந்த மக்கள் கண்ணியம் மிக்க வாழ்வு நடத்தத் துவங்கி விட்டனர்; துன்ப வாழ்வு நடத்தித் துவண்டு போனவர்கள், இன்பபுரியின் உல்லாச யாத்திரையை மேற்கொண்டு விட்டனர். ஆகவே .... அவர்கள் கெட்ட பழக்க வழக்கத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டு, ''நல்லவர்களாக'' மாறி விட்டனர்''

மூச்சு விடுவதற்காக சற்று நிறுத்திய அந்த வழக்கறிஞன், ஒரு முறை சுற்றுமுற்றும் தன் பார்வையைச் செலுத்திவிட்டு விட்ட இடத்திலிருந்து மீண்டும் தனது வாதத்தைத் தொடர்ந்தான்;—

''இந்த ஹென்றி கோ மெலடஸ் மக்கள் அனைவரையும் நல்லவர்களாக மாற்றி விட்டான்; சண்டை சச்சரவுகள் என்ற பேச்சே எங்கும் இல்லை. ஆகவே....என் போன்ற வழக்கறிஞர்களுக்கு பிழைப்புக்கு வழியில்லை. நமது இத்தாலியில் வதியும் எண்ணற்ற வழக்கறிஞர் குடும்பங்கள் வாழ்க்கை நடத்த திண்டாடுகின்றன. அவர்களது ஆடம்பர வாழ்வு அஸ்தமித்து விடும் போல் இருக்கிறது. இந்த அவலநிலைக்குக் காரணம், இந்த ஹென்றி கோ மெலடஸ்தான் என்று நான் துணிந்து குற்றம் சாட்டுகிறேன். வழக்கறிஞர்களது ஆடம்பர வாழ்வுக்கு அஸ்தமன கீதம் இசைத்து, அவர்களது இன்ப வாழ்வில் துன்பச் சூருவளி உண்டாக்கி, வழக்கறிஞர்களை வம்புக்கிழுத்த குற்றத்துக்காக இந்த ஹென்றி கோ மெலடஸுக்கு மிகக் கடுமையான தண்டனை தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்''

வழக்கறிஞன் தனது ''திறமைமிக்க'' வாதத்தை முடித்துக் கொண்டான். இதுவரை அமைதியாக இருந்த வழக்கு மன்றத்தில் ''கச முச'' வென்று பேச்சுக் குரல் எழுந்தன. அந்த வழக்கறிஞனது திறமை மிக்க நீண்ட உரையைக் கேட்டு, மற்ற சக வழக்கறிஞர்கள் புன்னகை பூத்தனர். வழக்குமன்றத்தில் குழுமியிருந்த தொழிலாளர்களின் உள்ளத்தில் மட்டுமல்ல, அவர்களது கண்களிலும் கூட செந்தீ கொழுந்து விட்டெறிந்தது. ஆனல் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருந்த அந்த கைதி— ஹென்றி கோ மெலடஸ் மட்டும், புன்னகைப் பூத்த முகத்தினனய், வழக்கைப் பற்றியோ, அதன் முடிவைப் பற்றியோ சற்றும் எண்ணுதவனக நின்றுக் கொண்டிருந்தான். தொழிலாளர் கூட்

டம் அவனுக்காகக் காட்டும் பரிவை எண்ணும்போது அவன் மனம் இன்பத்தால் நிறைந்தது.

தங்கள் ஆர்வமனைத்தும் அணை போட்டு நிறுத்தி மக்கள் அனை வரும் வழக்கின் முடிவையறிய ஆவலுடன் நீதிபதியை நோக்கி னர். சிறிது நேர சிந்தனைக் குப் பின்பு நீதிபதி தமது தீர்ப்பை வாசிக்க ஆயத்தமானர், மக்கள் பார்வையனைத்தும் நீதி பதியின்பாற் சென்று பதிந்தன.

"நாட்டிலுள்ள தொழிலாளி வர்க்கத்தை நல் வழிப்படுத்தி, அநீதச் செயல்களிலிருந்து அவர் களைக் காப்பாற்றியது போற் றற் குரிய செயல்; என்ருலும் கூட, இதனல் எத்தனையோ எண்ணற்ற வழக்கறிஞர்கள் செல்வத்தில் செழித்திருந்த அவர் கள் குடும்பங்கள் இன்று சீர ழிந்து கிடக்கிறது. அத்துட னில்லாது ஹென்றி கோ மெலட ஸின் இந்தச் செயலானது என் னைப் போன்ற நீதிபதிகளின் உத் தியோகத்துக்கும், நல்வாழ்வுக் கும் கூட, குந்தக மேற்படும்படி யான செயலாக நான் இதைக் கருதுகிறேன். ஆகவே இக் கைதி "குற்றவாளி" எனத் தீர் மானித்து, ஹென்றி கோ மெலட ஸுக்கு ஆறுமாத கடுங்காவல் தண்டனை விதிக்கிறேன்"

நீதிபதி தமது தீர்ப்பை வாசித்து முடித்தார். அதுவரை அமைதியாக இருந்த வழக்கு மன்றத்தில், மீண்டும் பல வாருன பேச்சுக் குரல்கள் எழுந் தன. மக்களுடைய உள்ளத்தில் புகைந்துகொண்டிருக்கும் புகைச் சல், பெரு நெருப்பாக உரு வெடுத்து விடுமோ என்ற அச் சத்தால், நீட்டிய துப்பாக்கிகளு டன் போலீசார் மிகக் கவனமாக நின்றனர்.

தண்டனை கேட்டு ஹென்றி கோ மெலடஸ் துடித்துத் துவண்டு விடவில்லை, என்றும் போல் அமைதி தவழும் முகத்தினனாய், புன்னகை குன்ருது தண்டனையை ஏற்றுக் கொண்டு, சோலீஸார் சூழ சிறை சென்ருன் அச் செம் மல்.

கைவண்ணமனைத்தும் காட்டி, கற்பனை மெருகிட்டு புதிதாக உண்டாக்கிய புளுகுப் புராண மல்ல நான், மேலே தீட்டிக்காட்டி யிருப்பது. 17-ம் நூற்ருண்டில் இதாலி நாட்டின் வழக்கு மன்றம் ஒன்றில் நடந்த விசித்திர வழக் கையும், வேதனைதரும் தீர்ப்பை யும் தான் மேலே காட்டியுள் ளேன்.

மக்களைத் திருத்திவிட்டார் கள்; அறிவுள்ளவர்களாக, எதை யும் ஆழ்ந்து சிந்திக்கும் சிந்தனை யாளர்களாக அவர்களை மாற்றி விட்டார்கள். சுதந்திர ஆர்வ முள்ளவர்களாக—தனித் தாயகம் காணத் துடிக்கும் தன்மானச் சிங் கங்களாக புலிநிகர் மாந்தர்க ளாக, எதையும் தாங்கும் இதயம் கொண்ட நெஞ்சுரம் படைத்தவர் களாக, மொழிப்பற்றும் நாட்டுப் பற்றும் கொண்ட 'நல்லவர்களாக' மாற்றிவிட்டார்கள் என்ற கார ணத்துக்காக, இல்லாத பழிகள் சுமத்தி அறிவியக்கத் தோழர் கள் மீது அநீதியாக வழக்குத் தொடுத்து அக்கிரமமாகத் தண் டனை யளித்து பொதுநல வாதி களைச் சிறையில் அடைக்கும் வேதனை நிகழ்ச்சிகள் அங்கு மட்டுமல்ல; நமதருமைத் திருநாட் டில் இந்த 20-ம் நூற்ருண்டிலும் நடைபெற்று வருகிறது. *

நமது மருத்துவர்

G. வெங்கடப்பா M. B. B. S. (Ex) I. A. M. C.

விஞ: பொன்னி மருத்துவரே, எனக்கு வயது 22. எனக்கு மாதம் இருமுறை ஒருபக்கம் தலைவலி வருகிறது. கண் சிவந்து விடுகிறது. ஊதுவத்தி போன்ற வாசனைப் பட்டால் தலைவலி ஆரம் பிக்கிறது. இதற்கு என்ன செய்யவேண்டும்?

—சையத் கௌஸ்மைதீன், பெருந்துறை.

விடை: நீங்கள் மலச்சிக்கலை நீக்கிக்கொள்ள வேண்டும்.

1. வில்வ பழச் சதையை அரைத்து வாரம் 2 முறை தலைக்கு பத்து போட்டு இள வெந்நீரில் குளிக்கவேண்டும்.

2 காலி கார்ப்பு 6X (Kalicarb-6x) என்னும் மருந்தை ½ மணி நேரத்திற்கு ஒருமுறை 3 சொட்டுகள் நாக்கின்மேல் விடவும், வலி இல்லாதபோது தினம் ஒரு முறை போதும், அல்லது சல்பர் 6X (Sulphor—6x) என்னும் மருந்தை 4 மணிக்கு ஒருமுறை நாக்கின்மேல் 3 சொட்டுகள் விடவும் அல்லது சேங்குனேரியா 6X (Sanguinaria—6x) என்னும் மருந்தை முன்போலவே உபயோகிக்கவும்

விஞ: ஐயா, எனக்கு வாரம் இருமுறை இரவில் இந்திரியம் வெளியாகிறது. மனம் கவலை கொள்கிறது. உடல் உருகுகிறது. தலையில் மயிர் உதிர்ந்து விடுகிறது. இவைகளுக்குச் சிகிச்சை கூறுங்கள்?

—சி. குணசேகரன், பெங்களூர்.

விடை: தயவு செய்து கவலைக்கு இடம் கொடுக்கவேண்டாம். உடலில் அதிக அளவு இந்த சத்து உற்பத்தியாவதால் இப்படி ஏற்படு கிறது. 15-5-54ல் நமது பொன்னியில் வெளியான மருத்துவப் பகு தியைப் பார்க்கவும். தலையில் முடிவிழுவதை நிறுத்த தைராய்ட், (Thyroid—gr ½) என்னும் மாத்திரைகளை வாங்கி தினம் காலையில் 1 மாத்திரை சாப்பிடவும்.

விஞ: என் தமக்கையின் 6, 2½ வயது குழந்தைகளுக்கு ½ அடி நீளமுள்ள பாம்பு போன்ற நாக்கு பூச்சி மலம் கழிக்கும் போது வருகின்றன. மருந்து பல கொடுத்தும் குணமில்லை. பூச்சிவர காரணம் என்ன? உங்கள் சிகிச்சை தேவை. —எழில்வேலன், கல்லாவி.

விடை: இப் பூச்சிகளைக் கொல்லும் மருந்து சேன்டோனின் gr 1. (Santonin—gr 1.) கேலோமல் gr 1. (Calomel—gr 1.) இவ்விரண்டு மருந்து களையும் ஆங்கில மருந்துக் கடையில் கலந்து ஒரே பொட்டலமாக கொடுப்பார்கள். குழந்தைக்கு இரவு 10 மணிக்கு இந்த மருந்தை வாயிலிட்டு சற்று நீர் அல்லது பால் கொடுக்கவும். அன்று மாலை

6 மணிக்குமேல் கடினமான உணவு கொடுக்கக் கூடாது. பால் அல்லது காபி கொடுக்கவும். அடுத்த நாள் காலை மலத்தில் புழுக்கள் வந்துவிடும். இவ்விதம் 2 வாரத்திற்கு ஒரு முறையாக 3 முறை கொடுக்க வேண்டும். நாக்கு பூச்சி உள்ளவர்களின் மலத்தில் ஆயிரக் கணக்கான முட்டைகளிருக்கின்றன. அவைகளை ஈக்கள் கொண்டு வந்து நமது உணவில் சேர்த்துவிடுகிறது. அசுத்தமான தோட்டத்தில் வளரும் கீரை, காய்கறிகளின் மேல் ஒட்டியிருக்கும் முட்டைகள் நாம் சரியாக சுத்தம் செய்யாமல் உட்கொள்வதினாலும் நாக்கு பூச்சி பரவும்.

வினா: மருத்துவரே, பல்ஈறு குறைந்துகொண்டே வருகிறது. இது ஏன் ஏற்படுகிறது? இதை நீக்க வழி என்ன? பற்கள் கறை பிடித்திருக்கின்றன. இதை எப்படி போக்குவது?

—துரைசாமி, கோயமுத்தூர்.

விடை: உங்களுக்கு இருக்கும் வியாதிக்கு பயோரியா என்று பெயர். சிறு வயது முதல் பற்களைச் சுத்தமாக வைத்திருக்காவிட்டால் இது வரும். பல் ஈறின்பேரில் காலையிலும் இரவிலும் பல் தேய்ப்பது போல் 5 நிமிடம் விரலால் தேய்க்கவும். (Gum Message). சோடாமாவு 1 பங்கும் (ரொட்டி சோடா), சாப்பிடும் உப்பு கால் பங்கும், ஓம சத்து கால் பங்கும், கட்டி கற்பூரம் கால்பங்கும் சேர்த்து அரைத்து வைத்துக் கொண்டு காலையிலும், இரவில் படுக்கைக்குப் போகும் முன்பும் பற்களை இந்தப் பல் பவுடரினால் விளக்கவேண்டும். உங்கள் பற்களை பல் டாக்டரிடம் காட்டி கறையை நீக்கிக்கொள்ளுங்கள்.

வினா: ஐயா, 2 வருடமாக நான் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதில்லை; இதனால் எனக்கு ஏதாவது தொந்தரவு வருமா? கண்களில் எரிச்சல் இருக்கிறது. எலுமிச்சம் பழத்தைத் தலைக்குத் தேய்த்துக் குளிக்கலாமா? உடலில் தேமல் படர்ந்திருக்கிறது. இதை நீக்க நான் என்ன செய்யவேண்டும்?

—அர. ஆளவந்தார், உடையார்பாளையம்.

விடை: எண்ணெய் தேய்த்துக் குளிப்பது ஒருவருடைய உடலையும், இருக்கும் ஊரின் குளிர், வெப்ப நிலையையும் பொருத்திருக்கிறது. எண்ணெய் தேய்த்துக்கொள்ளாதவர்கள் தயிர், பால், வெண்ணெய், நெய் போன்ற கொழுப்புப் பொருள்களை உட்கொள்ள வேண்டும். வாரம் ஒருமுறையாவது எண்ணெய் தேய்த்துக்கொண்டால் கண் எரிச்சல் நீங்கும். தேமல் வருவதற்குக் காரணம் ஒரு கிருமி. அதை நீக்க 1. குப்பைமேனி இலைச் சாற்றை தினந்தோறும் தேமல் மேல் தேய்த்து அரை மணிநேரம் கழித்து குளிர்ந்த தண்ணீரில் குளிக்க வேண்டும். 2. மருத்துவ விடுதியில் கிடைக்கும் விட்பீல்ட் (Whit Field) களிம்பைப் போட்டு நன்றாகத் தேய்க்க வேண்டும். அல்லது 3. மைகோசால் ஆயின்ட்மென்ட் (Mycosol Ointment) என்னும் மருந்தை வாங்கி தேமல் மேல் லேசாகத் தினந்தோறும் தேய்த்தால் 2 வாரத்தில் தேமல் மறையும்.

Edited, Printed & Published by Aru. Periyannan for Ponni Ltd., at Ponni Achakam, 111, Coral Merchant Street, Madras-1.

12 விருந்து வரிசையில் உலக இலக்கியங்கள் 12

மொழிபெயர்ப்பு :
பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை எம்.ஏ.,எல்.டி, (விஷாரத்)

1.	இந்துலேகா	....	மலையாள நாவல்
2.	மாமனூர் வீடு	....	ஆங்கில நாடகம்
3.	துன்பக்கேணி	....	ஜப்பானியக் கதை
4.	நூர்ஜஹான்	....	வங்காளி நாடகம்
5.	கைக்கடிகாரம்	....	ரஷ்யக் கதைகள்
6.	முத்துமாலை	....	சீனக்கதைகளும் நாடகமும்
7.	தாயகத்தின் அழைப்பு	....	ஆங்கில நாடகம்
8.	அறக்கோட்டம்	....	இந்தி நாவல்
9.	மாலதி—மாதவன்	....	சமஸ்கிருத நாடகம்
10	கடல்மறவர்	....	பிரஞ்சு நாவல்
11.	கல்மனிதன்	....	ஸ்வீடிஷ் கதைகள்
12.	ஆண்டிமடம்	....	ஆங்கில இசை நாடகம்

மேற்குறித்த 12 புத்தகங்களும் ரூ 6/—அனுப்பினல் தபாற் செலவின்றி அனுப்பப்படும். தனித்தனியே பெறுவதற்கு பிரதி 8 அணா—தபாற்செலவு 1 அணா.

பொன்னி லிமிடெட்

111, பவழக்காரத் தெரு : : சென்னை-1.

Grams: PILONK

Phone: 2424

PENMEN LIMITED

NO. 1-A ANDERSON STREET, MADRAS-1.

Sole Distributors to

THE PILOT PEN CO. (INDIA) LTD

For

* HYDERABAD,
* MYSORE,
* TRAVANCORE,
* COCHIN,
* COORG

STATES & SOUTH INDIA

BUY A BOTTLE TO-DAY